பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-118

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)


| மலர் : 17<br>Vol : 17 | இதழ் : 12<br>Issue : 12 | www.ncbhpublisher.in | மார்ச் 2025<br>March 2025 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |
|---|---|---|---|---|---|---|---|




## படித்துப் பாருங்களேன்

- ஆ.சிவசுப்பிரமணியன்

## சமூக அசைவியக்கங்கள் குறித்த விவாதம்

- இரா.காமராசு

## தமிழ்நாட்டு ஓவியங்களின் ஆவணம்

- முனைவர் இரா. வெங்கடேசன்

## மார்க்சிய ஆய்வுலகில் நா.வானமாமலை

- முனைவர் சி. இளங்கோ

18.02.2025 அன்று விருதுநகர் மாவட்டம், சாத்தூர் எஸ்.ஆர்.என்.எம். கல்லூரியில் நடைபெற்ற விழாவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (பயிற்சி) ஆணையர் மரு. இரா.ஆனந்தகுமார், இ.ஆ.ப., அவர்கள் எழுதிய 'வடைப்பூ' என்ற நூலினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்ட நிகழ்வு.



07.02.2025 அன்று சென்னையில் 2023ஆம் ஆண்டிற்கான சிறந்த நூலாசிரியர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் பரிசு வழங்கப்பட்ட விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் எமது பதிப்பக நூலாசிரியர் திருப்பதிசாமி அவர்களுக்கும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் பொதுமேலாளர் சண்முகநாதன் அவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். இதில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவ்வை அருள், செயலாளர் வெ.ராஜாராமன் இ.ஆ.ப. ஆகியோர் கலந்துகொண்டனர்.








கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 17 இதழ் - 12 - மார்ச் 2025*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**



ஆசிரியர் குழு

*க.சந்தானம்*
*பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்*
*முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்*
*முனைவர் ந.முத்துமோகன்*
*முனைவர் மு.இராமசுவாமி*
*முனைவர் நா.இராமச்சந்திரன்*
*முனைவர் பா.ஆனந்தகுமார்*
*முனைவர் ஞா.ஸ்டீபன்*
*ப.கு.ராஜன்*
*முனைவர் இரா.அறவேந்தன்*
*முனைவர் இரா.காமராசு*
*முனைவர் உ.அலிபாவா*



இதழ் வடிவமைப்பு
***கா. குணசேகரன்***

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1. தமிழ் மண்: அன்றும் இன்றும்
ஆசிரியர் குழு ............ 04

2. படித்துப் பாருங்களேன்
ஆ.சிவசுப்பிரமணியன் ............ 06

3. முருகனைப் பாடிய முஸ்லீம் பாவலர்கள்
முனைவர் கு. மகுடீஸ்வரன் ............ 11

4. நவீன வாழ்க்கைப் பின்னணியில் சாயத்திரை
சி.ஆர்.ரவீந்திரன் ............ 15

5. வில்லியனூர் தந்த விடுதலை வீரர் முத்துக்குமாரசாமி
கிருங்கை சேதுபதி ............ 19

6. இடுக்கி மாவட்ட தேயிலைத் தோட்டத் தொழில்சார் கலைச்சொற்கள்
ந.வடிவேலன்.... ............ 24

7. சமூக அசைவியக்கங்கள் குறித்த விவாதம்
இரா.காமராசு..... ............ 28

8. காத்திரமான விவாதத்துக்காக காத்திருக்கும் கட்டுரைகள்
அன்பாதவன்..... ............ 35

9. சோசியல் மீடியாக்கள், உணர்வுகளை மழுங்கடித்துவிட்டது.
எழுத்தாளர் ஆசு ............ 38

10. சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி (1812-1854) தென்னக அறிவுப் புலத்தின் தோற்றுவாய்!
இர.குமரன்........ ............ 41

11. சங்கத்துச் சான்றோர்களின் சமூக உறவு
முனைவர் சு. சதாசிவம் ............ 47

12. தமிழ்நாட்டு ஓவியங்களின் ஆவணம்
முனைவர் இரா. வெங்கடேசன் ............ 51

13. நூறு பெண்கள், நூறு சிறுகதைகள் ஓர் உரையாடல்
முனைவர் ஏ. இராஜலட்சுமி ............ 55

14. இருத்தலிய வாசிப்பில் தாயைத்தின்னி
சுப்பிரமணி இரமேஷ் ............ 58

15. மார்க்சிய ஆய்வுலகில் நா.வானமாமலை
முனைவர் சி. இளங்கோ ............ 62

16. அய்யா வைகுண்டரின் சிந்தனையும் வழிபாடும் பற்றி பேராசிரியர் ந.முத்துமோகனின்....
சே. கலைவாணி ............ 67

17. The Impact of Colonialism and Resistant in Amitav Ghosh's Sea of Poppies...
W. M. Seenivas Leandar Bias & Dr. V. Rajendran ............ 71






# தமிழ் மண்: அன்றும் இன்றும்

‘இரும்பின் தொன்மை’ என்ற நூலொன்றை சமீபத்தில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை வெளியிட்டுள்ளது. எழுபத்தைந்து பக்கங்களே கொண்ட இந்நூல் ஒரு வலுவான வரலாற்றுச் செய்தியைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்நூலை தொல்லியல் அறிஞர்களான முனைவர் கா.ராஜன், இரா.சிவானந்தம் ஆகிய இருவரும் இணைந்து எழுதியுள்ளனர்.

**‘இச்சிறு நூல் நமது கண்ணைத் திறக்கும் நூல் எனலாம்’**

**‘இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது’**

**‘இதன் தாக்கம் குறைவதற்கு வெகுகாலம் ஆகலாம்’**

**‘இந்தியத் தொல்லியல் துறையில் இது ஒரு திருப்புமுனை’**

**‘இது தென்னிந்தியா அல்லது இந்தியத் துணைக்கண்டத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒரு அற்புதமான கண்டுபிடிப்பு’**

**‘இச்சிறுநூல் இரும்புக்கால ஆராய்ச்சியில் இந்திய அளவில் மட்டுமல்லாமல் உலக அளவில் ஒரு புதிய பரிமாணத்தை வெளிப்படுத்தியுள்ளது’**

மேற்கண்ட வரிகள், வாசகங்கள் இந்நூலின் முன்னுரைகளாக இந்திய அளவில் புகழ்பெற்ற மூத்த தொல்லியல் நிபுணர்கள் எழுதியவற்றிலிருந்து எடுக்கப்பட்டவை. அவர்களுள் சிலர் வடஇந்தியாவைச் சார்ந்தவர்கள்.

‘பல்வேறு தொல்லியல் அகழாய்வுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளுக்குப் பெறப்பட்ட அறிவியல் காலக்கணக்கீடுகள் தமிழ்நாட்டில் இரும்புப் பயன்பாட்டின் தொன்மையை கி.மு. நாலாயிரத்தின் முற்பகுதியில்

வைத்தது. இவ்வண்மைக்கால அறிவியல் சான்றுகளை இந்த வெளியீட்டின் மூலம் ஆய்வுலகின் முன் வைப்பதில் நான் பெரும் மகிழ்வு கொள்கிறேன்' என்று இந்நூலின் அணிந்துரையில் தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளரும் தொல்லியல் துறை ஆணையருமான த.உதயச்சந்திரன் ஐஏஎஸ் குறிப்பிட்டுள்ளார்.

எந்தெந்த ஆய்வுக் களங்களிலிருந்து எடுக்கப்பட்ட தொல்லியல் மாதிரிகள் உலகின் எந்தெந்த நாடுகளிலுள்ள எந்தெந்த ஆய்வகங்களுக்கு அனுப்பப்பட்டன என்ற விபரங்களோடு அந்தந்த ஆய்வகங்கள் காலக்கணக்கீடு செய்யும் வகையில் இறுதியாக வழங்கிய தீர்மானகரமான முடிவுகளையும் இந்நூல் அப்படி அப்படியே ஒரு ஆவணம்போல் வெளியிட்டுள்ளது. காலக்கணக்கீடு செய்ய ஒரு ஆய்வகத்திற்கு மட்டும் அனுப்பாமல் மேலும் சில ஆய்வகங்களுக்கும் அனுப்பி சந்தேகத்திற்கோ, சர்ச்சைக்கோ இடம் தராத வகையில் இறுதி முடிவுகள் நிறுவப்பட்டுள்ளன.

நாற்பதுக்கும் மேற்பட்ட சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளதை அறிகிறோம்.

கண்டறியப்பட்டுள்ள இத்தகைய வரலாற்று உண்மைகள் தமிழர்களைத் தலைநிமிரச் செய்கிறது என்பதில் சந்தேகமில்லை. வரலாற்றுப் பெருமிதம் கொள்ளச் செய்கிறது என்பதிலும் இரண்டு கருத்துகள் இருக்க முடியாது.

இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்திக்கிறபோது தொன்மைக் காலத்திலேயே இரும்புப் பயன்பாடு இருந்த இம்மண்ணில் அறிவியல் செழித்தோங்கியிருக்க வேண்டுமே! ஏன் இல்லை என்ற கேள்வி நம்முன் நிற்கிறது.

பண்டைக் காலத்திலேயே தமிழர்கள் கல்வியறிவு பெற்றிருந்த நிலையில் இந்நேரம் கல்வி பல்கிப்பெருகி வழிந்தோடியிருக்க வேண்டுமே! ஏன் இல்லை என்ற இன்னொரு கேள்வியும் எழுகிறது.




இந்த ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்நூலின் அணிந்துரையில் 'தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மை 5300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிவியல் துணைகொண்டு நிறுவப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இரும்புப் பயன்பாடு சக்கரம், கலப்பை உள்ளிட்ட எண்ணற்ற அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படையாக இருந்துள்ளது. தொழில் புரட்சிக்கு வித்திடுவதாக அமைந்தது.

இரும்பைக் காய்ச்சி உருக்கும் தொன்மைத் தொழில் கூடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இரும்புத் தொழில்நுட்பத்திற்கும் மேம்பட்டது எஃகு தொழில் நுட்பம். அதிலும் தமிழ்மண் சிறந்தோங்கி இருந்துள்ளது.

இதே போன்று தமிழ் எழுத்தின் வரலாறும் தொன்மையானது. தமிழ் மண் எழுத்தறிவும் கல்வியறிவும் பழங்காலத்திலேயே பெற்றிருந்தது என்பதற்கு ஏராளமான சான்றாதாரங்கள் உள்ளன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சங்க இலக்கியங்களும் திருக்குறளும் அன்றிருந்த அறிவார்ந்த தமிழகத்திற்கான அடையாளங்கள்.

வரலாற்றுத் தொடர்ச்சி எந்த இடத்தில் அறுந்தது? ஏன் தேக்கமடைந்தது? எதன் பொருட்டு திசை திரும்பியது?

இந்தக் கேள்விகளுக்கு பதில் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது.

அதே சமயத்தில் கடந்தகாலத் தமிழகத்தை மனதில் வைத்து வரலாற்று உத்வேகத்தோடும் புதிய உறுதியோடும் அனைவருமாகச் சேர்ந்து செயல்பட்டு ஒட்டுமொத்தத் தமிழகமே தரமும் தகுதியும் மிக்க கல்வியில் உயர்ந்தோங்க, அறிவியல் கண்டுபிடிப்புகளில், அறிவியல் பார்வையில், அறிவியல் கண்ணோட்டத்தில் வேறு எவரைக் காட்டிலும் விஞ்சி நிற்கவும் உறுதியேற்க வேண்டும்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர்களே அப்படி வாழ்ந்திருப்பார்களெனில் இன்றைய தமிழர்கள் எப்படி வாழவேண்டும் என்பதை அனைவருமே எண்ணிப்பார்க்க வேண்டும்.

●

**ஆசிரியர் குழு**

# படித்துப் பாருங்களேன்...

**ஆ.சிவசுப்பிரமணியன்**




சபரிமலை (கேரளக் கோயில் ஒன்றின் சமூக வரலாறு)
Jitheesh P.M (2022) Sabarimala : Social History Of a Temple in Kerala.
left Word Books. New Delhi 110008.

நமது வரலாற்று வரைவியலின் கெடுபேறான (துரதிருஷ்டமான) வரைவுமுறை என்னவென்றால் அது பரவலாகக் கிடைக்கக் கூடிய ஆவணங்களைப் பயன்படுத்தி எழுதப்படுவதுதான். வாய்மொழி வரலாறு மற்றும் பிற புதிய அணுகுமுறைகள் இக்குறையைப் போக்கத் துணைநின்றாலும் பழைய தடத்திலேயே நம் வரலாற்று வரைவு பயணிக்கிறது. சபரிமலை மீதான அப்பகுதி பழங்குடிகளின் உரிமைகள் கண்டு கொள்ளப்படாமை இக்குறைபாட்டிற்குச் சான்று பகர்கிறது.

– நூலாசிரியர்.

**நூலின் உள்ளடக்கம்**

கேரள மாநிலத்தின் சமய அடையாளங்களில் புறக்கணிக்க இயலாத ஒன்றாக, பரவலாக அறிமுகமான ஒரு வழிபாட்டு மரபு ஐயப்ப வழிபாடு. இதன் தாக்கம் தமிழ்நாட்டிலும் அழுத்தமாக உள்ளது. எந்த சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் ஒவ்வொரு ஆண்டிலும் தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களிலும் கிராமப் புறங்களிலும், திசம்பர், சனவரி மாதங்களில் ‘சாமியே சரணம் ஐயப்பா’, சாமி சரணம் ஐயப்ப சரணம்’, ‘சாமியே ஐயப்பா, ஐயப்பா சாமியே’ என்ற முழக்கங்களைக் கேட்காதிருக்க முடியாது. அந்த அளவுக்கு மிகவும் பரவலாக அறிமுகமாகியுள்ள ஒரு வழிபாட்டு மரபாக ஐயப்ப வழிபாடு விளங்கிவருகிறது. எந்த மரபிற்கும் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் என்ற மூன்று நிலைகள் உண்டு என்ற நிலையில் ஐயப்ப வழிபாடும் இதற்கு விதிவிலக்கல்ல.

**இந்நூலின் ஆசிரியரான பி. எம். ஜித்திஷ் கேரளத்தின் காலாடியில் செயல்படும் சங்கராச்சார்யா பல்கலைக்கழகத்தில் வரலாற்றில் எம். பில். பட்டம் பெற்றவர். ஃபிரண்ட் லைன், இந்து, காரவன், மன்திலிரிவியூ ஆகிய ஆங்கில இதழ்களில் கட்டுரைகள் எழுதி வருகிறார். ஆங்கிலத்தில் மட்டுமின்றி பிற ஐரோப்பிய மொழிகளிலும் இவரது கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.**

இங்கு அறிமுகமாகும் நூல் அளவில் சிறியதுதான். டெம்மி அளவில் 155 பக்கங்களைக் கொண்ட இந்நூல், தலபுராணம், மான்மியம் போன்று ஒரு சமய வழிபாட்டுத் தலத்தின் வரலாறு என்று மதிப்பிட்டுவிட முடியாது. இது ஒரு சமூக வரலாற்று நூலாகும். சமூகவரலாறு எனும்போது அது நிகழ்வுகளைக் காலவரிசையில் தொகுத்துரைக்கும் மரபுசார்ந்த வரலாற்று வரைவில் இருந்து விலகி நிற்பது. இதன் அடிப்படையில் வரலாறு, சமூகவியல், மானுடவியல், பெண்ணியம் என்ற அறிவுத்துறைகளைச் சார்ந்து நின்று சில உண்மைகளை வாசிப்போன் அறியும்படிச் செய்துள்ளது.

ஆனால், இதுமட்டும் இந்நூலின் சிறப்புக் கூறல்ல. ‘கேரளக் கோயில் ஒன்றின் சமூக வரலாறு’ என்று தலைப்பில் குறிப்பிட்டதற்கு ஏற்ப இரண்டாவது பகுதியின் தலைப்பை ‘*How Sabarimala Became Sabarimala*’ என்று பொருத்தமாகவே அமைத்துள்ளார். ஆனால் இந்நூலாசிரியர் இவற்றுடன் நின்றுவிடாமல் 28-09-2018 இல் சபரிமலை ஐயப்பன் கோயிலில் பெண்கள் சென்று வழிபடுவது தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும், அதற்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் நிகழ்ந்த அரசியல் இயக்கங்களையும் வெளிப்படுத்தியுள்ளார்.

தமது நூலின் முதற்பகுதியை இந் நிகழ்வுகளில் இருந்தே தொடங்கியுள்ளார். இது ஒரு வகையில் அரசியல் சார்ந்த ஒன்று. வரலாற்றின் புனிதம் காப்பதாக நினைப்போர் இதை எதிர்க்கலாம். ஆனால், உண்மையான வரலாற்று வரைவு என்பது அரசியலில் இருந்து விலகி நிற்பதல்ல. அது அரசியல் சார்ந்த ஒன்றுதான். இந்நூலாசிரியரின் சிந்தனைப் போக்கை ஒட்டியதாகவே மீரா வேலாயுதன் இந்நூலுக்கு எழுதியுள்ள அறிமுகவுரையும் அமைந்துள்ளது. இனி நூலின் செய்திகளுக்குள் நுழைவோம்.

**தடையும் வழக்கும்:**

சபரிமலை ஐயப்பசாமி பிரம்மச்சாரி என்பது தொன்மம் சார்ந்த நம்பிக்கையாகும். அவரை நித்திய பிரம்மச்சாரி என்பர். இதன் அடிப்படையில் திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு பத்து வயது முதல் ஐம்பது வயது வரையிலான பெண்கள் ஐயப்பன் கோயிலுக்குள் நுழைந்து வழிபடுவதற்குத் தடைவிதித்து ஆணை பிறப்பித்திருந்தது.

நம் அரசியல் அமைப்புச்சட்டம் தீண்டாமையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதன் அடிப்படையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பெண்களைத் தீண்டாமைக்கு உட்படுத்தும் என்ற உயர் நீதி மன்றத்தின் வாதத்தை ஏற்கவில்லை. இந் நடைமுறை இந்தியச் சமூகத்திலிருந்து நீக்கப்படவேண்டும் என்று கூறியதுடன் தம் தீர்ப்பில் இது தொடர்பாகப் பின்வரும் விமர்சனங்களையும் முன்வைத்தனர்:



தூய்மையில்லாதவர்கள், தூய்மைக்கேட்டை உருவாக்குபவர்கள் என்ற கருத்து மாதப் பூப்பை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கு எதிராக உருவாகியுள்ளது. மாதப்பூப்பு என்பது அவர்களை ஒதுக்கிவைப்பதன் குறியீடாக அமைந்துவிட்டது. இச் செயல் ஒரு வகையான தீண்டாமையாகும். அத்துடன் இச் செயலானது நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் தகவுகளுக்கு முரணானது. பெண்களின் கண்ணியத்திற்கும் சமத்துவமான குடியுரிமையை அவர்கள் பெறுவதற்கும் தடையானவற்றை நீக்கி அரசியல்அமைப்புச் சட்டத்தின் மேலாண்மையை நிறுவுவதற்கு நீதிமன்றம் அவர்களுக்குத் துணை நிற்க வேண்டும்.

இத் தீர்ப்பு வழங்கப்பட்டதும் ஆட்சியில் இருந்த இடதுசாரி ஜனநாயக முன்னணி ( L.D.F.) இத்தீர்ப்பிற்கு எதிராக எவ்வகையான மறுசீராய்வு மனுவையும் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்யப் போவதில்லை என்றும் நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப சபரிமலையில் வழிபடச் செல்லும் பெண்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும் என்றும் அறிவித்தது.

### இரண்டு அணிகள்:

இடதுசாரி ஜனநாயக முன்னணியில் இடம் பெற்றிருந்த அரசியல் கட்சிகள் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தன. எதிரான நிலைப்பாட்டை, பி.ஜே.பி. இந்திய தேசியக் காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கேரள காங்கிரஸ்,(M), கேரள காங்கிரஸ் (J) பாரத் தர்ம சேனா, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் கேரளக் கிளை என்பன உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டன. இதில் வேடிக்கை என்னவென்றால் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றது. ஆனால், அக்கட்சியின் கேரளக்கிளை தீர்ப்பை எதிர்க்கும் சக்திகளுடன் இணைந்து செயல்பட்டது. இது பெரும்பாலும் மதவாத சக்திகளின் கூட்டாக அமைந்தது. சபரிமலை யாத்திரையில் பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இவை மேற்கொண்டன. உச்சநீதிமன்றத் தீர்ப்பை மறைத்து விட்டு சபரிமலை யாத்திரை தொடர்பான பாரம்பரிய மரபுகளுக்கு எதிரானவர் என்று பினராயி விஜயன் மீது குற்றம் சாட்டினர். சுவரொட்டிகள், வன்முறைச் செயல்கள், வசவுச் சொல் பயன்பாடு, சமூக ஊடகங்கள் வழியான தாக்குதல்கள், என்பனவற்றின் வழி மரபைக் காக்கும் பணியில் ஈடுபட்டனர். தீர்ப்புக்கு ஆதரவான நிலைப்பாடை எடுத்த பெண்கள் தாக்குதலுக்கு ஆளாயினர். வலதுசாரி குழுக்களுக்கு சங் பரிவாரங்கள் தலைமையேற்றன. கேரள பி.ஜே.பி. கட்சியின் மாநிலத் தலைவர் இடது சாரிகளுக்கு எதிரான பொன்னான வாய்ப்பு என்றார்.

2018இல், கனமழை, வீடுகள் இடிந்து விழுதல், நிலச்சரிவு என இயற்கைப் பேரிடரை எதிர்கொண்ட சூழலில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான இப் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குக் கேரளம் தள்ளப்பட்டது. மக்கள் துயர்துடைக்கும் பணியை விட மதப்பாரம்பரியம் காப்பதற்கு முன்னுரிமை தர விழைந்தனர். இருப்பினும் பெரும்பாலான மக்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தார்கள். கனேசன் என்ற வரலாற்றியலாளர், கேரளச் சமுதாயம் கடினமான போராட்டங்களால் ஈட்டிய மனிதநேயச் சாதனைகள் சபரிமலைப் பிரச்சினையால் ஆபத்தான நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டார். பி.ஜே. பி.யும் அதன் கூட்டாளிகளும் மட்டுமின்றி, காங்கிரஸ் கட்சியும் அதன் அணியில்இருந்த சில கட்சிகளும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக முன்வைத்த ஒரே வாதம் மரபு (பாரம்பரியம்) பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான்.

இதற்கு எதிராக கேரளத்தின் மறுமலர்ச்சிப் பாரம்பரியத்தை இடதுசாரி ஜனநாயக முன்னணி முன்வைத்தது. பெண்களின் உரிமையாகவே இதைப்பார்த்தது. இதன் அடிப்படையிலேயே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஆதரவாக நின்றது. கேரளத்தின் கடந்த கால வரலாற்றில் நிகழ்ந்த சமூகசீர்திருத்தங்கள், வீரம் செறிந்த சாதி எதிர்ப்புப்போராட்டங்கள் என்பனவற்றின் தொடர்ச்சியாகவே இத்தீர்ப்பை அணுகியது. இதை எதிர்க்கும் இயக்கத்தை எதிர்ப் புரட்சி (Counter revolution) இயக்கம் என்று அடையாளம் காட்டியது. பகுத்தறிவுவாதம், மதச்சார்பின்மை, பாலியல் சமத்துவம் என்பனவற்றில் நம்பிக்கை கொண்ட பலதரப்பினரையும் ஒருங்கிணைத்தது.

### வரலாறு படைத்த போராட்டங்கள்:

மன்னராட்சியிலும் காலனிய ஆட்சியிலும், நிலப்பிரபுத்துவ ஆதிக்க சாதியினரால் மரபு காத்தல் என்ற பெயரில் பல்வேறு சமூகங்கள் பொருளாதார-பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு ஆளாயின. தங்கள் மீதான பொருளாதார, பண்பாட்டு ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தின.

சமூக சீர்திருத்தம், சாதிய மேலாண்மை எதிர்ப்பு, சமத்துவச் சிந்தனை, பெண்ணுரிமை என்பன இப்போராட்டங்களில் மையம் கொண்டிருந்தன.

★ 1813-1859 காலகட்டத்தில் நாடார் சமூகத்தினர் தம் சமூகப் பெண்கள் மேலாடை அணியும் உரிமைப் போராட்டத்தை நடத்தி வெற்றிபெற்றனர். திருவாங்கூர் மன்னராட்சி ஆவணங்கள் இதை சாதி அடையாளத்திற்குள் உட்படுத்தி 'சாணார் லகளை' (ரகளை')என்று பதிவு செய்துள்ளன.

★ புலையர்கள் வில்லு வண்டியில் பயணம் செய்யக்கூடாது என்ற தடையை மீறி அய்யங்காளி என்ற புலையர் தலைவர் 1893இல் வில்லுவண்டியில் மேற்கொண்ட பயணம் வரலாற்றுச் சிறப்புமிக்கது.

★ உலோக அணிகலன்களை புலையர் சமூகப் பெண்கள் அணிவது தடை செய்யப்பட்டு கல் அணிகலன்களையே அவர்கள் அணியவேண்டும் என்ற அவலம் நிலவியது. இத் தடையை மீறி 1915 இல் பொதுக்கூட்டம் ஒன்றில் அவற்றைக் கழற்றி எறியச் செய்தவரும் அய்யங்காளிதான். கூட்டம் முடிந்ததும் அவை குவியலாகக் காட்சியளித்தன.

★ 1917 இல் பல்வேறு சாதியினரும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் சமபந்தி நிகழ்வு நிகழ்ந்துள்ளது.

★ 1924 இல் வைக்கத்திலும் 1931-32இல் குருவாயூரிலும், தடையை மீறி கோவில் தெரு-கோயில் நுழைவுப் போராட்டங்கள் நிகழ்ந்தன.

இவை யாவும் மரபுமீறிய போராட்டங்கள். இப்போது அவை மீண்டும் நினைவூட்டப்பட்டன. பண்டையக் கேரளத்தின் பழமைவாதச் சிந்தனையால் எரிச்சலுற்ற விவேகானந்தர் மனநலம் குன்றியோரின் விடுதி என்றழைத்தார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்ப்பதன் வழியாக அவரது கூற்று மீண்டும் நினைவு படுத்தப்பட்டது எனலாம். 16 அக்டோபர் 2016இல் கேரள முதலமைச்சர் பினராயி கேரளத்தின் கடந்தகாலப் போராட்டங்களை நினைவு கூர்ந்தார். அவரது உரையில் அவர் வெளிப்படுத்திய சில கருத்துக்கள் வருமாறு :

- கேரளத்தின் மாபெரும் மரபு ( Legacy) என்பது நமது மறுமலர்ச்சி (Renaissance)ஆகும். நமது சமூகம் மறுமலர்ச்சி மரபை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த மறுமலர்ச்சி இயக்கமானது ஸ்ரீ நாரயணகுரு, சட்டாம்பி சுவாமிகள், அய்யங்காளி இன்னும் பலரால் உருவானது. விவேகானந்தரால் ஒரு முறை மனநலம் குன்றியோரின் விடுதி என்று குறிப்பிடப்பட்ட கேரளம் இவர்களால் மொத்த இந்தியாவிற்கும் முன்மாதிரியாக மாற்றமடைந்தது. இதற்குக் காரணம் மதச் சார்பின்மை மீதான உறுதிப்பாடும் சாதியத்தைக் களைந்தெறிந்ததும்தான்.
- இந்தியாவின் சில பகுதிகளில் மனித உயிர்ப்பலி நடைமுறையில் இருந்தது. பின்னர் விலங்கு உயிர்ப்பலியாக மாற்றமடைந்தது.
- இதுவும் கூட பின்னால் மஞ்சள் சுண்ணாம்பு இவற்றின் கலவையால் இரத்தத்தின் செந்நிறம் உருவாக்கப்பட்டு உயிர்ப்பலியின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது.
- இவையெல்லாம் நம் மரபில் ஏற்பட்ட மாறுதல்கள். இது போன்ற பல மாறுதல்கள் நம் நாட்டிலும் கேரளத்திலும் நிகழ்ந்துள்ளன மரபு என்பது காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளது.
- ஒரு குறிப்பிட்ட காலத்தில் வழக்கில் இருந்த மரபு காலந்தோறும் மாற்றத்திற்கு ஆளாகி வந்துள்ளது.

  இது போன்றே எல்லோரும் பள்ளி சென்று கல்வி பயிலும் உரிமை, இவ்வாறு பயின்றவர்கள் வேலை பார்க்கும் உரிமை, பொதுத் தெருக்களைப் பயன்படுத்தும் உரிமை, கோயில்களில் நுழைந்து வழிபடும் உரிமை போன்றவற்றிற்காகப் பலவேறு போராட்டங்களை நடத்தியே இன்றையக் கேரளம் வளர்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு கடந்தகாலக் கேரளத்தின் போராட்ட வரலாறு அவரால் நினைவூட்டப்பட்டதுடன் மட்டுமின்றி, அப்போராட்டங்களில் ஈடுபட்ட சமூகங்களும் இச் சமூக அமைப்புகளின் இன்றையத் தலைவர்களும் தீர்ப்புக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கும்படிச் செய்வதில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு ஆதரவான அணி வெற்றியடைந்தது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்க்கும் குரல் கேரளத்திற்கு வெளியே டில்லியிலும் ஒலித்தது. மத்திய அமைச்சரும் பி.ஜே.பி.யின் மேல்மட்டத் தலைவர்களில் ஒருவருமான ஸ்மிருதி ராணியின்

கூற்றாக இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ள செய்தியின் சாரம் வருமாறு:

‘கோவிலில் நுழைந்து வழிபாடு செய்வதற்கு எனக்கு உரிமையுண்டு என நம்புகிறேன். அதே நேரத்தில் அதன் புனிதத்தன்மையைக் கெடுக்க எனக்கு உரிமையில்லை. இந்த வேறுபாட்டை அறிந்துகொண்டு நாம் செயல்படவேண்டும். மத்திய அமைச்சராக இருக்கும் நான் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து கருத்துரைக்க முடியாது. பொதுப் புத்தியின்படி பார்த்தால் பூப்புக்குருதியில் நனைந்த தீட்டுத் துணியுடன் (சானிடிரி நாப்கின்) நண்பர் வீட்டுக்கு உங்களால் செல்ல முடியுமா? நீங்கள் செல்லமாட்டீர்கள். இதே செயலை கடவுளின் வீட்டிற்கு கோவிலுக்குச் செல்லும்போது செய்வதும் மரியாதைக் குறைவுதான்.’

உச்சநீதிமன்றத்தீர்ப்பு வழங்கிய உரிமையின் அடிப்படையில் ஐயப்பன் கோவிலுக்குச் சென்ற சிலபெண்கள் வன்முறைத் தாக்குதலுக்கு ஆளாகினர்.

மொத்தத்தில் பெரும்பான்மையினரான கேரளப் பெண்களின் ஆதரவும், கேரள அரசின் உறுதியான நிலைப்பாடும் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான எதிர்ப்பியக்கத்தை வலுவிழக்கச் செய்துவிட்டன. இதில் பெண்களின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். பல கிலோ மீட்டர் தூரத்திற்கு நீண்ட வரிசையாக நின்று பெண்களின் சுவர் என்ற பெயருடன் தம் உரிமைக்கும் கண்ணியத்திற்கும் அவர்கள் நடத்திய போராட்டம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சில சமூக மாறுதல்களை உள்வாங்கிச் செயல்படுவதன் அவசியத்தை பொதுவுடைமை இயக்கத்திற்கு இப்போராட்டம் உணர்த்தவும் செய்தது. சான்றாக இந்தியாவின் சிறந்த வரலாற்றாசிரியர்களில் ஒருவரான கே.என்.பணிக்கர் எழுதிய கட்டுரையில் இடம் பெற்ற பின்வரும் கருத்து கேரளக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு மட்டுமின்றி மொத்த கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் பொருத்தப்பாடுடையதுதான். மரபைப் பாதுகாப்பது என்ற பெயரால் நடந்த இப்போராட்டத்தில் பெண்களும் பங்கேற்றனர். இவர்கள் அனைவரும் நிலமானியச் சமூகத்தின் முதுமை எய்திய பெண்கள் அல்லர். புதிதாக உருவான மத்தியதர வரக்கத்தின் இந்துப் பெண்களும், பல்வேறு சாதிப்பிரிவினரும் இதில் இடம் பெற்றனர். உண்மையில் இவர்கள் வர்க்க அடிப்படையில் இதில் கலந்து கொண்டிருக்கக் கூடாது.

**கே.என்.பணிக்கரின் கருத்து**

இது குறித்து 2016 ஏப்ரல் 7இல் இந்து ஆங்கில நாளேட்டில் வரலாற்றறிஞர் கே.என். பணிக்கர் எழுதிய கட்டுரையில் “கடந்த இரண்டு தசாப்தங்களாக கீழ்நிலை மத்தியதர வர்க்கத்தின் திடீர் வளர்ச்சிக்குக் கேரளம் ஆட்பட்டுள்ளது. அவர்களின் நவீனத்துவத்திற்கான ஏக்கம் ஒரு பண்பாட்டு நெருக்கடியை அவர்களிடம் உருவாக்கியுள்ளது. இதிலிருந்து விடுபடும் வழிமுறையாக மூடநம்பிக்கை சார்ந்த நடைமுறைகள் மற்றும் பகுத்தறிவற்ற சடங்குகளின் துணையுடன் தீர்வுகாண முயன்றனர்” என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பொருள் உற்பத்தி முறை உருவாக்கும் வர்க்கங்கள் அச்சமூகத்தின் பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையே பேராசிரியர் பணிக்கரின் இக்கட்டுரைச் செய்தி வெளிப்படுத்துகிறது.

பணிக்கரின் இக்கருத்து சபரிமலைப் பிரச்சினையுடன் முடிந்த ஒன்று அல்ல. கேரளத்திற்கான எடுத்துக்காட்டு மட்டுமல்ல. இது மார்க்சியர்கள் அனைவரும் அவதானிக்கவேண்டிய ஒன்று.

இதுவரை சபரிமலைக் கோயிலுக்குள் பெண்கள் நுழைவதற்குத் தேவஸ்வம் போர்டு விதித்த தடை, அதை உறுதிசெய்த உயர்நீதிமன்றம், அதை ஏற்றுக்கொள்ளாது அனுமதி வழங்கிய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, மரபைக் காப்பாற்றுவது என்ற முழக்கத்தை முன்வைத்து அத்தீர்ப்பிறகு எதிராக அணிதிரண்டோர், தீர்ப்பிற்கு ஆதரவாக அணிதிரண்டோர், இறுதியில் எதிர்ப்பாளர்கள் வலுவிழந்தமை எனத் தொடர்நிகழ்வுகளைக் கண்டோம்.

இவை ஒருவகையில் அரசியல் சாரந்தவை. இந்நூலின் முக்கியமான நோக்கம் இக்கோயில் உரிமையிலும் வழிபாட்டு முறையிலும் காலம்தோறும் நிகழ்ந்த மாறுதல்களும் அவற்றின் பின்னால் இருந்த சக்திகளும் எவை? என்பதையும் ஐயப்ப வழிபாட்டின் தனித்துவம் என்ன? என்பதையும் நாம் அறியச் செய்வதுதான்.

இவற்றை அறிந்து கொள்ள நாம் கடந்த காலத்திற்குள் பயணிக்க வேண்டும். அடுத்த இதழில் நம் பயணத்தைத் தொடங்குவோம்.

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்.**

கட்டுரை



# முருகனைப் பாடிய முஸ்லீம் பாவலர்கள்

ஒரு சமுதாயம் தன் வலிமைகளைப் புரிந்து கொள்ளாத போது, ஒரு பார்வையாளனைப் போல் அது நகர்ந்து போய்விடும். தனது வேர்களை அறிந்து மரபுகளை உணர்ந்த சமூகத்தால் மாத்திரமே உலக ஒருமைப்பாடும், மானுடம் முழுவதையும் நேசித்து நல்லிணக்கத்தோடும், நட்புணர்வோடும் வாழ இயலும். அவ்வகையில் அரேபியத்தில் தோன்றிய இஸ்லாம், அகிலம் முழுவதும் பரவியதைப் போல, பாரதத்திலும் குறிப்பாகத் தமிழகத்திலும் கிளை பரப்பியது. யவனர், சோனகர் என்று முற்காலத்திலேயே குறிப்பிடப்பட்ட மக்கள், பின் துருக்கர் எனவும் ராவுத்தர் எனவும் குறிப்பிடப்பட்டனர். இஸ்லாமியம் தமிழுக்குப் பல தொண்டுகளைச் செய்தது. இதுவரை ஏறத்தாழ 1200 இஸ்லாமியச் செய்யுள் இலக்கியங்கள் பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன.[1] இவ்விலக்கியங்களில் தமிழ் மரபும் இஸ்லாமிய மரபும் ஆரத்தழுவி அகமிக மகிழ்கின்றன. இங்கே முத்தமிழால் முருகனைப் பாடிய முஸ்லீம் பாவலர்கள் பற்றிக் காண்போம்.



முனைவர் கு. மகுடீஸ்வரன்

### இலக்கியம் காட்டும் இராவுத்த முருகன்

திருப்பெருந்துறைப் புராணம், ‘கோட்டமிலா மாணிக்கவாசகர் முன் குதிரை ராவுத்தனாக’ இறைவன் வந்து நின்றதாகக் குறிப்பிடுகிறது. அந்தத் திருப்பெருந்துறையில் உள்ள ஆலயத்தின் முகப்பு மண்டபம் குதிரை வீரர் சிற்பங்களுடன் அமைக்கப்பட்டு இருப்பதுடன், ‘ராவுத்தர் மண்டபம்’

என்றே வழங்கப்படுகிறது. கந்தர் அலங்காரத்தில் அருணிகிரிநாதர் தாம் வழிபடும் முருகனை,

**"சூர் கொன்ற ராவுத்தனே!**

**மாமயிலேறும் ராவுத்தனே!**

எனக் குதிரை ராவுத்தனாகவே கற்பனை செய்து பாடியுள்ளார்.

## பழனி காதர் முகையதீன் மஸ்தான், என்.

'பழனி மாநகரில் செந்தமிழ் வித்வான்' என்று அழைக்கப்பட்ட காதர் முகையதீன் மஸ்தான் பலதனிப்பாடல்களையும், சீட்டுக் கவிகளையும் எழுதியுள்ளார். இவர் 1925ஆம் ஆண்டு தஞ்சாவூர் சிவாஜி மகாராஜாவிடம் தங்க மெடல்களும், தக்க சன்மானங்களும் பெற்றவர். இவருடைய இரண்டு மகன்களில் ஒருவரான என்.எஸ்.ஏ.சலாம், மலைக் கோவில் படிகள் வழியில் புத்தகக் கடை வைத்திருந்தார். அவரும் பழனித் தல மகிமையை நூலாக வெளியிட்டுள்ளார். புலவர் காதர் முகையதீன் மஸ்தான் முருகன் மீது மிகுந்த ஈடுபாடு உள்ளவர்". இவர் முருகனைப் பற்றிப் பல நூல்கள் பாடியுள்ளார். பழனி ஸ்தல யாத்திரை வாசிகளுக்காகப் "பழனி ஆண்டவர் ஸ்தல வரலாறு" எனும் நூல் இவரால் எழுதப்பட்டது. இந்நூலில் 'தினந்தோறும் பழநிமலைக்கு இஸ்லாமானவர்கள் ஊதுபத்தி, சர்க்கரை, பழம், சந்தனம்' முதலியவைகளைக் கொண்டுவந்து ஆண்டவருக்குப் பின்புறம் நீராடிப் பத்திகிரியில் வைத்து, ஊதுவத்தி கொளுத்தி சந்தனம் தெளித்து பழனி பாவாவென்று சொல்லி பாத்திஹா செய்து வருகிறார்கள். இவ்வூரில் எக்காலத்திலும் முகம்மதியர்களுக்கும் இந்துக்களுக்கும் மிகவும் ஒற்றுமை என்பதைப் பக்த கோடிகளுக்கு இதனால் தெரியப்படுத்துகிறோம்" என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

108 பாடல்கள் அடங்கிய 'பழனி ஆண்டவர் மாலை' என்ற நூலைப் பாடியுள்ளார். 'பழனி பால தண்டாயுதபாணி அழைப்பு மாலை' என்பதும் இவர் பாடிய நூலேயாகும். இச்சிறு நூலில் முருகனை,

**"பாலன் வருந்துகிறேன் ஓலமிட்டமுகிறேன்**

**பதறியே வேலெடுத்து**

**பளபளவெனவே மயிலேறி வள்ளி**

**தெய்வானையுடன் வருவாய்**

**பால தண்டாயுதபாணி போற்றி"**

என உருகிப் பாடுகிறார்.

**பாரமலை யாண்டவனே பழனிவேலா**

**கால் கொண்ட தூரமெல்லாம் சுற்றி வந்தேன்**

**கதிர்வேலா என்று மனம் கருத்திலெண்ணி**

**வேல் கொண்ட மயிலேறி நடனமாடி**

**விளையாடி ஓடி வந்து முருகாயென்னை**

**ஆட் கொண்டால் உனக்கு வெகு பாரமுண்டா"[2]**

எனப் பழனிவேலன் பேரில் மாலை எனும் பகுதியில் இறைஞ்சுகிறார்.

'பக்தர்களுக்கு முக்தி கொடுக்கும் பழநியாண்டவர் மாலை' எனும் நூலைப் புலவர்

15 பக்கங்களில் பாடி, 1928ஆம் ஆண்டு சென்னை கிருஷ்ண விலாசம் பிரஸில் அச்சிடப்பட்டது.3

**"அய்யா நின் சன்னதியில் அறுத்த சேவல்கூவும்**

**அடிசிலிடு மீன் துள்ளிடும்"**

என்பது புலவர் நூலின் சிலவரிகளாகும்.

'ஸ்ரீ பழனியாண்டவர் கிரி அலங்காரத் தோத்திரம்' எனும் சிறு நூல் புலவரால் பாடப்பட்டது. இது 1929இல் அச்சிடப்பட்டது.[4]

'பழனியாண்டவர் சன்னதி அக்னி வழிநடை அபிசேகக் காரணச் சரித்திரம்' என்ற நூலைப் பழநிக்குப் பயணம் செய்யும் பக்தர்களுக்கு வழிநடையாகப் பாடும்படி எழுதப்பட்டது. இந்நூல் 1924இல் பழனி வாணி பிரசில் அச்சானது.

1924இல் எழுதிய இன்னொரு நூல் 'பழநியாண்டவர் சன்னதி மருத்துவத் தரிசனச் சரித்திரம்' என்பதாகும். பழநிக்கு ஒருவன் தன் மனைவியுடன் பயணம் சென்று அங்கே கண்ட காட்சிகளை விவரிக்கும் விதமாக நூலமைந்துள்ளது. 'சன்னதி செல்வோம் மைடியர் லேடி' என்பது போன்ற ஆங்கிலச் சொற்களும், கொச்சை மொழிகளும் இந்நூலில் கலந்து வருகின்றன. 1925ஆம் ஆண்டு புலவர் பாடியது 'பழனியாண்டவர் தோத்திரக் கீர்த்தனை' எனும் நூலாக வெளிவந்துள்ளது. முருகன் மேல் பற்றுக் கொண்ட புலவர் 06.09.1954 இல் மறைவுற்றார்.

## பழனி என்.கே.எம்.ஷெரீப்

காதர் முகையதீன் மஸ்தானின் புதல்வர்களில் ஒருவரான என்.கே.எம்.ஷெரீப், தந்தையின் விருப்பப்படி முருகனின் பெருமைகளைக் கூறும் விதமாகப் 'பழனி வேலாயுத ஸ்தல மஹாத்மியம்' என்ற நூலைச் செய்தார். 1946இல் 29 பக்கங்கள் கொண்ட இந்நூலை வித்வான் ஒய்.நாராயண

ஐயர் மலையாளத்தில் மொழிமாற்றம் செய்தார்.[5] இந்த நூல் அன்றைக்கு எட்டணாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் தபாலில் 9 அணா செலுத்திப் பெற்றனர்.

### தாராபுரம் காதர் முகையதீன் ராவுத்தர், என்.,

தாராபுரத்தைச் சேர்ந்த புலவர் காதர் முகையதீன் ராவுத்தர் பல நூல்களைப் பாடியுள்ளார். 1910 ஆம் ஆண்டு தாராபுரத்தில் பிளேக் நோய் பரவிய போது 'பிளேக்குச் சரித்திரம்' (சாமுண்டீஸ்வரி பிரஸ், தாராபுரம்) என்ற நூலைப் பாடியுள்ளார். பழனி மலை ஆண்டவரைத் தரிசிக்கப் போகும் பக்தர்கள், வழியில் களைப்புத் தெரியாதிருக்கும்படிப் பாடியபடி செல்ல 'பழநி ஆண்டவர் வழிநடைச் சிந்து' எனும் நூலை மூன்று பாகங்களாகப் பாடியுள்ளார். நவம்பர் 1909இல் தாராபுரம் சாமுண்டீஸ்வரி பிரஸில் இந்நூல் அச்சிடப்பட்டது. இந்நூலின் சிறப்பு, பழநிக்குக் காதலியுடன் செல்லும் காதலன் அங்குள்ள காட்சிகளைக் காட்டி மகிழ்வதைப் பாடியுள்ளதாகும்.

### கணியூர் அப்துல் சுகூர் சாஹிப்

கணியூரைச் சார்ந்த புலவர் அப்துல் சுகூர் சாஹிப் பண்டிதர் அவர்களைக் கொங்கு நாட்டுப் புலவர் தலைமணி என்று கி.ஆ.பெ.விசுவநாதம் பாடியுள்ளார். இவர் கணியூர் சன்மார்க்க சங்கம் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றில் தலைமைப் பொறுப்பு வகித்தவர். 1930ஆம் வருடம் பழைய கோட்டைப் பட்டக்காரர் மீது நான்மணிமாலை என்ற நூலைப் பாடினார். புலவரின் சிறப்பான நூலாகச் சுட்டப் பெறுவது 'தண்டமிழ் மாண்பு' என்பதாகும். திண்டுக்கல் விஜயரெங்கம் பிரஸில் 1929இல் அச்சானது. தமிழும், வடமொழியும் என்பது பற்றிய வாதங்கள் எழுந்த போது திருவுளச் சீட்டெழுதி சிறுமியொருத்தி எடுத்துத் தர, தமிழே உயர்ந்ததென்று வந்ததைப் புலவர் மிக விரிவாகக் கூறும்போது,

**"செந்தமிழால் உயர்வென்று முன்னொரு**
**சீட்டெனக்குத் தந்தனன் கந்தன்"**[5]

என்று குறிப்பிடுகிறார். கந்தன் வந்து தமிழின் உயர்வைக் குறிப்பதாகப் புலவர் சான்று காட்டுகிறார்.

### ஈரோடு அலாவுதீன் சாகிப், ஏ.கே.

ஈரோடு நகரைச் சார்ந்த புலவர்களாகிய அலாவுதீன் சாகிப் மற்றும் ஏ.ஹெச். அமீர்பாட்சா சாகிப் இருவரும் நண்பர்கள். இவர்கள் இல்லற இன்பத்தை இராகத்துடன் பாடியது 'மாதர்களின் வினோத கீர்த்தனங்கள்' என்பதாகும். 1925இல் இந்நூல் அச்சானது. அதே ஆண்டில் அலாவுதீன் சாகிப் மட்டும் பழனி முருகன் மீது பக்தி கொண்டு உருகிப் பாடிய 'பக்திரசக் கீர்த்தனங்கள்' என்ற நூல் ஈரோடு டயமண்ட் பிரஸில் ஆகஸ்ட் 1925இல் அச்சானது.

### பொள்ளாச்சி சையத் முகமது. ஏ.

பொள்ளாச்சியைச் சார்ந்த புலவர் சையத் முகமது பழனியாண்டவர் மீது காதல் கொண்டவர். பக்தியில் கலந்து 'பழனியாண்டவர் கீர்த்தனை' எனும் நூலைப் பாடினார். அந்நூலைப் பொள்ளாச்சியைச் சேர்ந்த வி.மாரியப்ப செட்டியார், பொள்ளாச்சி கிருஷ்ணா பிரிண்டிங் ஒர்க்ஸில் அக்டோபர் 1923இல் பதிப்பித்தார்.

### கோவை காஸிம் சாகிப். எம்.

கோவையைச் சார்ந்த புலவர் காஸிம் சாகிப் கந்தன் மீது பக்தி கொண்டவர். இவர் கோவையை அடுத்த காளிபட்டியில் அமைந்திருக்கும் கந்தசாமி கோவிலுக்குப் பிரயாணம் செய்யும் பக்தர்கள் பாடும் படி பாடல்கள் பாடினார். அது 'காளிபட்டி கந்தசாமி கோவில் பேரில் வழிநடைச் சிந்து' என்ற நூல் வடிவில் கோவை காளிபட்டி எம்.முத்துக்காளி முதலியாரால் பதிப்பிக்கப் பெற்றது. பவானி கோல்டன் பிரஸில் பிப்ரவரி 1925இல் அச்சானது.

### பவானி மஹமத் அயினுதீன் சாயபு

பவானி, தாராபுரம் பகுதிகளில் வசித்து வந்த புலவர் மஹமத் அயினுதீன் சாயபு ஏராளமான பாடல்களைப் பாடி அவை நூல்களாக வெளிவந்துள்ளன.

வள்ளிக்கும் முருகனுக்கும் நடந்த காதல் உரையாடலாகப் புலவர் பாடியது. சுப்பிரமணியருக்கும் வள்ளியம்மைக்கும் நடக்கும் சிங்காரத் தர்க்கம் என்பதாகும். மூன்று பதிப்புகள் கண்ட இந்த நூல் பவானி கோல்டன் பிரஸில் 1924இல் வெளியானது.

வெள்ளக்கோவில் வீரக்குமாரசாமி மீது பாடிய பக்திப்பாடல்களும், ஓர் ஆணும் பெண்ணும் கோவில் திருவிழாவிற்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டு பேசிக் கொள்வதைப் பற்றிய பாடல்களும் அடங்கிய 'வீரக்குமாரசாமி மீது சாராம்ஸ ஆண் பெண் தர்க்க சம்பாஷணை' எனும்

நூல் 1924இல் வெளியானது. இது கரூர் விவேகபானு அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டதாகும்.

இக்கட்டுரையில் கொங்கு நாட்டில் வாழ்ந்த இஸ்லாமியப் புலவர்கள் முருகனைப் போற்றியது மட்டுமே இடம் பெற்றுள்ளது. இன்னும் பல கொங்கு நாட்டு இஸ்லாமியப் புலவர்கள் முருகனை மட்டுமின்றி, கணபதி, பெருமாள், கருப்பணசாமி, அம்மன்கள் ஆகிய தெய்வங்களையும் போற்றிப்பாடி எழுதியுள்ளனர். பல இந்துப் புலவர்கள் எழுதிய பக்தி நூல்களை இஸ்லாமியர் பதிப்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். மதங்களைக் கடந்து மலரும் என்பது மானுடத்திற்கு மகிழ்வானதாகும்.

**சான்றாதாரங்கள்**


1. சி.எம்.ஏ. அப்துல் காதிர், கொங்கு நாட்டு முஸ்லிம்கள் பக்க எண்:38
2. என்.காதர் முகையதீன் மஸ்தான், பழனி பாலதண்டாயுதபாணி அழைப்பு மாலை, பக்க எண்:2,8
3. ரோஜா முத்தையா நூலகம் : எண் 008953
4. ரோஜா முத்தையா நூலகம் : எண் 002794
5. அப்துல் சுகூர் சாகிபு, தண்டமிழ் மாண்பு (நன்றி : தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுதிகள்)


**சில குறிப்புகள்:**

- திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட ‘முருகன்’ என்ற நூலில் பழனி மலையில் கருவறையின்பின் முஸ்லிம்களும் வந்து வணங்குகிறார்கள் என்ற செய்தி உள்ளது.
- திருத்தணி முருகன் கோவில் நான்காம் பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் நவாப் வாத்திய மண்டபம் உள்ளது. இங்கு இஸ்லாமிய வாத்தியக்காரர்கள் வாத்தியம் வாசிப்பது வழக்கம். இந்த மண்டபத்தை காதர் என்ற இஸ்லாமியர் கட்டியதாகச் சொல்லப்படுகிறது.
- கதிர்காம முருகன் கோவிலில் இஸ்லாமியர், பவுத்தர் வணங்குவதும் வழக்கம்.

●


**கட்டுரையாளர்: வருகைதரு புலமையாளர், தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.**



**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்**




₹ 360/-




₹ 400/-




₹ 170/-



# நவீன வாழ்க்கைப் பின்னணியில் சாயத்திரை



சி.ஆர்.ரவீந்திரன்

உலக வரலாற்றில் கடந்த சில நூற்றாண்டுகளில் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி வியக்கத்தக்க மாற்றங்களையும் விளைவுகளையும் நிகழ்த்தியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதகுலம் அதற்கு மாறாக இயற்கையை இடைவிடாமல் சிதைத்து மாற்றி அமைத்துக்கொண்டே இருக்கிறது. அதன் விளைவுகளை உலகளாவிய அளவில் வெளிப்படையாகக் கண்டு வருகிறோம்: வாழ்க்கையில் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

காற்று, நீர், நெருப்பு, ஆகாயம், மண் என்ற பஞ்ச பூதங்களின் எல்லையற்ற ஆற்றல்களை உயிர் வாழ்க்கைக்கு எதிராக மாற்றி மனிதன் நுகர்வுக்கலாச்சார வாழ்க்கையில் திளைத்து வருகிறான். உயிரினங்களில் மனிதன் மட்டுமே இந்தச் செயலைச் செய்து வருகிறான். உயிர் வாழ்க்கைக்குரிய சுற்றுப்புறச் சூழலை சிதைத்து அழித்துவரும் மனிதனின் விழிப்புணர்வைத் தூண்டும் வகையில் இயன்ற அளவுக்கு எல்லாத் தளங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்கு அடையாளமாக கலை, இலக்கியத்துறையில் புதிய மாற்றங்களுடைய மாறுபட்ட முயற்சிகள் அங்கங்கே தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. அதன் வெளிப்பாடாக 'சாயத்திரை' என்ற நாவல் தமிழில் வெளியாகியுள்ளது. இது, ஆங்கிலம், இந்தி, வங்காள மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சிறந்த நாவலுக்கான தமிழக அரசு விருது பெற்றுள்ளது. தமிழகத்திற்குப் பலவகைகளிலும் பெருமை சேர்த்துவரும் திருப்பூர் நகரத்தை மையமாகக் கொண்டு கடந்த மற்றும் நிகழ்கால வாழ்வியலைப் பதிவு செய்துள்ளது இந்த நாவல்.

இதன் முன்னுரையில், இதன் தனித்தன்மையைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார் பிரேமா நந்தகுமார்: "விளம்பரயுகத்தில் வண்ணங்கள் காட்டும் மாயையில் இன்று நாம் சிக்கியிருக்கிறோம். இந்த வானவில்லின் பின்னால் அனைத்தும் சோகம். இயற்கையைப் பார்த்து அதைப் போல் தானும் வர்ணங்களைச் சிருஷ்டிக்கும் மனிதன், புலியைப பார்த்து பூனை சூட்டிக் கொண்டது போல் அவதியுறுவதை சுப்ரபாரதிமணியன் மறக்க முடியா அல்ல, மறக்கக்கூடாத புதினமாக வடித்திருக்கிறார்."

கடந்த எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் பொருள் உற்பத்தியில் இது ஒரு நிலவுடைமைச் சமுதாயமாக இருந்து வந்தது. பருவ மழையை நம்பி மட்டுமே உழவுத் தொழிலை நம்பி வாழ்ந்த எளிமையான ஏழ்மையான சமுதாயமாக இருந்து வந்த திருப்பூர் கைத்தறி நெசவுத் தொழிலை அடுத்ததாகக் கொண்டிருந்தது. அதன் விளைவாக அறியாமை, ஏழ்மை, வறுமை போன்ற பின்தங்கிய சூழல்களில் மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

அதைத் தொடர்ந்து பனியன் தொழில் திருப்பூரிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் படிப்படியாக வளரத் தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக வளர்ந்த அந்தத் தொழில் இன்று பின்னலாடை உற்பத்தி என்ற நவீனத் தொழிலாக வளர்ந்து ஆண்டுக்கு நூறு கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் ஒரு தொழில் நகரமாக வளர்ந்து உலகளாவிய அளவில் அறியப்பட்டுள்ளது.

இந்த மாற்றமும் வளர்ச்சியும் நிலவுடைமை சமுதாயம் முதலாளித்துவ சமுதாயமாக வளர்ந்துள்ள வரலாற்றை அடையாளப் படுத்துகிறது. அழகும், அமைதியும், தூய்மையும், எளிமையும் நிறைந்த, குறைந்த மக்கள் தொகையுள்ள நிலப்பரப்பு மக்கள் தொகை நிறைந்த மிகப்பெரிய தொழில் நகரமாக உருமாறிப் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்து ஏராளமான நெருக்கடிகளுக்கு அடிப்படையாக அமைந்துவிட்டது. குறிப்பாக, இங்கே நீர் ஆதாரம் மிகப்பெரிய அளவுக்குச் சிதைந்துவிட்டது.

ஒரு காலத்தில், மேற்குத் தொடர்ச்சிமலையில் தோன்றி திருப்பூர் நகர் வழியாகப் பாய்ந்து பின் கொடுமணல் பகுதியில் பவானியுடன் கலக்கும் நொய்யல் நதி இன்று மிகப்பெரிய சாக்கடையாக உருமாறிப்போய்விட்டது. கடந்த காலத்தில் அதன் அழகையும், தூய்மையையும், பயன்பாட்டையும் பற்றிய நிகழ்ச்சிகளை அங்கங்கே நாவல் முழுவதும் பரவலாகக் காட்சிப்படுத்துகிறார்.

"கண்ணிற்கு எட்டிய தூரம் வரைக்கும் கறுப்பாய் சாக்கடை மினுங்கிக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் பார்வையை அவன் எட்டிப் போட்ட போது சாயப்பட்டறைக் கழிவுகள் பல்வேறு வர்ணங்களுடன் வந்து கலந்து நின்றிருந்தன. ரோசா கூசினபடி மெதுவாக நடந்தான். வறண்ட கழிவுகளும், முட்களின் சிதிலங்களும் வழியை நிறைத்திருந்தது. டில்லி முட்களின் ஆக்கிரமிப்பிலிருந்து ஒற்றையடிப்பாதை குறுகலாய் சென்று நொய்யலில் மறைந்தது. ஆறு கறுத்த நிறத்துடன் கழிவுகளாய் நிரம்பியிருந்தது"

கல்லறைகளுக்குத் தேவைப்படும் இடம் குறித்து அவர் குறிப்பிடுகிறார். "ஆமாம். சவக்குழிகள் கல்லறைத் தோட்டத்திற்கு ரொம்பதூரம் போக வேண்டும். அவர்கள் குடியிருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் எங்காவது இடம் கிடைத்தால் அங்கேயே சவங்களைப் புதைத்து விடுகிறார்கள். அப்புறம் இதுபோன்ற கீழ் ஜாதிகளை அனுமதிப்பதில்லை. அவமானப்பட வேண்டியிருக்கிறது. இடம் கிடைக்கின்ற இடம் கல்லறை தான்"

வாழ்க்கையில் பல வகையான மாறுபட்ட மனிதர்களின் அனுபவங்களையும், நெருக்கடிகள் நிறைந்த வாழ்க்கை முறைகளையும் எதார்த்தம் சிறிதும் பிசகாமல் அழகாகவே சித்தரித்திருக்கிறார்.

நாவலில் வரும் பக்தவத்சலம், ஜோதிமணி நாகன், செல்லம்மணி, பெரியண்ணன் போன்ற எளிய கீழ்த்தட்டு மனிதர்களின் வாழ்வியலை அடையாளப்படுத்தும் வகையில் உழைக்கும் மக்களின் வாழ்நிலைமைகளை மனமுருகக் காட்டுகிறார்.

இது கிறித்து பிரேமா நந்தகுமார் கூர்மையாக மதிப்பீடு செய்துள்ளார். தனது முன்னுரையில் "நிகழ்ச்சிகள் ஒரே, சீராக முன்னேறாமல் விட்டு விட்டுத் தரப்பட்டாலும் 'சாயத்திரை' எங்குமே சோகம் தான். அங்கிங்கெனாதபடி திருப்பூர் சாயப்பட்டறைத் தொழிலாளர்கள் அனைவர் மேலும் வண்ணமோ, பஞ்சுத்துகளோ படிந்திருப்பது போல்

துயரமும் இவர்கள் சோகத்தினை மூலதனமாகக் கொண்டுள்ள முதலாளிகளை ஆசிரியர் நமக்குக் காட்டவில்லை.''

'சாயத்திரை' நாவலை அறிமுகம் செய்த நாவலாசிரியர் இன்னொரு கோணத்தில் தன்னுடைய மதிப்பீடுகளை முன்வைப்பது மேலும் பெருமை சேர்க்கிறது.

''திருப்பூர் என்றதும் நினைவுக்கு வருவது நொய்யல் என்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஜீவநதியும் அதன் கரையில் உருவாகி, வெற்றிலைக்கும், தாழம்பூவுக்கும், விதவிதமான கீரை, காய்கறிகளுக்கும் பெயர் பெற்று விளங்கிய சின்னஞ்சிறிய திருப்பூர் நகரமும், விடுதலைப் போர்க் கொடி கீழே விழாமல் தன் இன்னுயிர் தாங்கிய திருப்பூர் குமரனும் நினைவுக்கு வருவார். மக்களைக் காந்தமாய்க் கவரும் விதவிதமான பின்னலாடைகள் நினைவுக்கு வரும், புதிதாய் முளைத்தெழும் வண்ண வண்ண கட்டடங்களும் நினைவுக்கு வரும்.''

'சாயத்திரை' நாவலின் உள்ளடக்கம் மற்றும் உருவம் குறித்துத் தனது மதிப்பீடுகளை வைத்து அறிமுகம் செய்யும் பொன்னீலன் இதன் தனித்தன்மையையும் புதுமைப்பண்பையும் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.

''மையமில்லாத, அழுத்தமில்லாத, கதாநாயகன் இல்லாத விளிம்பு மனிதரைப் பற்றிப் பேசுகின்ற இதைப் பின்நவீனத்துவ நாவல் என்று வகைப்படுத்தலாம். ஆனால், ஐம்புலன்களிலும் உணரத்தக்க நுட்பத்துடனும், ஒவ்வொன்றையும் நேர்த்தியாகச் சொல்லுகின்றார் ஆசிரியர். மொழி பெயர்ப்புத்தனமோ, அன்னியத்தனமோ, இல்லாத அசல் கலை இது. நவீனத்துவத்தையும், எதார்த்தத்தையும் குழைத்துப் பிசைந்து இழையாக்கி அதில் பின்னப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் இருண்மையோ, மயக்கமோ, ஓலமோ எதுவும் இல்லை''

இது, இவரது துல்லியமான நேர்மையான அறிமுகம். நாவலைக் கூர்ந்து படிக்கத்தூண்டுகிறது. தண்ணீருக்காக கண்ணீர் சிந்தாத குறையாகத் தவிக்கும் பெண்களின் நிலைமையை மனதை நெருடும் வகையில் நாவலாசிரியர் காட்சிப்படுத்துகிறார்.

மேட்டிலிருந்து கீழறங்கியவுடன் கனத்த வாகன இரைச்சல்களுடன் வீதி ஆரம்பமானது. வீதியின் ஓரத்திலிருந்து கிளம்பிய பைக்குகள். பனைமரங்களை கீழே வீழ்த்தி கறுப்பு வர்ணமிட்டது போல் இருந்தன. வலது மூலையில்




**சாயத்திரை (சுற்றுச்சூழல் நாவல்) சுப்ரபாரதிமணியன்**
**வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ.260/-**

ஒரு சிறுகூட்டம் கூடியிருந்தது. ரோசா அந்தக் கூட்டத்தின் அருகாமையில் சென்றாள். குழாயின் ஒரு நுனியிலிருந்து நீர் கொட்டிக் கொண்டிருந்தது. கொட்டும் நீரைப் பிடிப்பதற்கென்று குடங்கள் இருந்தன. கலைந்த முகத்துடன் இருந்த பெண்கள் ரோசாவைப் பார்த்தார்கள். ''இவர்கள் என்ன செய்கிறார்கள்?''

''குடி நீர்க்குழாயில் சிறு கசிவு. அந்தத் தண்ணீரைப் பிடிக்கிறார்கள்.''

''குடி நீருக்கு இவ்வளவு சிரமமா? டாலரும் பவுண்டுகளும் தண்ணீராய் ஓடும் நகரத்தில்?''

அவள் குழாயையும், தண்ணீர் பிடிக்கும் பெண்களையும் படம் பிடித்தாள். சொட்டுத்தண்ணீரைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கசிவு சட்டென வேகம் எடுக்க ஆரம்பித்ததும் பரபரப்பு ஏற்பட்ட மாதிரி பெண்கள் நெருக்கியடித்தனர்.

தொடர்ந்து பஞ்சுப் பொதிகளாலும், அவற்றைச் சலவை செய்து வெளுக்கச் செய்வதையும்,

சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதையும் நாவலாசிரியர் காட்சிப்படுத்துகிறார்.

"தெருமுனையில் நின்ற போது கம்பெனி கட்டடத்தை மறைத்துக் கொண்டு ஒரு லாரி நின்றிருப்பது தெரிந்தது. லாரியிலிருந்து நூல் மூட்டைகள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இயந்திரத் தன்மையுடன் அவை கைமாறிக் கொண்டிருந்தன. எங்காவது ஒரு புள்ளி பிசக வேண்டும் என ஆசைப்பட்டான். லாரியை நெருங்க நெருங்க நூலின் வாசம் மெல்ல மெல்லக் கிளம்பியது, சலவை செய்யப்பட்ட துணிகள் கிளர்த்திய சாயங்களின் வாசம் லாரியை நிறைத்திருந்தது."

மாற்றங்களுக்கிடையிலும் தொடர்ந்து நிகழ்ந்து வரும் கலை, கலாச்சாரப் பண்பாட்டு நிகழ்ச்சிகள் மக்களிடையே நிலைபெற்று வருவதையும், சாமி காட்டுதல் போன்ற நாட்டுப்புற நடைமுறைகளையும் இந்த நாவலில் அவர் காட்சிப்படுத்துகிறார். கும்மியடித்தல், கூத்தாடுதல், ஆடல், பாடல் போன்ற நிகழ்வுகள் மக்களிடையே தொடர்ந்து நிலைபெற்று நிற்பதையும் காட்சிப்படுத்துகிறார்.

மீன்களைப் பற்றிய விவரங்களையும் கதாபாத்திரங்கள் உரையாடல் மூலம் உணர்த்துகிறார்.

"ஏதோ ஐஸ் மீனுன்னு வரும். ஆனா இந்தத் தள்ளுவண்டியில் பொரிச்சு விக்கிற மீன்களெ நம்பக்கூடாது, சகாயமா இருக்குன்னு பாத்தா சாய்ப்பட்டறை தண்ணி நிக்கிற எடத்திலிருந்து மீனுப் புடிச்சிட்டு வந்தாலும் வருவாங்க."

இளம் வயதினர் காகிதத்தில் செய்த கத்திக்கப்பலை சாயத்தண்ணியில் விட்டு ஓட்டம் பர்க்கும் சோதனையைப் பதிவு செய்துள்ளார் நாவலாசிரியர்.

அடுத்து சௌண்டியம்மன் கோயில் சப்பரம் பற்றிய சண்டைசச்சரவு மக்களிடையே நிலவுவதைக் காட்சிப்படுத்தி இயற்கையின் அழிவை அறிமுகப்படுத்துகிறார்.

சுற்றுப்புறங்களிலும், பொது இடங்களிலும் சாயம் பூசப்பட்ட காகிதங்கள், துணிகள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை குவியும் நிகழ்ச்சிகளையும் நாவலில் பதிவு செய்கின்றார்.

வண்ணங்கள் நிறைந்த 'போஸ்டர்கள்' காம்பவுண்டுகள் சாயத்திரை நாவலில் துயரங்களின் பங்கேற்பு கணக்கில் அடங்காதது. இயற்கையில் காணப்படும் தாவரங்களின் நிறங்களைக் குறிப்பாக மலர்களில் காணப்படுபவை குறித்து மக்களுக்கு இயல்பான ஈடுபாடு இருப்பது அந்த நிறங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும் நோக்கத்தில் நீர்நிலைகளை மாசுபடுத்துவதும், வணிக முயற்சிகளுக்கு உள்ளாக்குவதும் உயிர் வாழ்க்கைக்கு எதிரான செயல்கள்.

'நீரின்றி அமையாது உலகம்' என்பது தமிழ்ச் சான்றோர் வாக்கு. ஆகவே, காடுகளையும், நதிக்கரைகளையும் சிதைக்கும் வகையில் அறிவியல் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கு உள்ளாக்குவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தை இந்த நாவல் தோற்றுவிக்கிறது.

சாயத்திரை நாவலாசிரியரின் பொதுப்பார்வை குறித்து பொன்னீலன் அழுத்தமான தெளிவான கருத்தைத் தெரிவிக்கிறார்.

வண்ணச் சாயத்திரை போர்த்திய திருப்பூர் நகரத்தின் உண்மையைக் காட்டுகிறார் சுப்ரபாரதிமணியன். நிஜமும் மாயமுமாக, வாழ்வும் சாவுமாக, அழுக்கும் அழுக்கனுமாக எல்லாவற்றையும் பக்கத்துக்குப் பக்கம் அடுக்கி சாயத்திரையைக் கிழித்து சோகத்தினைக் காட்டுகிறார்.

இது உண்மையிலேயே மறுக்க முடியாத புதினம்.

●

**கட்டுரையாளர், எழுத்தாளர்.**

**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

கட்டுரை



கண்ணுப் பிள்ளை என்ற முத்துக்குமாரசாமிப் பிள்ளை:

# வில்லியனூர் தந்த விடுதலை வீரர் முத்துக்குமாரசாமி



பேராசிரியர் கிருங்கை சேதுபதி

மகாகவி பாரதியின் புதுச்சேரி வாழ்வில் உடனிருந்து உதவியவர்களது பட்டியலும் பங்களிப்பும் இன்னும் முற்றாகக் கண்டறிந்து விரிவாகத் தொகுக்க வேண்டியுள்ளது என்பதைத் தொடர்ந்த தேடலில் அறிந்துகொள்ள முடிகிறது.

மகாகவி பாரதியின் வருகையால், நெல்லையில் இருந்தும், அரவிந்தர் வருகையால் வங்காளத்திலிருந்தும் தொண்டர் குழாம் புதுவைக்கு வந்து பணி செய்த காலத்தில், அவர்களுடன் இணைந்து களம் இறங்கிய புதுவையன்பர்கள் பலர். அவர்களுள் ஒருவர் வில்லியனூர் தந்த விடுதலை வீரர் அ.முத்துக்குமாரசாமிப்பிள்ளை.

**வில்லியனூர் வீரர்**

இவர், புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் கொம்யூனில் (வட்டத்தில்) உள்ள, மணக்குப்பம் என்ற சிற்றூரில் சோம.அண்ணாமலை பிள்ளை - எல்லம்மாள் தம்பதியருக்கு 15.06.1880 அன்று பிறந்தவர். புதுவைக் கல்வே கல்லூரியில், 1906இல் தமிழ் பிரவே (Brevet de langue Indigene) தேர்வெழுதி முடித்து, 1907, செப்டம்பர் மாதம் 19 முதல் பள்ளி ஆசிரியராகப் பணி தொடங்கியவர்.

வில்லியனூரில் பணிபுரிந்தபோது, கா.நமச்சிவாய முதலியார் எழுதிய மூன்றாம் வகுப்பிற்கான தமிழ்ப்பாட நூலில், ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வரலாற்றைப் பாடமாக நடத்துவதைத் தவிர்த்தார். அதனால், அரசின் நடவடிக்கைக்கும் ஆளானார். விசாரணையின்போது, “நாம் இருப்பது, பிரெஞ்சுக் குடியரசில். ஜார்ஜ் மன்னர் நமது ஆட்சிக்கு மன்னர் இல்லை” என்று துணிந்து பதில் அளித்தார். அதனைக் கல்வித்துறை இயக்குநர் ஏற்றுக் கொண்டார் என்பது வரலாறு.[1]

முத்துக்குமாரசாமிப்பிள்ளை ஆசிரியப் பணி ஏற்ற மறு ஆண்டில், புதுவையைப் புகலிடமாகக் கொண்டு வாழ்கிற நிலையில் பாரதி வருகிறார். வ.வே.சு.ஐயர், அரவிந்தர் உள்ளிட்ட சுதேசிகளின் வரவால் புதுச்சேரி, இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைமைக் கேந்திரமாகிவிடுகிறது.

“மகாகவி பாரதி, புதுவைக்கு வருமுன்பே, தமிழகத்தில் அன்று வாழ்ந்த தேசியவாதிகளால் திரு.முத்துக்குமாரசாமிப் பிள்ளையைப் பற்றிய தகவல்களை நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார். பாரதியும் பிள்ளையும் ஒருவருக்கொருவர் பரிச்சயமாகிக் கொள்வதற்கும், இணக்கமான நட்பை வளர்த்துப் பிடிப்பான நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஆதாரமாக அந்தத் தகவல்கள் அமைந்துள்ளன”[2] என்று கவி.வெ.நாரா. குறிப்பிடுகிறார். எனினும், இவர் தொடர்பான தகவல்களை பாரதி எங்கேனும் பதிவிட்டிருக்கிறாரா என்பதை இனித்தான் தேட வேண்டும். ஆனால் புதுவையில், பாரதியாருக்கு உதவிய அன்பர்களில் இன்றியமையாத இடத்தைப் பிடித்தவர் இவர் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இவருக்கும் பாரதிக்கும் இடையிலான நட்பிற்கு உறவுப் பாலமாகத் திகழ்ந்தவர் எஸ். நாகசாமி. இவர் பாரதியார் புதுவைக்கு வந்து ‘இந்தியா’ இதழை நடத்தத் தொடங்கியபோது, அவருக்கு உதவியாக வந்தவர். புதுவை ஈசுவரன் தருமராஜா வீதியில் உள்ள விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்று பாரதியன்பர்களால் குறிக்கப்பெறும் சபாபதிச் செட்டியார் இல்லத்தை வாடகைக்கு எடுத்துத் தங்கிய பாரதியுடன் வாழ்ந்தவர். பின்னர், அதே வீதியில், இருந்த 89 ஆம் வீடான ‘தர்மாலயத்தில்’ குடியேறியவர்.

‘தருமம்’ என்ற பெயரில், தேசிய தமிழ் மாதம் இருமுறை இதழை வெளியிடத் தொடங்கிய இடம் இதுவானதால், இந்த வீட்டிற்கு, ‘தர்மாலயம்’ என்ற பெயர் அமைந்துவிட்டது. நாட்டுப்பற்றையும், விடுதலை இயக்கத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு வெளிவந்த இவ்விதழுக்கு விலை இல்லை. புதுவையில் உள்ள அன்பர்கள் மனமுவந்தளித்த தொகையின் உதவியால் அச்சிடப்பட்டு, உள்ளூர், வெளியூர் அன்பர்களுக்கு அனுப்பப் பெறும். வெளியூர் அன்பர்கள் தரும் அன்பு நிதியும் இதற்கு உதவியாய் அமையும்.

இந்த இல்லத்தில், உடற்பயிற்சி வகுப்புகளும் நடக்கும். அதிகாலையில் இளைஞர்கள் இங்கு வந்து பயிற்சி செய்வதும் புதிதாய்க் கற்றுக்கொள்வதும் நடைமுறை. வெளி நகரங்களில் இருக்கும் இளைஞர்களை வரவழைத்து, அவர்களுக்கு நாட்டுப்பற்றை போதித்து, அதற்குரிய நூல்களைப் படிக்கச் செய்து, இந்திய விடுதலைக்குப் பாடுபட வேண்டும் என்று உணர்த்துகிற பணியையும் தர்மாலயம் செய்துவந்தது.

அப்படி வந்து இங்கே தங்கியிருந்து, துப்பாக்கி சுடும் பயிற்சி எடுத்துக் கொண்டுபோனவர்தான் வாஞ்சிநாதன். “1911ஆம் ஆண்டு மே மாதம் இறுதியில் ஒருநாள் இரவு சுமார் 11 மணிக்கு நானும் கண்ணுப் பிள்ளையும் வாஞ்சியை அழைத்துக் கொண்டு, பிஸ்டல், துண்டுப் பிரசுரங்களுடன் தர்மாலயத்திலிருந்து கால்நடையாய்ப் புறப்பட்டு முதலில் வில்லியனூர் போய் அங்கிருந்து பாகூர் வழியாக ஆற்றைக் கடந்து திருப்பாதிரிப்புலியூர் சென்று ரயிலில் ஏற்றி அனுப்பினோம்”[3] என்று நாகசாமியால் குறிப்பிடப்பெறும் கண்ணுப்பிள்ளைதான், நமது அ.முத்துக்குமாரசாமிப்பிள்ளை. (அது இவரது மறுபெயர்.)

தமது மைத்துனர் திரு. தங்கப்பிள்ளைக்குச் சொந்தமான அரியாங்குப்பம் தென்னந்தோப்பு, கருவடிக்குப்பம் சித்தானந்தசுவாமி கோயில் தோட்டம் ஆகிய பகுதிகளில் வாஞ்சிநாதனுக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளித்த பிள்ளை, இறுதியாக, அவனிடம் ஐந்து முறை சுடும் சேந்த் எத்தியேன் (Saint Etienne) மார்க் உள்ள பிரஞ்சு ரிவால்வாரைக் கொடுத்து, “தம்பி, ஆஷ் செத்தான் என்று அறிந்த பின்பே நீ தப்புவதற்கு முயல வேண்டும். முடியாமல் போனால், உனது வாயில் ரிவால்வாரை வைத்து நீயே சுட்டுக்கொள்” என்று உபதேசம் செய்து, தனது இடக்கையில் கீறி வழிந்த குருதியை அவன் நெற்றியில் வீரத் திலகமாய் இட்டு வழியனுப்பினார்.[4]

அவ்வண்ணமே, ஆஷ் என்னும் கொடுங்கோலனைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு வீரமரணம் எய்தினான் வாஞ்சிநாதன். இந்தச் செய்திகளைப் பலரறியத் தந்த பாரதி ஆய்வாளர் ரா.அ.பத்மநாபன், “ஆஷ் துரையை 1911இல் கொன்று தன்னையும் மாய்த்துக்கொண்ட வாஞ்சிநாதனை, நீலகண்ட பிரம்மச்சாரியின் அணியிலிருந்து கவர்ந்து, ஆஷ் கொலைக்கு வித்திட்டார் வ.வே.சு.ஐயர். வாஞ்சிக்குப் பலவித போதனைகளும், பயிற்சிகளும், கைத்துப்பாக்கிப் பயிற்சியும் முடிவில் பிரெஞ்சுக் கைத்துப்பாக்கியும் தந்து ரத்த திலகமிட்டு அனுப்பியவர்கள் நாகசாமியும், கண்ணுப்பிள்ளையுமே” என்று ‘சித்திரபாரதி’யில் பதிவிடுகிறார்.[5] அதில், ‘வாஞ்சிநாதனும் அவனுக்குப்

பயிற்சி அளித்தவரும்' என்ற தலைப்பின்கீழ், கண்ணுப்பிள்ளை உடனாய வாஞ்சிநாதன் படத்தையும் தந்திருக்கிறார். அதுவரையில் வெளிவராத அப்படத்தை, நினைவுகூர்ந்து எடுத்துத் தர வைத்தவர், கண்ணுப்பிள்ளையின் துணைவியார் கண்ணம்மாள். இவர்கள் திருமணம் நடைபெறத் தூண்டுதலாய் இருந்தவர் அரவிந்தர்.

ஆஷ் கொலை அரங்கேற்றம் தொடர்பான தகவல்களை அரவிந்தரோ, பாரதியோ முன்னர் அறிந்திருக்கவில்லை. ஆனாலும், அதன்பின்னர் புதுவையில் அவர்களுக்கு நேர்ந்த நெருக்கடிகள் அளவில்லாதவை. தொடர்ந்து, வாஞ்சிநாதன்போல வன்முறையில் பிள்ளை இறங்கிவிடுமுன் காக்க, அரவிந்தர் மேற்கொண்ட அன்பு முயற்சியால், 23.08.1912இல் திருமணம் நடந்தது. மூன்று மகன்கள், ஒரு மகள் என நால்வரைப் பெற்றனர் பிள்ளை தம்பதியர். எந்த நிலையிலும் தன் விடுதலை உணர்வை விட்டவராக, பிள்ளை இல்லை.

## இந்திய எல்லைக்குள் 'இந்தியா'வைக் கொண்டு செலுத்தியவர்

"பாரதியின் ஆக்கங்கள் தாங்கி புதுவையில் அச்சிடப்பெற்ற 'இந்தியா' இதழ்களுக்கு, ஆங்கில அரசு தடைவிதித்திருந்த காலத்தில், பிரெஞ்சிந்திய எல்லை கடந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் அவற்றைக் கொண்டு சேர்த்த புண்ணியர், முத்துக்குமாரசாமி. அவர் 'இந்தியா' இதழ்களைக் கட்டாகக் கட்டித் தன் தலையிலே சுமந்து, நடையாக நடந்து தமிழகத்தின் எல்லைகளில் யாரிடம் சேர்க்க வேண்டுமோ, அக்காரியத்தைத் திறம்படச் செய்துவந்தார். 1910 மார்ச் வரையில் 'இந்தியா' ஏடு 17 மாதங்கள் வெளியாகியது. பாரத சுதந்திரப் போரின் கேடயமாக விளங்கிய அந்த ஏட்டின் ஆசிரியர் பாரதிக்கும், அதற்கும் அவர் துணையாக நின்று தனது முழு ஆதரவை நல்கிவந்தார்" என்கிறார் கவி வெ.நாரா.[6] அது அவ்வளவு எளிதான பணியில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது நாகசாமியின் இன்னொரு பதிவு.

"புதுவையில் அந்நாளில் இருந்த தமிழ்நாட்டுத் தேசபக்தர்கள் பாரதியார், வ.வே.சு.ஐயர், எஸ். ஸ்ரீநிவாசாச்சாரியார், நான் ஆகிய நால்வரே. எங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் இழைத்த தொந்தரவுகள் இவ்வளவுதான் என்று சொல்ல இயலாது. தபால் காரியாலயம் மூலம் எங்களுக்கு எதுவும் கிடைக்கவிட்டதில்லை. அப்படியே தவறி ஏதாவது வந்தாலும் அதைப் பறிமுதல் செய்துவந்தார்கள். புதுவை வாசிகளிடம் தேசபக்தர்கள் பேசினால் உடனே, அவர்களிடம் சி.ஐ.டி. சென்று அவர்களைப் பயமுறுத்திப் பேசாமல் செய்துவந்தார்கள். அப்படியும் அவர்கள் மீறிப் பேசினால் பிரிட்டிஷ் எல்லைக்குள் சென்றபொழுது அவர்களைக் கைது செய்து இம்சித்து வந்தார்கள்.... தேசபக்தர்கள் தனியே அல்லது சேர்ந்து வெளியே சென்றால் சி.ஐ.டி. சிறிது தூரத்தில் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் எங்கெல்லாம் போனார்கள். யார் யாரைக் கண்டு அவர்கள் பேசினார்கள் என்று சி.ஐ.டி. கவனித்துவந்தார்கள்."[7]

அப்படி ஒரு ஒற்றனால் கவனிக்கப்பட்டவர் இந்த முத்துக்குமாரசாமி பிள்ளை.

## ஒற்றனை உதைத்துப் பெற்ற டயரி

16.07.1914இல் முதலியார் பேட்டையில் பணியாற்றிவந்த முத்துக்குமாரசாமி பிள்ளை, முத்திரப்பாளையம் அரசினர் பாடசாலைக்கு மாற்றப்பட்ட காலத்தில், உழவர் கரை கிராமத்தில் குடியேறி இருந்தார். அப்போதும் அவரை வழக்கம்போல், ஆங்கிலேய அரசின் ஒற்றன் பின் தொடர்ந்து கண்காணித்து வந்தான். அத்துடன், "கடன்காரன், வாங்கினால் கொடுக்க மாட்டான். மோசடிகள் பல புரிந்தவன்" என்று பிள்ளை பற்றிப் பல்வேறு அவதூறுகளும் பரப்பி வந்தான். இந்தச் செய்திகளைக் கேள்விப்பட்ட பிள்ளை அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கத் திட்டமிட்டார்.

ஒருநாள் மாலை. இருள் படியத் தொடங்கும் நேரம். மேட்டுப்பாளையம் ஐயனார் கோயில் பாலத்தருகே முத்துக்குமாரசாமி பிள்ளை சென்று கொண்டிருக்கும்போது, அந்த ஒற்றன் வசமாகச் சிக்கிக் கொண்டான். தனித்து வந்த அவனைப் பிடித்து மடக்கி, தன் காலில் போட்டு நடக்கும் கட்டையைக் கொண்டு அடித்து உதைக்கத் தொடங்கினார். வலி பொறுக்க முடியாமல் அந்த ஒற்றன், நழுவி ஓட்டம் எடுத்தபோது, அவன் வைத்திருந்த டைரி கீழே விழுந்துவிட்டது. அதனை எடுத்து வசப்படுத்திக் கொண்ட பிள்ளை, பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார். அதில், பாரதியார், அரவிந்தர், பிஜாய் குமார் நாயக், நொளினிகாந்த் குப்தா, வ.வே.சு.ஐயர், திருமலாச்சாரி, மாடசாமி, நாகசாமி உள்ளிட்ட தேசபக்தர்களின் பெயர்கள், முகவரிகள், வாழ்க்கைக் குறிப்புகள் ஆகியன ஏ.பி.சி. என வகுப்புகள் பிரித்துப் பதிவிடப்பட்டிருந்தன. அப்பட்டியலில், பிள்ளையின் பெயரும் அவரது மைத்துனர் தங்கவேலுப்பிள்ளையின் பெயரும் பிற புதுவைசார் தேசியப் பற்றாளர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஒருவேளை பிள்ளையின் கைக்குச் சிக்காமல் போயிருந்தால், அந்தக் குறிப்புகளால் சுதேசிகளுக்கு என்னென்ன கேடுகள் தொடர்ந்திருக்குமோ, தெரியாது. அதனைக் கைப்பற்றிய பிள்ளையைத் தொடர்ந்து அவர்தம் குடும்பத்தாரும் அதனைப் பாதுகாத்து வெளியிட்டதனால், அந்தக் குறிப்புகள் அழியாத வரலாற்றில் அடித்தளப் பதிவுகளாகி, விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒருவராக முத்துக்குமாரசாமிப்பிள்ளையை நிலைநிறுத்தியிருக்கின்றன.

"பாரதி, ஐயர் தொடர்பால் தாமும் பிரிட்டிஷ் போலீஸ் சி.ஐ.டி.யின் வேவுப் பார்வைக்கு இலக்கான கண்ணுப்பிள்ளை, 1914இல், தம்மைப்பற்றிப் பொய்ப்புரளிகளைப் பரப்பிய ஒரு வேவுக்காரனுக்குத் தக்க பாடம் கற்பிக்க, அவனை நையப்புடைத்து அவனுடைய பையிலிருந்த, ரகசியக் குறிப்புகள் கொண்ட 'டயரி'யைப் பிடுங்கிக் கொண்டார். இந்த 'டயரி' போலீஸ் வேவுக்காரர்கள், பாரதி, ஸ்ரீநிவாஸாச்சாரி, ஐயர், அரவிந்தர், கண்ணுப்பிள்ளை முதலியவர்களைப் பற்றி என்ன நினைத்தார்கள் என்று நமக்குத் தெரிவிக்கும் அரிய வரலாற்றுப் பொக்கிஷமாக உளது"[8] என்று குறிப்பிடும் பாரதி ஆய்வாளர் ரா.அ.பத்மநாபன், தனது 'சித்திரபாரதி' நூலில், வி.வி.சுப்பிரமணிய ஐயர், நாகசாமி ஐயர், கண்ணுப்பிள்ளை ஆகியோர் பற்றிய குறிப்புப் பக்கங்களைப் படமாக்கி இணைத்துள்ளார்.[9] அதில், பாரதி, அரவிந்தர் உள்ளிட்டோர் குறித்த பதிவுப்பக்கப் படங்கள் இடம்பெறவில்லை. ஆயினும், பிள்ளை அவர்களின் குடும்பத்தாரால் பாதுகாக்கப்பட்டுவரும் அந்த 'டயரி'யில் இடம்பெறும் பக்கங்கள் பிளாக் செய்யப்பட்டு, அவர்தம் புதல்வர் முத்து.சுந்தரமூர்த்தி அவர்களது, 'வில்லியனூர் விடுதலை வீரர்' நூலில் வெளியிடப்பெற்றுள்ளன. அக்கால வழக்கப்படி கூட்டெழுத்திலும், பேச்சு வழக்கிலும் தவறுகள் மலிந்த அக்குறிப்புகளில் சில எழுத்துகள் புரிபடவில்லை. Group, Class என்று வகைபிரித்து அவற்றின் கீழ், பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவை பின்வருமாறு:

**ஒற்றர் டயரிக் குறிப்பில்...**

*1வது குருப்பு*

*A கிளாஸ்*

*(1) சீனிவாசாச்சாரி*

*B கிளாஸ்*

*(1) அரவிந்தகோஷ்*

*(2) பிஜால் குமார நாய்க் (சக்கிரவர்த்தி)*

*(3) நாளிகாந்த சேன் குப்தா (பஸ்கி)*

*(4) சுரேந்திரகோஸ் (மொனி)*

*(5) சூரேஸ் சக்கிரவர்த்தி (நளயி)*

*(6) றாமசாமி அய்யங்கார் (a) றாமசாமி (a ) நாறாயண அய்யர்*

*(7) பார்த்தசாரதி அய்யங்கார்*

*C கிளாஸ்*

*(1) திருமலாச்சாரி*

*(2) செளந்திர றாஜலு*

*(3) சுப்பிரமணிய ஆசாரி*

*2வது குருப்பு*

*A கிளாஸ் இல்லை*

*B கிளாஸ்*

*(1) ஜோகோந்திர நாத்பால்*

*(2) (மகோ உபாத்தியாயர்)*

*(3) ஜோசப் டேவிட்*

*C கிளாஸ்*

*(1) துரைக்கண்ணு*

*(2) சுந்தரேசய்யர்*

*(3) கான்றாஜேந்திரம்*

*தலைமறைவாய் இருக்கும் வாரண்டு நபர்கள்*

*(1) S.M. மாடசாமி பிள்ளை*

*(2) CIL P. திருமலாச்சாரி*

*3வது குருப்பு*

*A கிளாஸ்*

*(1) V.V.சுப்பிரமணிய அய்யர்*

*(2) C .சுப்பிரமணிய பாரதி*

*(3) நாகசாமி*

*B கிளாஸ்*

*(1) கனகறாஜன்*

*(2) வாத்தியார் சுப்பிரமணிய அய்யர்*

*(3) சாமிநாதய்யர்*

*(4) வெங்கிடேச அய்யர்*

*(5) கண்ணுப்பிள்ளை*

*(6) தங்கவேலு பிள்ளை*

*C கிளாஸ்*

*கிர்ணசாமி நாய்டு*

இவற்றைத் தொடர்ந்து இவ்வரிசையில் ஒவ்வொருவர் குறித்தும் தனிக் குறிப்புகள் அந்த டயரியில் எழுதப்பட்டிருந்தன. அவற்றுள் பாரதியார் குறித்த பதிவும், அவருக்கு உதவிய

அன்பர்களுள், நாகசாமி, கண்ணுப்பிள்ளை (எ) முத்துக்குமாரசாமிப்பிள்ளை, கனகராசன் ஆகியோர் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு அமைகின்றன.

### C. சுப்பிரமணிய பாரதி

*தர்மறாஜா ஈஸ்வரன் கோயில் தெரு 47 நீ.வீடு. சம்சாரம் செல்லம்மாள். பெண் குழந்தை சகுந்தலா, பாட்டனார் குருசாமி அய்யர். மாமன் சாம்பசிவ அய்யர். றெட்டியா புறம் ஷயார் றெட்டியா புறம் ஸ்கூலில் ஜெம்னாசியம் வாத்தியார்.*

### சினேகிதர் (1)தங்கவேலு பிள்ளை சஸ்பென்டு

*(2) முத்துக்குமரசாமி பிள்ளை 82 நீ.வீடு ரூழ் பூனிசர் வீதி*

*(3) சுல்தான் பெட்சுலேமான் சாயப்பு வில்லியனூர்*

*சகலை விசுவனாதய்யர் பண்டா குமாஸ்தா அனுமந்து.*

*காடு சாகி செட்டியார் தம்பி வேத றாமய்யரும் அவருடன் இருக்கிறார். மூத்த சம்சாரத்திற்கு சுரணம்மாள் என்ற பெண் குழந்தை கடையம் என்ற ஊரில் பாட்டனார் வீட்டில் இருக்கிறது.*

### கண்ணுப்பிள்ளை

*முத்துமாரியம்மன் கோயில் தெரு 98நீ. வீடு. முதலியார் பேட்டை பிரஞ்சி ஸ்கூல் வாத்தியார். அரவிந்தகோஷ், V.V.S பார்ட்டிகளுக்கு ஒத்தாசை செய்யக்கூடியவன். பந்துக்கள் தங்கவேலு பிள்ளையின் மைத்துனர். மாமனார்.....சம்சாரம் பொன்னு கண்ணம்மாள். தகப்பன் சோம. அண்ணாமலை பிள்ளை. மைத்துனர் ரெத்தனம் பிள்ளை...*

### நாகசாமி

*89 தர்மறாஜவீதி, இவர் V.V.S வீட்டிலேயே இருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். வையாபுரி கந்தசாமி செட்டி இவருக்கு பணம் ஒத்தாசை செய்கிறார்.*

*சினேகிதர்கள்- ரெத்தினசபாபதி நாயக்கர், தங்கவேலு பிள்ளை, கண்ணுபிள்ளை, சிவக்கொழுந்து, றாஜம் நாயக்கர், ஆருமுகஞ் செட்டி.*

### கனகறாஜன்

*ஈஸ்வர தர்மராஜா வீதி 43 நம்பர் தெரு. தகப்பனார் முருகேசம்பிள்ளை. தமையனார் இவர் பாரிசில் இஞ்சினீர் வேலைக்கு வாசிக்கிறார். தாய்மாமன் கோவிந்தறாஜ முதலியார். B.A.B.L ஹைகோர்ட்டு வக்கீல். 41நீ.வீடு பூந்தமலை றோட்டு, சென்னை. பாரதிக்கு ஒத்தாசை செய்யக்கூடியவன்.ரெங்கநாதன், சிவப்பிரகாசம் என்ற காலாடிகள் இவனுக்கு சினேகிதம்.*

இந்த வரிசையில் ஏனையோர் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றிருக்கின்றன.[10] அவற்றைப் படங்களில் காணலாம்.

இவற்றையெல்லாம் இறுதி வரை பாதுகாத்து வைத்திருந்த கண்ணுப்பிள்ளை, தன் வாழ்வின் இறுதிக்காலம் வரை இந்திய நாட்டிற்கான கடமைகளைப் புதுவையில் இருந்து நிகழ்த்திக் கொண்டே இருந்திருக்கிறார். பிரிட்டிஷ் அரசிடமிருந்தும் பிரஞ்சு அரசிடமிருந்தும் நாடு விடுதலை பெற இடையறாது உழைத்த இவர், தமது 63ஆவது வயதில், 10.02.1943 அன்று மறைந்தார். ஆயினும் அவர் ஆற்றிய தொண்டுகள் அவர் புகழை என்றும் நின்று இசைத்துக் கொண்டே இருக்கும்.

### சான்றெண் விளக்கம்

1. முத்து சுந்தரமூர்த்தி, வில்லியனூர் விடுதலை வீரர், ப.220.
2. மேலது, ப.149.
3. புதுவையில் தேசபக்தர்கள், பக்.47-48.
4. முத்து சுந்தரமூர்த்தி, வில்லியனூர் விடுதலை வீரர், ப.154.
5. ரா.அ.பத்மநாபன், சித்திரபாரதி, ப.78.
6. முத்து சுந்தரமூர்த்தி, வில்லியனூர் விடுதலை வீரர், ப.150.
7. புதுவையில் தேசபக்தர்கள், பக்.53-54.
8. ரா.அ.பத்மநாபன், சித்திரபாரதி, ப.78.
9. மேலது, ப.79.
10. முத்து சுந்தரமூர்த்தி, வில்லியனூர் விடுதலை வீரர், பக்.41-52.

### துணை நின்றவை


1. சித்திர பாரதி, ரா.அ.பத்மநாபன், காலச்சுவடு/ கடவு வெளியீடு, நாகர்கோவில், மு.ப.2006,
2. வில்லியனூர் விடுதலை வீரர், முத்து சுந்தரமூர்த்தி, சேகர் பதிப்பகம், சென்னை, மு.ப.2001,
3. புதுவையில் தேசபக்தர்கள், சாரதி பதிப்பகம், சென்னை, மு.ப.1966.
4. சுதந்திரம்- பொன்விழா மலர், (1934-1984)


●

**கட்டுரையாளர் : எழுத்தாளர்**




# இடுக்கி மாவட்ட தேயிலைத் தோட்டத் தொழில்சார் கலைச்சொற்கள்



ந.வடிவேலன்

தேயிலைத் தோட்டங்களில் வாழும் மக்களின் பேச்சுவழக்கு, தொழில்சார் கலைச் சொற்கள் பற்றிய ஆய்வு கவனம் பெறத்தக்கது. தேயிலைத் தோட்டக் கூலிகளாக இடுக்கி மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து சென்று, இன்றும் தலைமுறைகள் தாண்டி தேயிலைத் தோட்டத்தில் தமிழர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்வாறு பணிபுரிபவர்களின் முன்னோர், ஆங்கிலேயர் காலத்தில் கூலி அடிமைகளாக வந்தவர்கள். காலனியக் காலத்தில் இடுக்கி மாவட்டத்தில், தேயிலைத்தோட்டம் உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் மேலதிகாரிகளும், பின்லே முயர் என்ற இலங்கை நில உரிமையாளரும் இடுக்கி தேயிலைத் தோட்டத்தை மேற்பார்வை செய்தனர். சிங்களக் கலப்புச் சொற்கள் தேயிலைத் தோட்டங்களில் பயன்பட்டது. ஆங்கிலேயர்கள் கூலிகளிடம் சம்பாஷணை மூலம் வேலை வாங்கினர். கேரளாவில் இருப்பதால் மலையாளத்தை தாய் மொழியாகக் கொண்டவர்களும் கூலிகளாகப் பணியாற்றி வந்தனர். இதனால் தற்காலத்தில் மலையாளம் கலந்த ஒருசில கலைச்சொற்களையும் பயன்படுத்தி வருகின்றனர். இடுக்கி மாவட்டம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடம் களஆய்வு மூலம் சேகரித்த கலைச் சொற்களை ஆவணப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

### இடுக்கி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டம்

சங்க இலக்கியங்கள் காட்டும் சேர நாடு இன்றைய கேரளம் ஆகும். கேரளாவில் காணப்படும் பதினான்கு மாவட்டங்களுள் இடுக்கி மாவட்டமும் ஒன்றாகும். பெரும்பான்மையாக தமிழர்களே வாழ்ந்து வருகின்றனர். தொடக்க காலகட்டங்களில் பூர்வகுடிகளான பழங்குடி மக்களே வாழ்ந்துவந்தனர். பொ.ஆ. ஆயிரத்து இருநூற்று ஐம்பதாம் ஆண்டில் பூஞ்சார் பாண்டியர்களின் வசம் வந்தது. திருவிதாங்கூர் சமஸ்தான பிரிட்டிஷ் ரெஸிடன்சியாக இருந்த ஜான் டேனியல் மன்றோ மூணாறுக்கு வந்தார். தேயிலை வேளாண்மைக்கு ஏற்ற பகுதியாக இடுக்கி மாவட்டத்தின் கண்ணன் தேவன் மலைப் பகுதி டேனியலை மிகவும் ஈர்த்தது. ரோகிணி திருநாள் கேரளவர்மா வலிய ராஜாவிடம் மன்றோ பேச்சு வார்த்தை நடத்தி அனுமதி பெற்று கண்ணன் தேவன்மலைப் பகுதியில் 1,36,600 ஏக்கர் பரப்பை குத்தகைக்கு எடுத்துக் கொண்டார். வைப்புத் தொகை ரூ.5000 ஆண்டொன்றுக்கு குத்தகைப் பணம் ரூ.3000 என்று ஒப்பந்தமிட்டுத் தேயிலைத் தோட்ட விவசாயத்தைத் தொடங்கினர்.எனவே தான் ஜான் டேனியல் மன்றோவை மூணார் சிற்பி என அழைக்கப்படுகின்றனர். பொ.ஆ.1880 ல் எ.ஹெச்.

சார்ப் என்பவர் தேயிலைச் செடிகளை பார்வதி எஸ்டேட்டில் நட்டார்.

தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிய மக்கள் தமிழகத்திலிருந்து கங்காணிகள் மூலம் அடிமைகளாக அழைத்துவரப்பட்டனர். ஆரம்ப காலங்களில் 'கூலி' எனும் சொல் தேயிலைத் தோட்ட அடிமைகளை மட்டுமே குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. மூணாறைச் சுற்றி 16 தேயிலைத் தோட்டங்களை உருவாக்கினர். 1902 ஆம் ஆண்டு மாட்டுப்பட்டி, குண்டளை வழியாக டாப் ஸ்டேஷனுக்கு இரயில்கள் ஓடத் தொடங்கின. பொ.ஆ.1924 ஜூலை மாதம் 17ஆம் தேதி ஏற்பட்ட மழையில் இரயில் பாதைகள் அடித்துச் செல்லப்பட்டன. இந்த ஆண்டுடன் நூறு ஆண்டுகள் ஆகின்றன. ஆரம்ப காலக்கட்டத்தில் தமிழர்கள் மட்டுமே தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிந்தனர். பொ.ஆ 1964 இலங்கையில் நடைபெற்ற சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தில் வெளியேற்றப்பட்ட தமிழர்களும் இடுக்கி மாவட்ட தேயிலைத் தோட்ட தொழிலாளர்களாக பணியில் குடியமர்த்தப்பட்டனர். பின்னர் கேரளாவைச் சார்ந்தவர்களும் பணிபுரிய வந்தனர். தேயிலைத் தோட்டத்தில் பணியமர்த்தப்பட்டவர்கள் தலைமுறைகள் தாண்டியும் கேரளாவிலேயே தங்கிவிட்டனர்.

இந்த வரலாற்று பின்புலத்தில் ஆங்கிலேயர்கள் கூலிகளிடம் பயன்படுத்திய சொற்கள், பணிபுரியும் பணியாட்கள் உள்வாங்கிய சொற்கள், சிங்கள மொழியை பின்புலமாகக் கொண்டு இலங்கையில் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிந்தவர்கள்., மலையாளத்தை தாய் மொழியாகக் கொண்ட கேரளாவை சார்ந்தவர்கள். மேலும் இடுக்கி மாவட்டம் கேரளாவில் இருப்பதால் மலையாளம் கலந்த சொற்கள் ஆகியவற்றை தேயிலைத் தோட்டங்களில் பயன்படுத்துகின்றனர்.

### தொழில்சார் கலைச் சொற்கள்

தேயிலைத் தோட்டங்களில் பயன்படுத்தும் சொற்களை கூறலாம். இந்த கலைச் சொற்கள் வேறு துறைகளில் காண இயலாது. சான்றாக மட்டக்காடு, நிரப்பு ஒடித்தல், மட்டக்கத்தி போன்றவை இங்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றன.

தொழில்சார் கலைச்சொற்கள் ஒவ்வொரு தொழிலிலும் பயன்படுத்துகின்ற சிறப்புச் சொல். தச்சுத்தொழில், மண்பானைத் தொழில், விவசாயம், பொற்கொல்லர்கள், மருத்துவம், கணிப்பொறி, போன்ற ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு விதமான கலைச் சொற்களை பயன்படுத்துகின்றனர். தேயிலைத் தோட்டங்களுக்கென தனி கலைச் சொற்கள் உள்ளன. அவற்றை தேயிலைத் தோட்ட வேளாண் கலைச் சொற்கள், பணியாளர்கள் தொடர்பான கலைச் சொற்கள், பயன்படுத்தப்படும் புழங்கு பொருட்கள் இதர கலைச் சொற்கள் ஆகிய பிரிவுகளில் வகைப்படுத்தலாம்.

### தேயிலைத் தோட்ட வேளாண் கலைச் சொற்கள்

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டம் உருவாக்கப் பெற்ற நாள் முதல் இன்று வரை மரபார்ந்த சொற்களை பயன்படுத்தி வருகின்றனர். காடுகளை அழித்து தேயிலை எஸ்டேட் உருவாக்கினர் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஆனால், இன்று வரை தேயிலை காடு, மட்டக் காடு பச்சக் காடு என்ற சொல்லையே பயன்படுத்திவருகின்றனர். காடு என்ற மரபார்ந்த சொல்லையே இன்று வரை பயன்படுத்தி வருகின்றனர். இதே போல் தேயிலைத் தோட்ட வேளாண்மையிலும் மரபார்ந்த கலைச் சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

காடு – தேயிலைத் தோட்டம்

கையெடுப்பு – கைகளால் தேயிலைக் கொழுந்தினை எடுப்பது. ஆரம்பகாலங்களில் இந்த முறையிலேயே கொழுந்தெடுத்தனர்.

மட்டம் ஒடிக்கும் காடு – கவாத்து வெட்டி முதன்முதலில் கொழுந்து எடுக்கும் போது தேயிலைக் கொழுந்து சரிவர மட்டமாக இருக்காது. அந்த தேயிலைத் தோட்டத்தினைக் குறிக்க பயன்படுத்தும் சொல்.

கன்னி இலை – முதலில் வெளிவரும் கொழுந்து

ஒரிலைத்திரி – ஒரு இலையும் அதோடு சேர்ந்து நிற்கும் இளம்திரியும்

இரண்டிலைத்திரி – இரண்டு இலையும் அதன் நடுவில் நிற்கும் இளம் திரியும்

மூன்றிலைத்திரி – மூன்று பெரிய இலைகளும் ஒரு இளம் திரியும்

காப்பு வரக் கூடாது – முற்றிய இலைகளோடு தளிர் வருதல்

பக்கம் தாளக்கூடாது – தாள என்பது மலையாளத்தில் கீழே என்று பொருள்

தேயிலைச் செடியின் மேல் ஒரே நிரப்பாக இருக்க, வேண்டும். மட்ட குச்சியில் கீழே போகக் கூடாது

முரட்டு இலை – முற்றிய இலை

காம்பு வரக்கூடாது – முற்றிய இலைகளுடன் தளிர் வருதல்

கவ்வாத்து – (Prunning) இடுக்கியில் வாழும் மக்கள் கவ்வாத்து என்ற சொல்லை பயன்படுத்துகின்றனர். சிங்களர்கள் 'கப்பாத்து' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். அங்கிருந்து கவ்வாத்து என திரிபு பெற்று வந்திருக்கலாம். நடப்பட்டத் தேயிலைக் கன்றுகள் அதிகப்படியான உயரத்தில் வளராமல் இருப்பதற்கும் அதிகப்படியான கொழுந்துகள் எடுப்பதற்கும் நடுத்தண்டு பகுதிகளை சிதறாமல் வெடிக்காமல் வெட்டுதல்

அடிவெட்டுக் காடு – கவ்வாத்து வெட்டும் காடு

அடிக் கவ்வாத்து – மண்ணிலிருந்து 18 இஞ்சு உயரத்தில் வெட்டுதல்

மேசைக் கவ்வாத்து – 24 அல்லது 26, 28இஞ்சு அடி உயரத்தில் வெட்டி மாற்றுதல்

பாசி எடுத்தல் – தேயிலைச் செடியை சுற்றிலும் சுத்தம் செய்யும் பணி

நிரப்பு ஒடித்தல் – மட்டம் ஒடித்தல் முடிந்த பிறகுள்ள காட்டில் கொழுந்தெடுப்பதை நிரப்பு ஒடித்தல் என்று கூறுவர்.

பேர் போடுதல் – கொழுந்து அளவினை வைத்து ஊதியத்தினை உறுதி செய்தல், அளவு குறைவாக இருப்பின் முழு ஊதியம் கிடைக்காது.

கள்ளப் பேர் போடுதல் – எடை குறைவாக இருக்கும் நிலையில் அதிகம் இருப்பதாக பொய்க் கணக்கு எழுதுவதைக் கூறுவது.

செக்ரோல் (Check roll) – தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் நிரந்தரப் பதிவு எண் கொழுந்தெடுக்கும் தொழிலாளி இந்த எண் அடிப்படையிலேயே கொழுந்துகள் எடை போடப்படும். ஊதியம் வழங்கப்படும். இலங்கையிலும் இவ்வாறே கூறுகின்றனர்.

பிரதி - Salary slip சம்பள விவரம்

தொழில்சார் புழங்கு பொருட்கள் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளிகள் கொழுந்தெடுக்கவும் தோட்டங்களில் பணி செய்யும் பணிகளுக்கும் ஏற்ப கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். முந்தைய காலங்களில் பயன்படுத்திய கருவிகளை இப்போது பயன்படுத்துவதில்லை. சில பணிகளுக்கு நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனாலும் முந்தைய காலங்களில் பயன்படுத்திய கருவிகளின் விவரங்களை களஆய்வின் போது கூறுகின்றனர்

மட்டக் கம்பு (ஈத்தல்) – கொழுந்தினை ஒரே சமமாக எடுக்க தேயிலைச் செடியின் மேல் இரண்டு செடிகளுக்கு நடுவில் குச்சியை மட்டமாகப் போட்டு கொழுந்தெடுக்க பயன்படுத்துவது

மட்டக் கத்தி – கொழுந்தெடுக்க பயன்படுத்தும் கத்தி கையடக்கமாக சிறிய அரிவாள் போன்றத் தோற்றத்துடன் இருக்கும்.

பட்டம் – தேயிலைத் தோட்டத்தில் கொழுந்தெடுக்கும் காட்டில், அடுத்த நாள் கொழுந்தெடுக்க ஏற்ற வகையில் தேயிலைத் தோட்ட சால்களுக்கு இடையில் மாறுகளை வெட்டி மாற்றும் கத்தி. பட்டம் போன்று மெல்லிய வளையும் தன்மை கொண்டது. அதனால் பட்டம் என அழைத்து வருகின்றனர். இதில் இரு வகைகள் உள்ளது.

கவாத்துக் கத்தி – தேயிலைச் செடியினை வெட்டும் கத்தி, தற்போது Pruning machine எனும் இயந்திரத்தினைக் கொண்டு வெட்டுகின்றனர்.

தாட்டு மறைப்பு – தேயிலை எடுக்கும் பெண்கள் பக்கவாட்டில் வளர்ந்து வரும் குச்சிகள் கிழிக்காமல் பாதுகாப்பிற்காக இடுவது

முக்காலி – எடை போடும் கருவியை சுமக்கும் கம்பு.

நிறை – எடை

ரோதை – ரோதை என்பதற்கு சக்கரம் எனப் பொருள்.

வாகனங்கள் அதிகம் இல்லாத காலங்களில் தேயிலைக் கொழுந்துகளைக் கம்பெனிக்கு எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்டவை.

முள்ளுக் குத்தி – தேயிலைச் செடிகளுக்கு உரம் வைக்க, தோண்டப் பயன்படுத்தும் கருவி ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்டது.

### அலுவலகம் சார்ந்த கலைச் சொற்கள்

ஆங்கிலேயர்கள் ஆட்சியாளர்களாக இருக்கும் காலங்களில் தொழிலாளர்களிடமும், அலுவலக ஊழியர்களிடமும் பயன்படுத்திய சொற்கள் இன்று வரை பயன்பாட்டில் உள்ளன. பொருள் மாறுபடாமல் ஆங்கிலமும், தமிழும் கலந்த சொற்களாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

டீ ஆபிசு – Tea Factory தேயிலைத் தொழிற்சாலை

ஆயுதப்புரை – கிடங்கு, வேலைக்குத் தேவையான பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்கும் இடம்

பிரட்டுக் களம் – ஆங்கிலேயர் காலத்தில் காலை சங்கு ஊதியதும் அனைவரும் பிரட்டுக்களத்தில் (Parade Ground) ஒன்றுகூட வேண்டும், ஆங்கிலேயர் பயன்படுத்திய சொல் மருவி இன்று வரை பிரட்டுக் களம் என்று அழைக்கின்றனர்.

மஸ்டர் – அலுவலகம்

குசுனி – சமையலறை குசினா (Cozinha) என்ற போர்த்துக்கீசிய சொல்லிலிருந்து இலங்கை சிங்கள மொழிக்கு வந்தது. இலங்கையிலிருந்து இடுக்கி தேயிலைத் தோட்டத்திற்கு பணிபுரிய வந்த ஆங்கிலேயர் பங்களாவில் உள்ள சமையலறையையும் அழைக்க பயன்படுத்தினர். தோட்டத் தொழிலாளிகள் தனது வீட்டு சமையலறையும் குசுனி என்றே இன்று வரை அழைத்துவருகின்றனர்.

நிலுவைக் களம் – கொழுந்துகளை எடைப் பார்க்கும் இடம்..

இறாத்தல் – (Mass) ஆங்கிலேயர் காலத்தில் எடை அளவினை குறிக்கும் பிரிட்டிஷ் சொல் இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

தேயிலைப் புரை – தேயிலைத் தொழிற்சாலை (Tea Factory)

தவறணை – எஸ்டேட்டுக்கு தேவையான தேயிலைச் செடிகளை முளைக்க வைக்கும் இடம். இலங்கையில் ரவுண்டு என அழைப்பர்

புள்ளப்புரை – தேயிலைத் தோட்டத்தில் பணி செய்யும் குழந்தைகளை பாதுகாப்பிற்காக விட்டுச் செல்லும் இடம்

உடம்படி – ஒப்பந்தம்

பிராமிசேரி நோட் – தொழிலாளிகளின் எடை கணக்குகளை எழுதும் புத்தகம்.

### தொழிலாளர் சார்ந்த கலைச் சொற்கள்

கங்காணி – supervisors கண்காணி என்ற சொல்லே பேச்சு வழக்கில் கங்காணி என மாற்றம் பெற்றது. தேயிலைத் தோட்டத்தில் பணி செய்யும் கூலிகளைக் கண்காணிப்பவர்

சப்பை கங்காணி – Asst. supervisors கங்காணியின் உதவியாள்

குசுனிக்காரர் – குசினா (Cozinha) என்ற போர்த்துக்கீசிய சொல்லிலிருந்து இலங்கைக்கு வந்தது. இலங்கையிலிருந்து இடுக்கி தேயிலைத் தோட்ட ஆங்கிலேய பங்களாவிற்கு பரவியது. குசினி எனும் சொல்லின் பொருள் சமையல். எனவே, குசுனி பணி குசுனிக்காரர் என்றானது சமையலர் என்று பொருள்.

பட்லர் (Butler) – ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட சொல்.

பொட்லர் என பேச்சு வழக்கில் அழைக்கின்றனர். உணவு சமைக்கும் பணி செய்பவர் அல்லது உணவு சமைப்பவரை மேற்பார்வை செய்பவர். சமையலுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொடுப்பவர். குசுனிக்காரருக்கு வேண்டியவற்றை செய்துகொடுக்கும் உதவியாள்.

சொக்ரா – (Chokra) உதவியாள் ஆங்கிலச் சொல். ஆங்கிலேயர் காலத்திலிருந்து இன்று வரை பயன்பாட்டில் உள்ளது.

கிச்சன் மெட் – பாத்திரங்களைக் கழுவுபவர்.

பொடியன் – காட்டில் வேலை செய்ய தெம்பில்லாதவர்களுக்கு கொடுக்கும் பணி

பெரட்டு பொடியன் – Helper தேயிலைக் கொழுந்தெடுக்கும் காட்டில் முதல் நாள் கொழுந்தெடுக்க ஏதுவாக சால் (தேயிலைகளுக்கு உண்டான இடைவெளி) பணியைச் செய்பவர். கொழுந்தாள் என்றும் அழைப்பர்.

தாட்டுப் பொடியன் – தேயிலை மூட்டைகளை சுமக்கும் பணி செய்பவர்.

மஸ்டர் பொடியன் – அலுவலகத்தில் உதவியாள் பணி செய்பவர்.

எடுப்புக் காரி – தேயிலைக் கொழுந்தெடுப்பதில் அதிக எடை எடுப்பவர்களைக் கூறுவது.

டீ மேக்கர் – தேயிலைத் தொழிற்சாலையில் முழு பொறுப்பு வகிப்பவர்.

லைட் ஒர்க் – மாடு மேய்த்தல் போன்ற பணியை செய்பவர் பீல்டு ஆபிசர் – சின்ன ஐயா, பெரிய ஐயா.

### வீடு தொடர்பான கலைச்சொற்கள்

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஆங்கிலேயர் காலத்தில் வெளியுலக தொடர்பில்லாமல் இருந்தனர். காலங்கள் மாறி சமவெளி மக்களுடன் தொடர்புகள் ஏற்பட்டன. இருப்பினும் அவர்கள் பயன்படுத்தும் பெரும்பான்மை சொற்கள் மாற்றம் பெறவில்லை. தோட்டங்கள் மட்டுமல்லாது வீட்டிலும் கூட ஒரு சில ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்திய சொற்கள் சிறு மாற்றத்துடன் இன்றும் பயன்படுத்தி வருகின்றனர்.

லைன்ஸ் - குடியிருப்புப் பகுதி (வீடு) ஆங்கிலேயர் காலத்தில் குதிரை தொழுவம் போன்ற அமைப்புடைய கொட்டகையில் அடைத்து வைத்திருந்தனர். ஒரே அறையில் இரண்டிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணப்பட்டன. அதனை "லாயம்" என அழைத்தனர். காலரா மலேரியா போன்ற நோயினால் அதிகம் பேர் இறந்தனர். தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தது. அடுத்த புதிய தலைமுறை தொழிலாளர்கள் பணிக்கு வந்தனர். 'லாயம் லயம்' என மாற்றம் பெற்றது. மலையாளிகள் குடியேறியதும் 'லைன்ஸ்' என அழைக்கத் தொடங்கினர்.

காமிரா – அறை

குசுனி – சமையலறை

போகணி – பாத்திரம்

லோட்டா – சிறு குவளை

கூதல் – குளிர்

கடிச்சாந்தண்ணி – தேயிலைத் தண்ணீர் ,தேயிலைத் தண்ணீருடன் கருப்பட்டியை தனியாகக் கடித்துத் தின்பது.

### துணைநூற் பட்டியல்


1. நீ.ராஜசேகரன் நாயர், ச.ராஜா, சா.சுந்தரபாலு –
2. தமிழ் வேளாண் கலைச் சொற்களின் வட்டார - வேறுபாட்டு அகராதி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்
3. சா.சுந்தரபாலு – தொழிற்கருவிகள் ஒரு மொழியியல் நோக்கு, சீதைப் பதிப்பகம், சென்னை-600005.
4. சிவசுப்பிரமணியன்.ஆ – கூலித் தமிழ் காட்டும் சமுதாயம், என்.சி.பி.ஹெச், சென்னை 600098.
5. சிவசுப்பிரமணியன்.ஆ – பஞ்சமனா பஞ்சயனா, பரிசல் பதிப்பகம், சென்னை-15.
6. கோவிந்தராஜன்.ந – வெள்ளை நாக்குகளும் தமிழ்க் காதுகளும், க்ரியா பதிப்பகம், சென்னை.


●


**கட்டுரையாளர்: முனைவர்பட்ட ஆய்வாளர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

கட்டுரை



# சமூக அசைவியக்கங்கள் குறித்த விவாதம்



இரா.காமராசு

'தீராக்களம்' பாட்டாளியின் நாவல். கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு, இயக்கச் செயல்பாடு எனப் பன்முகத் தளத்தில் இயங்குபவர் தோழர் பாட்டாளி. பின்னை வெண்மணி நாவலான 'கீழைத்தீ' அரசியலும் அழகியலும் இயைந்த அற்புதப் படைப்பாக மிளிர்ந்தது. அந்த வரிசையில் நிலவுடைமைச் சிதைவும், முதலாளிய வரவும், பண்பாட்டு அடையாளப் போராட்டமும் 'தீராக்கள'மாக விரிகிறது.

1800 தொடங்கி 1965 வரையான சுமார் இருநூறாண்டு காலப்பகுதியில் மதுரையை மையமிட்டு நாவல் இயங்குகிறது. பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகால தமிழ் நாட்டின் சமூக அசைவியக்கங்கள் நாவலின் நுவல் பொருளாகின்றன. நிலக்குவியலை வைத்துக் கொண்டு 'மஞ்சள் குளித்த' பெரு நிலவுடைமையாளர்களான ஜமீன்களின் சரிவை, விழித்தெழும் உழுகுடிகளின் போராட்டத்தைக் குறியீடாக்கி நாவல் வெளிப்படுத்துகிறது. அதே வேளை பழைய மரபு ஆதிக்கத்தை எதிர்க்கும் போது 'வெள்ளைச்சனி'யாய் வந்துவிட்ட புதிய காலனித்துவ வரவும் காட்சிப்படுத்தப்படுகிறது.

இடைக்காலத் தமிழகத்தில் நிகழ்ந்தப் பண்பாட்டு நிகழ்வுகளின் தொடர்ச்சியாக கூத்துக்கலை மரபும், தமிழிசையும் அவைதீக ஒருங்கிணைவும் ஏற்படுத்திய தாக்கங்கள் நாவலில் முன்வைக்கப்படுகின்றன.

நிலவுடைமை உறவுகளின் சிதைவினையொட்டி ஏற்பட்ட முதலாளிய முறைமையின் தொடக்கப் புள்ளியாக அமைபவை பஞ்சாலைகள். உழைப்பை நம்பிய உழுகுடிகள்,

இயந்திரங்களை இயக்கும் தொழிலாளிகளாக மாறுகின்றனர். நிலவுடைமையாளன் - ஜமீன் – பண்ணையார் – முதலாளி ஆகிறான். இந்த உற்பத்தி உறவு மாற்றங்கள் பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்ட வாழ்வாக விரிகிறது.

நாடு காலனியத்துவத்திலிருந்து விடுதலை அடையப் போராடிக் கொண்டிருக்கும் போதே, உள் காலனிகளின் ஆதிக்க எதிர்ப்பும் உருவாகிறது. சாதி சமத்துவம், மொழிவழி மாநிலம், மாநில உரிமைகள், இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்புப் போன்றவை கூர்மைப்படுகின்றன. மையத்துக்கு எதிரான மாநில மொழி, உரிமைப் போர் வலுப் பெறுகிறது. இதில் இளைஞர்களும் மாணவர்களும் முன்னிலைப் பெறுகிறார்கள்.

நாவல் களம் – 1, களம் – 2 என இருபகுதிகளாக அமைந்துள்ளது. முப்பாட்டன் தலைமுறை பாட்டன் தலைமுறை, முப்பாட்டன் காலம், பாட்டன் காலம் என்று பகுக்கப்பட்டுள்ளது. நாவலின் இயல் பகுப்புகள், தலைப்புகள், வரிசை எண்கள் ஆகியவை நாவலின் போக்கில் முக்கியத்துவம் தரும் நுட்பங்களாக அமைகின்றன. சம காலம் 1, 2, 3,……. என்ற இயல் எண் வரிசையிலும், முப்பாட்டன் காலம் க,உ,ங... என்ற தமிழ் எண் வரிசையிலும், பாட்டன் காலம் அ, ஆ, இ….. என்ற அகர வரிசையிலும் சுட்டப்படுகின்றன.

நாவலின் கடைசிப்பக்கம் (492),

**"ஒங்காப்பா பேரு?"**

**"முனியாண்டி"**

**"ஒங்க தாத்தா பேரு?"**

**"தில்லை வாசகம்"**

**"ஒங்க பாட்டனாரு பேரு?"**

**"கஞ்சமலெய்...ய்...ய்...ய்....ய்"**

என சிங்காரவேலனுக்குத் தன் பரம்பரை நினைவுத் ததும்புகிறது. இங்கிருந்து நாவலைப் புரிந்து கொள்ளலாம். நாவலின் ‘சாவி’ இது தான். நிற்க.

குறுநில மன்னர்கள் போல ஜமீன்கள் விளங்கினர். நிலக்குவிப்பு மட்டுமின்றி நிர்வாகத் தரப்பாகவும் இவர்கள் விளங்கினர். அரசியல், பொருளாதார, சமூக அதிகார மையமாகவும் திகழ்ந்தனர். விவசாயிகளுக்கு அதிக வரிகளை விதிப்பது, உழைப்பாளர்களுக்குக் குறைந்த கூலியைத் தருவது. பெண்களை தம் இச்சைக்குப் பயன்கொள்வது, கொடிய தண்டனைகள் தருவது, விருந்து, கேளிக்கைகளில் ஈடுபட்டு மக்கள் செல்வத்தை ஊதாரித்தனம் செய்வது... என ஜமீன்களின் ‘ராஜ்ஜியம்’ நடந்தது.

இச்சூழலில் ஆங்கிலேயர்களின் நுழைவு நிகழ்ந்தது. 1801இல் மதுரை, கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தில் இணைக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் ஆங்கில அரசு நில நிர்வாகச் சீர்த்திருத்தங்கள்(?) செய்யத் தொடங்கியது. ஊர்ப்புறங்களில் விவசாய நிலங்களை மேலாண்மை செய்யவும் வரி வசூல் செய்யவும் ‘கர்ணம்’ எனும் அதிகாரிகளை நியமிக்க முடிவு செய்கிறது. பின்னர் கர்ணம் – மணியம் ஆனது. இது அதுநாள் வரை விவசாயிகளிடமும், குடியானவர்களிடமும் வரி வசூல் செய்து ‘கெட்டதுக்குப் பாதியாக’ ஆங்கில அரசுக்குத் தந்துவிட்டு, தங்கள் கஜானாவை நிரப்பிக் கொண்ட ஜமீன்களுக்குப் பேரிடியாக அமைகிறது.

நாவல் இதை முப்பாட்டன் காலம் எனச் சித்தரிக்கிறது. மதுரை கலெக்டரும், ஆங்கில அதிகாரியும் வந்து மக்கள் மத்தியில் கூட்டம் நடத்தி இதனை அறிவிக்கிறார்கள். கூட்டத்தில் பங்கேற்ற ஜமீன்களுக்கு இது அதிர்ச்சியாக அமைகிறது.

‘கர்ணம்’ வேலைக்கு படித்த, விவரம் அறிந்த, நில அளவை, கணக்கில் தேர்ந்தவர்களை அமர்த்த முடிவாகிறது. ஆனால், வழக்கம் போல் அதிகாரிகளிடம் ‘லாபி’ செய்து ஜமீன் தன் ‘துணைவி’ வழி உறவுக்கு இப்பதவி கிடைக்க ஏற்பாடு செய்கிறான். கீழத்தஞ்சைப் பகுதியில் இக்கால கட்டத்தில் இம்மாதிரி கர்ணம், மணியம் பணிகளில் பெரும்பகுதி பிராமணர்களும் அடுத்த நிலையில் முதலியார், வேளாளர் ஆகிய உயர் வகுப்பினருமே பதவி பெற்றனர். இப்பகுதி நில உடைமையாளர்களின் ‘கவசமாக’ விளங்கினர் என்பதையும் இவ்விடத்தில் எண்ணத் தோன்றுகிறது.

தங்களில் ஒருவருக்கு, தாங்கள் முன் நிறுத்தும் ஒருவருக்கு ‘கர்ணம்’ வேலை கிடைக்கும் என எதிர்பார்த்த மக்கள் ஏமாந்து போகிறார்கள். ஜமீன்களின் தொடர் தொல்லைகள், வரம்பு மீறல்கள், ஆதிக்கத்தனம் கோபங் கொள்ளச் செய்கிறது.

முதலில் தச்சம் பத்து பகுதியில் ‘கஞ்சமலை’ எனும் பெரியவர் – விவசாயி – அம்மையநாயக்கனூர் ஜமீனுக்கு எதிராக ஜனங்களைத் திரட்டத் தொடங்குகிறார். அவர் தன் நண்பனான பேய்க்காமன் (ஜமீனில் சேவகம் செய்பவர்), படைத்தேவன், பொன்னருவிச் செட்டியார், பிற ஜமீன்களில் அதிருப்தியில் இருக்கும் விவசாயிகள், பிற பிரிவினர் எனப் பலருடனும் பலமுறை சந்தித்து ஆலோசனை செய்கிறார். நம்பிக்கைப் பிறக்கிறது. அழகர் மலை ஆடித்திருவிழாவிற்கு எல்லா ஜமீன்களும் செல்வது வழக்கம். அத்தருணத்தைப் பயன்படுத்தி




**தீராக்களம் (நாவல்) / பாட்டாளி / பாரதி புத்தகாலயம் சென்னை – 18 / விலை: ரூ.490**

அம்மைய நாயக்கனூர் ஜமீனின் தலைமையிடமான ராஜதானிக் கோட்டையைக் கலகம் செய்து கைப்பற்றுகிறார்கள். தகவல் அறிந்து அம்மைய நாயக்கனூர் ஜமீன், சத்திரப்பட்டி ஜமீனின் பல்லக்குப் பரிவாரங்களுடனும், சிறுவாலை ஜமீனின் படையணிகளுடனும் வருகிறார். இங்கு மக்கள், காவல்படை, உழவர்கள், அதிகாரிகள் என எல்லாரும் ஜமீனுக்கு எதிராய் உக்கிரமாய் இருப்பதை அறிந்து 'பேச்சு வார்த்தைக்கு' இணங்குகிறார். மக்களின் எல்லா நிபந்தனைகளையும் ஏற்று கையொப்பமும் இடுகிறார்.

இதையறிந்து பிற எல்லா ஜமீன்களும் கொந்தளிக்கிறார்கள். கூட்டம் கூடுகிறார்கள். சத்திரப்பட்டி, வெள்ளியக் குன்றம், சிறுவாலைச் ஜமீன்களின் கேள்விகளுக்கு அம்மையநாயக்கனூர் பதில் தர இயலாமல் தவிக்கிறார். இறுதியில் மக்களை ஒடுக்கிட ஆங்கில அரசின் துணையை நாட முடிவு செய்கிறார்கள். ஆங்கிலப் படை நவீனப் படைக்கருவிகளுடன் விவசாயிகள், பொதுமக்களுடன் மோதுகிறது. கஞ்சமலையும் நண்பர்களும் செய்த முன் நடவடிக்கைகள், திட்டங்கள் தவிடு பொடியாகின்றன. கஞ்சமலை உள்ளிட்ட யாவரும் அழித்தொழிக்கப்படுகின்றனர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பின்னர் எழுந்த விவசாயிகள் கலகத்துக்கு முன்னோடியாக இது அமைகிறது.

தில்லைவாசகம் பிள்ளை மதுரை வட்டாரத்தில் முன்னணி கலை ஆளுமை சங்கரதாஸ் சுவாமிகளின் சமகால நண்பர். வண்ணச்சரபம் தண்டபாணி தேசிகரிடம் தமிழ்க் கற்றவர். வடமொழி, தமிழ், இசை, நாடகம், சிற்பம்…. எனப் பல்கலை வித்தகர். இவரின் இசைப்பாடல் சிறப்பும், நாடகப் பாங்கும், அறிவாற்றலும் விதந்து நாவலில் சுட்டப்படுகின்றன. வடமொழி, சமஸ்கிருத, வைதீகப் பண்பாட்டுக் கூறுகளுக்கு மாற்றாக அவைதீக உரையாடலை இவர் நிகழ்த்துகிறார்.

மெய்யியல், இறையியல், கலைத்துவம் எனச் சராசரியைக் கடந்து வாழுகிறார் தில்லைவாசகம். தன் சொத்துக்களை அறக்கொடை செய்கிறார். இதனால் பாதிப்புக்குள்ளான மனைவி சிலம்பாயி(சிவப்பி) கணவனைக் கடுமையாக விமர்சித்து, ஏசிவிடுகிறார். தில்லைவாசகம் வீட்டிலிருந்து வெளியேறிசென்றுவிடுகிறார். சிலம்பாயி மூத்தமகன் முனியாண்டி, இளையமகன் ராஜமாணிக்கம், மகள் காத்தாயி ஆகியோருடன் கிராமத்தில் இருந்த சொற்ப சொத்தையும் விற்றுவிட்டு மதுரையை நோக்கி இடம் பெயர்கிறார். குடும்பத்தைக் காப்பாற்றிட மூத்த மகன் முனியாண்டி மதுரை ஆண்டாள்புரம் மீனாட்சி மில்லில் வேலைக்குச் சேர்கிறார்.

முனியாண்டி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த ஏ.ஐ.யு.டி.சி. தொழிற்சங்கத் தலைவராகிறார். தொழிலாளர்களில் விசயம் தெரிந்தவராகவும், உரிமைக்குக் குரல் கொடுப்பவராகவும் விளங்குகிறார். பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. தொழிலாளர் நலம் காக்கும் செங்கொடிச் சங்கத்துக்கு தன் வாழ்வின், பொருளாதாரத்தின் பெரும் பகுதியை செலவிடுகிறார். போனஸ் கேட்டு, பேச்சுவார்த்தை தோல்வியாகி தொடர்போராட்டம் வெடிக்கிறது. முதலாளி, மேலாளர், நிர்வாகத் தரப்பினர் போராட்டத்தை உடைக்கிறார்கள். கருங்காலிகளைப் பயன்படுத்துகிறார்கள். முனியாண்டியை ஒரு முறை மிகக் கடுமையாகத் தாக்கி விடுகின்றனர். மருத்துவ மனையில் சேர்ந்து சிகிச்சைப் பெறுகிறார். மீண்டும் முனியாண்டி செயல்படத் தொடங்குகிறார். பேரம் பேசுகிறார்கள். முனியாண்டி தீரத்துடன் மறுத்து தொழிலாளர் நலனை வலியுறுத்துகிறார். எரிச்சல் அடைந்த நிர்வாக தரப்புக் கூலி ஆள்வைத்து முனியாண்டியைக் கொலை செய்து விடுகிறார்கள். போராட்டம் தொடர்கிறது.

இந்நிலையில் மதுரை தியாகராசர் கல்லூரிக்கு முனியாண்டியின் மகன் சிங்காரவேலன் படிக்கச் செல்கிறார். அப்பா போலவே பொது சேவையில் ஆர்வமும், கலை இலக்கிய ஈடுபாடும் கொண்டு சிங்கரவேலன் விளங்குகிறான். அப்பொழுது தமிழறிஞர் சி. இலக்குவனார் அங்கு பேராசிரியராகப்

பணியாற்றுகிறார். அவரோடு நெருக்கம் ஏற்படுகிறது. அக்காலத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டம் எழுச்சியோடு நடைபெறுகிறது. மாநாடுகள், ஊர்வலங்களில் சிங்கரவேலன் பங்கேற்கிறான். கா.காளிமுத்து, நா.காமராசன், பா. செயப்பிரகாசம், ஷாகுல் அமீது(இன்குலாப்) போன்ற மாணவத் தலைவர்களுடன் அணுக்கம் ஏற்படுகிறது.

தன் தந்தை கொலையுண்டு இறுதிக்காரியங்கள் முடிவுற்று (பதினாறாம் நாள்) இந்தி எதிர்ப்பு போராட்டப் பாதிப்புகளைக் கேள்வியுற்று மதுரை மாநகர் செல்கிறான். அங்கு நடைபெறும் எதிர்ப்பு ஊர்வலம் கலவரத்தில் முடிகிறது. கண்மூடித்தனமாகக் காவல்துறைத் தாக்குதல் நடத்துகிறது. துப்பாக்கிச் சூடு நிகழ்த்துகிறது. தன் பகுதியிலிருந்து கூட்டத்தில் சிக்கிய குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டச் சிங்காரவேலன் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகிறான்.

நான்கு தலைமுறையின் கதை இது. தமிழ் நிலத்தில் நிலத்துக்காக, சமத்துவத்துக்காக, பண்பாட்டுக்காக நிகழ்ந்த தொடர் போராட்டக் கண்ணிகளைக் கோர்த்து நாவலாக்கி உள்ளார். சீனப் போர், ஜீவா மறைவு, முத்துராமலிங்கத் தேவர் மறைவு, நேரு மறைவு ஆகியன காலவெளியைச் சுட்டப் பயன்படுகின்றன.

18, 19 ஆம் நூற்றாண்டின் கல்வி முறை, கலை வெளிப்பாடுகள் ஆங்காங்கே தென்படுகின்றன. வேளாண் மக்களின் வாழ்வியல் பதிவுகளும் இடம் பெறுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் தொழிலாளி வர்க்கத்தின் நிலை, குழுப்போக்கு, அரசியல் சில்லறைத்தனம், போலித்தனம் ஆகியனவும் சித்தரிக்கப்படுகின்றன.

கூத்தும், நாடகங்களும் மக்கள் மத்தியில் செல்வாக்குடன் இருந்த நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. திரைப்படங்கள் குறிப்பாக திரையிசைப் பாடல்கள் வெகுமக்கள் கலையாக மாறுவது சுட்டப்படுகிறது.

போதைப் பழக்கம், சூது, பாலியல் தொழில், அடிதடி, கட்டப் பஞ்சாயத்து, கூலிக் கொலை, வன்முறை, வெற்று அரசியல் போன்ற இன்றைய சமூக நிலைகளின் தோற்றக்கூறுகளை நாவல் அடையாளப்படுத்துகிறது.

நாவல் போக்கில் ஒவ்வொரு காலகட்ட நிகழ்வுகளும் அழகிய முறையில் பதிவாகின்றன. நாவலாசிரியரின் பார்வைக்கோணத்தையும் இவை வெளிப்படுத்துகின்றன.

முப்பாட்டன் காலத்தில் நிலமே மையமாக இருப்பதும், நிலவுடைமைக் கொடுமைகள் உச்சத்தில் இருப்பதும் சித்திரிக்கப்படுகின்றன.

“நெலத்துவரி, நெலத்துல பாயுற தண்ணிக்கு வரி, வெளஞ்சா வெள்ளாமெ வரி, கடமெவரி, அந்த்ராயம் வரி, பஞ்சுப்பிளி வரி, அந்த வரி இந்தவரின்னுட்டு ஏகத்துக்கும் வரிக்கு மேல வரியாப் போட்டு, காலம் பூரா நாம நல்லா ஒளச்சுக்குடுத்த தெரவியத்தெ, அவெங்யட்டப் பறிகுடுத்துட்டு, அடிமெய் பொளப்பு நடத்துறோங். இவெங்யளுக்குப் பின்னாடி, இந்தச் சமீனுக்காரங்ய, குடி, கூத்து, கூத்திய, கும்மாளமுன்னு நம்ம ஒளப்பதானக் கொள்ளையடிச்சாய்ங்ய. இப்ப என்னாடான்னா? இந்த வெள்ளக்காரங்ய வேற புதுசா வந்து சேந்துருக்காங்ய” (ப.45).

ஜமீன்கள் ஆங்கிலேயர் வரவை, ‘நமக்கு கிடைத்து வந்த மரியாதைகள் எல்லாம் இந்த வெள்ளெலிப் பயல்களுக்குக் கிடைக்கிறதே’ என்று இரு ஜமீன்களும், பொறாமையால் உள்ளுக்குள் அவிய, குதிரையேறிப் புறப்பட்டார்கள் கலெக்டரும், ஹா ட்சன் துரையும்” (ப 50) எனப் பதிவு செய்கிறார்.

அக்கால நில அளவை முறைகள், நாணய முறைகள் சார்ந்த பொருளாதாரக் குறிப்புகள் நாவலில் இடம் பெறுகின்றன.

“நெல அளவுக் கணக்கெல்லாஞ் சுத்தமாத் தெரியணுங். ‘மா’ ன்னா என்னா? ‘வேலி’ன்னா என்னா?, ‘காணி’ ன்னா என்னா?, ‘குழி’ன்னா என்னா?, ‘மாகாணி’ன்னா என்னன்னு... நெலத்துத் கணக்கு வளக்குகெ எல்லாத்தெயுஞ் தெரிஞ்சு வச்சுருக்கணுங்...

நமக்கு இந்தச் ‘சக்கரங்’ங், ‘வராகந்’ தாண்டி ஒன்னுந் தெரியாது. ‘ரெட்டை வராகங்’, ‘நட்சத்திரப் பகோடா’, ‘புலிவராகங்’, ‘வெள்ளிப் புலி வராகங்’, ‘கழஞ்சு’, ‘திரமங்’, ‘பொன்’னுன்னு... இப்படி ஏகப்பட்ட காசுங்க இருக்கு.” (ப.124)

ஜமீன்கள் குடிமைச் சமூகத்தில் எவ்வாறு கோலோச்சினார், பல்வேறு சமூகத்தினரையும் தமக்குக் கீழ்ப் பயன்படுத்தினர் என்பதை ஆங்காங்கு நாவல் சுட்டிக்காட்டுகிறது.

“பேய்க் காமன் மறவர் குலத்தில் பிறந்த சுத்த வீரன். ஆனால், இப்போது ஜமீந்தாரிடம் தொண்டூழியம் செய்து கொண்டிருக்கிறான். ஜமீந்தாரின் பரிவாரங்களில், ‘சின்ன ஊழியம்’ செய்பவன் பேய்க்காமன். ‘பெரிய ஊழியம்’ என்றால் பாதுகாப்பு வீரர்கள். ‘சின்ன ஊழியம்’ என்றால் பல்லக்குத் தூக்குபவர்கள் என்று வகை பிரித்திருந்தார்கள் ஜமீந்தார்கள்.” (ப.132)

“பல்லக்குத் தடி, தோலில் அழுத்தாமலிருக்க, தோலில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த சும்மாட்டுச் சுருளை எடுத்து உதறினார் பேய்க்காமன். பெருகி வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டார்.

கஞ்சமலைக்கு பேய்க்காமனின் நிலையைக் கண்டு பரிதாபம் மேலிட்டது. 'எப்பேர்ப்பெத்த வீரன்ங். அவ்ரெப் போயி சின்ன ஊளியக்காரனா வச்சிருக்கானே இந்த நாய்க்யெப் பயெ' என ஜமீனின் மேல் கோபம் மேலிட்டது.''(ப.133)

ஜமீன்கள் தண்டிப்பதையும், வெட்டி வேலை வாங்குவதையும் இப்படிப் பதிவு செய்கிறது நாவல்: 'அஞ்சு பட்ட வாரு', 'அஞ்சு பட்ட வாரு'ன்னு ஒன்னப் புதுசாக் கண்டுபிடிச்சுருக்கானுங்கப்பா. அதுல அஞ்சு தோல் வாருங்க இருக்குங். அதால... வெத்து ஒடம்புல அடிச்சம் முன்னு வச்சுக்க, அடிச்ச தடங் சாவுற வரெக்கிங் மறெயாது. இப்பிடித் தடத்தோட எங்கூருச் ஜனங்க நெறெயெ அலெயிதுப்போவ்.''

''நாய்க்யெப் பயலுக நெலத்துல வெட்டியா ஒளக்குறேஞ் சரி. அதெக் கூடப் பொறுத்துக்கலாங். ஆனா... இந்த அம்மெயநாய்க்யெனூறு ஜமீனுப் பயே, அவனோட வப்பாட்டிக்கு... அதாம்ப்பா... ஒனக்குத் தெரிஞ்சுருக்குமே... சீலக்கம்மா... அவளுக்கு எங்கூருல நெலத்தெ தானமா எளுதி வச்சுருக்காங். அந்த நெலத்துக்குங் வெட்டி ஒளப்பெச் செய்யணும்முன்னு கட்டாயப்படுத்தி, காசு பணமில்லாத, கூலியில்லாத வேலெயெப் பாருங்கடான்னு சொல்லிக் கொடுமெப் படுத்துறானப்பாவ்.'' (ப.134)

பாட்டன் காலத்தில் மதுரை வட்டாரத்தில் புழக்கத்தில் இருந்த கூத்து, நாடகங்கள் பற்றியும் தில்லை வாசகத்தின் கலைத் திறமை குறித்தும் பல பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

''எவ்வளவு கடினமான சந்தங்களென்றாலும், கடினமான வரிகள் என்றாலும், லட்டு லட்டாக, துண்டு துண்டாக, தனித்தனியாக வந்து காதில் விழும். அது தில்லை வாசகத்தின் தனித்திறன். அதற்காக அவர் ரொம்ப மெனக்கெட்டுப் பயிற்சி செய்திருக்கிறார்.

'கடமுடா' என்றிருக்கும் சந்தங்களை, முதலில் அவர் தனித் தனியாக 'கடா' என்பார். பிறகு, 'முடா' என்பார். பிறகு 'கடமுட' 'கடமுட' என்று மெலிதாக வேகமெடுப்பார். வேகம் உச்சத்துக்குப் போகும் போது, சுருதி பிசகாமல், தாளம் தட்டாமல், சட்டென்று கீழிறக்கி, தனித் தனியாக்குவார். ஒரு தேர்ந்த பருந்து ஒன்று, வானத்தில் இருந்து தன் கூரிய பார்வையால், தனக்கான இரையைக் கண்டு சட்டென்று கண் இமைக்கும் நேரத்தில் கீழிறங்கி இரையைக் கவ்வி, கண நேரத்தில் மேலேழுமே. அந்தக் கச்சிதம் இருக்கும் அவர் சாதகத்தில்.'' (ப.26)

தில்லைவாசகத்தின் வழி வைதீகம் குறித்த விமரிசனம், வடமொழி – தமிழ் மொழி முரண் போன்றவை முன் வைக்கப்படுகின்றன.

''ஞானசம்பந்தரின் ஏடு கரையேறி வந்ததல்லவா? அந்த ஏட்டிலிருந்த தமிழ்ப் பதிகத்தைச் செவி சாய்த்துக் கேட்கையில்... நன்றாகத் துல்லியமாகக் கேட்கும் வண்ணம், தன் நிலையிலிருந்து சற்றுச் சாய்ந்து கேட்க நேர்ந்ததால் அப்படி ஆனது. ஆக... தமிழுக்காக... தமிழ்ப் பதிகத்துக்காக... தன் நிலையிலிருந்து சற்றுச் சாய்ந்து நின்று கேட்டவன் ஏடகநாதன். அவனன்றோ தமிழ்க் கடவுள்!'' என்று தில்லைவாசகம் விதந்தோற்றிக் கூறிக் கொண்டிருந்த போது, வேதபாட சாலை குருவானவர் சற்று எரிச்சலடைந்தார்.

'எங்கள் வேதத்தை விட, உங்கள் தமிழ் பெரியதோ? என்னடா இது சோதனை? இந்தத் தில்லைவாசகம் வேதத்தை விட, தமிழை உயர்த்திக் கொண்டிருக்கிறானே இவனை அழைத்தது நமது பிசகோ?'' என வேதபாடசாலை குரு சங்கடப்படுகிறார் (ப.90).

கூத்தின் சிறப்பை இந்த உரையாடல் உணர்த்தும்:

''ஏங்ராசா... ரொம்பத்தாஞ் சடச்சுக்காதெ. இங்ஙன வீட்டுல நொடக்கிக் கெடக்குறதுக்குப் பதிலா, கூத்து நடக்குற எடத்துல போயிப்படுத்தா போற காலத்துக்குப் புண்ணியங் கெடக்கிங். நானே எண்ணெ முந்துதோ திரி முந்துதோன்னு சாக மாட்டாமெக் கெடக்குறேங். இன்னிக்கு தில்லெ வாசகம் பிள்ளையோட கூத்து. அங்ஙென போயி செத்த நொடக்குனா நேரா சொர்க்கந்தாங்''

''அதெப்பிடித்தா?''

''ஏலேய்... கூத்துப் பாக்கணுங்... கேக்கணுங்குறது இல்ல. அந்தப் பூமியில போயிப் படுத்தாலே புண்ணியந்தாங். இன்னிக்கி எலெ அறுத்தவெங் நாளெக்கி கொலெ அறுப்பாங்குற கதெயா, இன்னிக்கு கூத்து நடக்குற இடத்துல படுத்தா நாளக்கி இந்தக் கட்டெக்கி நேராச் சொர்க்கந்தாங். அதுலயுங் நம்மூரு ராசபார்ட்டு, தில்லெ வாசகங் கூத்துன்னா சும்மாவா?'' (ப.163).

இது எளிய மக்கள் கூத்துக்கலை மீதும், கலைஞர்கள் மீதும் வைத்திருந்த நம்பிக்கைச் சார்ந்த உறவினை வெளிப்படுத்துகிறது.

''அன்று தில்லை வாசகம் மிகவும் சிறபாக நடித்தார். தில்லை வாசகம் என்கிற மனித உருவிலிருந்து அரிச்சந்திர என்கிற பாத்திரத்தில் கூடு விட்டுக் கூடு பாய்ந்தது போல் அரிச்சந்திரனாகவே மாறிவிட்டார்'' (ப.166).

''மணிமுடி சூடி கம்பீரமாய்த் தில்லை வாசகம் அரியணையில் அமர்ந்திருக்க, தேவர்களும், முனிவர்களும் காசுகளை அள்ளி மணிமுடியோடு

தில்லை வாசகத்துக்கு கனகாபிஷேகம் செய்தார்கள். மக்கள் ஆரவாரம், மெல்ல மெல்ல எழுந்து கொண்டிருந்த சூரியனையே சொக்கவைத்தது''(ப.167).

இப்படி வெளி உலகில் கலை ஆளுமையாக மிளிர்ந்த தில்லை வாசகத்தின் வீட்டு நிலை:

''சிவகாமி(சிலம்பாயி) தில்லைவாசகத்தை சற்றும் மதிக்காது. ஊர் உலகமே தில்லைவாசகத்தைக் கொண்டாடினாலும், கலைத்தாயின் அருந்தவப் புதல்வன் என்று போற்றினாலும், சிவகாமி தில்லைவாசகத்தை சற்றும் மதிக்காது. கைக்காசுக்கு உதவாத கூத்தாடி என்றும், ஊதாரி என்றும், தான தர்மம் என்று எல்லாச் சொத்துக்களையும் வாரி இறைக்கிற பைத்தியக்காரன் என்றும்'' (ப.171).

''அட முனிசுவரா... ஏந்தாங் இந்தாளுக்கு இப்பிடிப் புத்தி போகுதோ தெரியலியே? அரெண்மனெயாட்டங் இருந்த வீட்டெத் தொலைச்சாச்சு. நெலபொலங், நீச்சு, வயல், வரப்புன்னு எல்லாத்தையுங் தொலச்சாச்சு. இப்பக் கடைசியா, பேரு சொல்றதுக்குன்னு ஒரே ஒரு கடைசிச் சொத்துத்தாங் இருந்துச்சு. அதெயுந் தான தர்மஞ் செஞ்சாச்சா? மொத்த மொத்தமா அள்ளி எறக்கிற தர்ம மகாராசா வரட்டுங் இன்னிக்கு ஆடுற அந்தக் குடுமிய அறுத்துட்டுத்தாங் மறுவேலெ. மானங்கெட்ட மனுசங்'' (ப.173).

இறுதியில் தில்லை வாசகம் வீட்டைவிட்டே வெளியேறுகிறார். குடும்பம் ஊரை விட்டுப் பிழைப்புத் தேடி மதுரைக்கு இடம் பெயர்கிறது. ''தலையில் ஒரு பெரிய துணி மூட்டையும், கையில் ஒரு பித்தளை அண்டாவில் போட்டிருந்த ஒரு சில பண்ட பாத்திரங்களையும், தூக்கிச் சுமந்துகொண்டு நடந்து கொண்டிருந்தாள் சிலம்பாயி. அவளுக்கு முன்னே, முனியாண்டியும் ஒரு துணி மூட்டையுடன் நடந்து கொண்டிருந்தான். அவளுக்குப் பின்னே, காத்தாயியும், ராஜமாணிக்கமும் பின் தொடர்ந்து நடந்து வந்துகொண்டிருந்தார்கள்....

நடந்தார்கள். நடந்தார்கள். வயிற்றில் பசியோடும் எதிர்காலம் என்னவாகப் போகிறதோ என்ற கலக்கத்தோடும் நடந்து கொண்டிருந்தார்கள்.''(ப.267).

தொழிற்சங்க அனுபவங்களும், நிறை குறைகளும் நாவலில் இடம் பெறுகின்றன. தகுதியும் திறமையும் மிக்க முனியாண்டி தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறார். அவர் சுயநலம் ஒதுக்கி நேர்மையுடன் செயல்படுகிறார். தொழிலாளர்களுக்காகப் பல நாட்கள் வேலை, கூலியை இழந்து வாழ்க்கையில் கஷ்டப்படுகிறார். இது அன்றைய, இன்றைய உண்மையானத் தொழிற்சங்கத் தலைவர்களின் யதார்த்தப் பதிவு. வகை மாதிரிப் படைப்பு.

''இன்று முனியாண்டி வழக்கம் போல வேலைக்குப் போகவில்லை. வழக்கு விஷயமாக லேபர் கோர்ட் வரைக்கும் சென்றிருந்தார். லேபர் கோர்ட்டில் நாள் முழுவதும் இழுத்தடித்து விட்டார்கள். பொதுவாக இப்படியான யூனியன் வேலைகளுக்குப் போகும் போது முனியாண்டிக்குச் சம்பள இழப்புடன் கூடிய விடுப்புதான் வாய்க்கும். மில்லில் சட்டப்படியாகக் கொடுக்கும் விடுப்புகள் எல்லாம் முனியாண்டிக்குப் போதாது. வேலைக்குப் போவதை விட, யூனியன், கட்சி சம்பந்தமான வேலைகளுக்குத்தான் முன்னுரிமை கொடுப்பார். யூனியன், கட்சி நடவடிக்கை, லேபர் கோர்ட், ஏசிஎல் ஆபீஸ், டிசிஎல் ஆபீஸ் என அங்கும் இங்கும் அலைந்து அலைந்து மாதத்தில் ஒருவாரம் வேலைக்குப் போனாலே அதிகம்.''(ப. 55)

முனியாண்டி தாக்குதலுக்குள்ளாகி மருத்துவமனையில் இருக்கிறார். அவர் குடும்ப வறுமை நிலையை நாவலில்,

''பாக்கியம், பாவம். 'பிள்ளைகளுக்கு ஒரு நல்ல சோறு... கொளம்பு வச்சுப் போட வக்கில்லையே...' என்று கண்ணீர் மல்கும். கையில் இருக்கும் காசைக் கணக்கிட்டுப் பார்த்துக் கொஞ்சமாக அரிசி வாங்கும். அதைப் பொங்கி வடித்து, வடி தண்ணீரில் உப்புப் போட்டுக் குடித்துக் கொள்ளும். பிறகு, பொங்கிய சோற்றில் தண்ணீரை ஊற்றி மூடி வைத்துவிடும். தொட்டுக் கொள்ள ஊறுகாய் எப்போதும் இருக்கும். எப்போதாவது அபூர்வமாக பொரிகடலை, தேங்காய்ச் சில்லு வாங்கித் துவையல் அரைக்கும். மற்றபடி வீட்டில் ஒரு வேளை சுடுகஞ்சியும், மீதமுள்ள இரு வேளையும் பழைய சோறும் தான் எல்லோருக்கும் வாய்க்கும்.

கஷ்டமென்றால் அப்படி ஒரு கஷ்டம். ஏற்கெனவே வட்டிக்குக் கொடுத்தவர்கள் அவ்வப்போது வீட்டு வாசல் வந்து நிற்பதும், சத்தம் போடுவதும் பிள்ளைகளுக்கு இயல்பானதொன்றாய் ஆகிவிட்டது.'' (ப. 138)

காலம் தோறும் 'சாதி' எப்படி ஒரு சமூகச் சதியாகத் தொடர்கிறது என்பதை நாவல் சுட்டுகிறது.

''நாமெதான்ங் இந்தெப் பள்ளெக்குடி பறெக்குடி சக்கிலியெக் குடி இதுகெ எல்லாத்தெயும்ந் தொட்டாத் தீட்டு பாத்தாப் பாவமுன்னுட்டு ஊரெ விட்டே ஒதுக்கித் தூர வச்சுருக்கமுல்ல. பொறவு எப்பிடிப்பா? திருவிளாக் காலெத்துலெ மட்டும்ங் மேடெயிலெ தீவெட்டி பிடிக்க வுடுறோம்ங்? அட.... அந்தச் சனெங்களெத் தீட்டுன்னு சொல்லி நம்ம ஊருக்குள்ளாறயும்ங் வுடுறதில்லெ. நம்ம கோயிலுக்குள்ளாறயும்ங் வுடுறதில்லெ. அட... இம்புட்டு ஏன்ங்? ஊருக்குள்ளாற நடக்குற

கூத்துமேடெப் பக்கமே அவெங்ய்யெளெ வுடுறதில்லை.” (ப.24) இது பாட்டன் தலைமுறையில்.

மில்லில் குடியிருப்புக் காலனியில் தெருக்களைச் சாதி அடிப்படையிலேயே மில் நிர்வாகம் அமைத்திருக்கிறது.

“காலனியில் நுழைந்ததும் முதல் தெரு அய்யர்களுக்கு இரண்டாவது தெரு வெள்ளாளர்களுக்கு. மூன்றவது தெரு செட்டியார்களுக்கும் நாயக்கமார்களுக்கும் என ஒவ்வொரு சாதி வாரியாகக் கணக்கிட்டுக் கொடுத்தது. கடைசியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் கொடுத்திருந்தது.” (20)

நிர்வாகம் இப்படி என்றால், தொழிலாளிகள் எஸ்.சி, பி.சி. எனப் பேதம் பார்க்கிறார்கள். அதிலும் கீழ்வீட்டில் பி.சி. யும், மேல் வீட்டில் எஸ்.சி. யும் இருப்பது சிக்கலாக வெடிக்கிறது. இது நவீனத் தீண்டாமைக்குச் சான்று.

“வக்காலி.... தேவென்ந் தலெ மேல நட்டமா நின்னுக்கிட்டு எஸ்சிப்பயெ நட்டுன பண்ணுவாங். நாமெ வாயையும் சூத்தையும்ங் பொத்திக்கிட்டுக் கீளெ கெடக்கணுமா? வேண்டான்டா சாமி இந்த வூடு. நாளைக்கே வீடு வேண்டான்னு எழுதிக் குடுத்துர்றேன்ங்” (ப.10).

நாவலில் இரண்டு காதல் இணைகள் இடம் பெறுகிறார்கள். ஒரு வகையில் வாழ்வின் எதிரும் புதிருமான அனுபவங்களின் சாயலை இவர்களில் காணலாம். குளோரியா, மைக்கேல் மில் காலனியில் வசிப்பவர்கள். குளோரியா வீரார்ந்த நேர்மைமிகு பாத்திரவார்ப்பு. மைக்கேல் இளமை வாழ்வில் சிக்கலுக்குள்ளாகி குடி, போதை, அடி, தடி, திருட்டு என இருக்கிறான். குளோரியா அவனை விரும்பி ஏற்கிறாள். ஒரே மதம் என்றாலும் வேறு வேறு சாதிகள். பெற்றோர்கள் எதிர்க்கிறார்கள். திருமணம் செய்து கொண்டு பிள்ளைகளைப் பெறுகிறார்கள். மைக்கேல் மாறவில்லை. குளோரியா உறுதியுடன் காதலைக் காப்பாற்றுகிறாள். எதிர்பாராத விதமாக இந்தி எதிர்ப்புப் போராட்டக் கலவரத்தில் மைக்கேலும், குழந்தையும் பலியாகிறார்கள்.

“இவுக என்னையா நம்மளெத் தள்ளி வைக்கிறது? எந்திரிய்யா. நாம இவுகளெத் தள்ளி வப்பங். இனி இவங்க சங்காத்தமே நமக்கு வேணாங். எந்திரிச்சு வாய்யா. ஊத்துக் கெணத்துத் தெருல வீடு பாப்பங். இவங்க கண்ணு முன்னாடியே நல்லா வாள்ந்து காட்டுவங். வாய்யா எந்திருச்சி நாங் இருக்கேய்யா ஒனக்கு வாய்யா.” (ப.188) என உறுதியுடன் வாழ்வைத் தொடங்கினாலும் மைக்கேலுக்கு குடிக்கு, பீடிக்கு, கஞ்சாவுக்கு பணம் கொடுத்தும் சித்ரவதைப்படுகிறாள். என்றாலும் அவள் கொண்ட அன்பு மாறவில்லை. உழைப்பும் உறுதியும் அவளை மேலும் அவனோடு நெருக்கப்படுத்துகின்றன.

“நீ ஏய்யா வேலைக்கிப் போனுங்? நீ என் ராசா... நீ வூட்லெ சும்மா இரு நான்ங் போறேங். எப்பாடு பட்டாலுங் ஒன்னெய ராசா மாதிரி வச்சுக் காப்பாத்துவேங்” (ப.256) என நெகிழ்த்துகிறாள்.

அடுத்து உதய சூரியன் – உமா இணை. ‘சூரி’ என அறியப்படும் உதய சூரியன் உள்ளூர் தாதா. குடி, போதை, அடி, தடி எனக் காலம் தள்ளுகிறான். உமா அய்யரின் மகள். கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொள்கிறார் அவர். உமாவின் தாய் நோயாளி. வேறு வழியின்றி பாலியல் தொழிலில் ஈடுபடுகிறாள் உமா. சூரி சந்திக்கிறான். ஈர்ப்பு ஏற்படுகிறது. பின்னர் உமாவின் நிலை தெரிகிறது. தீராக்காதல் கொள்கிறான் உமா அவனுக்காகவே தன்னை ஒப்புவிக்கிறாள். அவன் காவியத் தன்மையுடன் அவளைக் காக்கிறான். ஊரே ‘அலர்’ ஆகிறது.

உமாவின் தாயாருக்கு அறுவைச்சிகிச்சைக்குப் பணம் தேவைப்படுகிறது. அத்தருணத்தில் தொழிற்சாலை நிர்வாகம் தொழிற்சங்கத் தலைவர் முனியாண்டியின் பகையை முடிக்கத் திட்டமிடுகிறது. கூலிக் கொலை நடந்துவிடுகிறது. உமா – சூரி சந்திக்கிறார்கள். உமா பதற்றமடைகிறாள். ‘பாவப் பணம்’ என வாங்க மறுக்கிறாள். பேரன்புக் காதலை இருவருமே உணர்கிறார்கள். மனச்சான்றின்படி ஒன்றி இரயிலில் பாய்ந்து இருவரும் தங்களை மாய்த்துக் கொள்கிறார்கள். சூழலும், வாய்ப்பும், தேவைகளுமே மனிதர்களின் செயல்களைத் தீர்மானிக்கின்றன. கல்லுக்குள்ளும் ஈரம் கசியும் என்பது இவர்களின் செய்தியாகிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றி எழுத்தாளர் ப.க. பொன்னுசாமி, தன் ‘நெடுஞ்சாலை விளக்குகள்’ நாவலில் பதிவு செய்துள்ளார். மற்றபடி இலக்கியப் பதிவுகள் குறைவு. இந்நாவலின் ஒருபகுதி மதுரைப் போராட்டத்தின் களப் பதிவாக அமைகிறது. இன்னமும் விரிவாக, நுட்பமாக, கலைத்துவமாக மொழிப்போர்க்களம் பதிவாக வேண்டிய தேவையை இந்நாவல் சுட்டிக் காட்டுகிறது.

பாட்டாளி யதார்த்தவாதச் செல்நெறியை தன் படைப்புகளில் கைக்கொள்பவர். அரசியலும் அழகியலும் கலந்து படைப்பியலைக் கருத்தியல் செறிவோடு முன் வைப்பவர். நிலம், சாதி, வர்க்கம், மொழி, பால் சார்ந்த விழுமியக் கண்ணோட்டத்தை ‘தீராக்களமாக்கி’ உள்ளார். விவாதங்களை உள்ளடக்கியப் படைப்பு வாசிப்போம், விவாதிப்போம்.

●

**கட்டுரையாளர்: பேராசிரியர் – தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.**




'பெண்மைய வாசிப்பும் அரசியலும்' முனைவர் அரங்க மல்லிகா

# காத்திரமான விவாதத்துக்காக காத்திருக்கும் கட்டுரைகள்



**அன்பாதவன்**

தமிழ் இலக்கிய வெளியில், பெண்ணியம் சார்ந்த நிகழ்வு, உரை, எழுத்து, கவிதை எனத் தொடர்ச்சியாக இயங்கி வருபவர் முனைவர் அரங்க மல்லிகா.

சங்க இலக்கியம் தொடங்கி சமகால இலக்கியம் வரை சோர்வில்லா வாசிப்பும், இலக்கிய சமுத்திரத்துள் மூழ்கி முத்தெடுக்கும் முயற்சியும் தமிழுக்கு மிகச் சிறப்பாக ஆய்வுக் கட்டுரை நூலை அரங்க மல்லிகா வழியாக வழங்கியிருக்கிறது.

'பெண்மைய வாசிப்பும் அரசியலும்'- என்கிற கட்டுரை நூலில் 18 காத்திரமானக் கட்டுரைகள், அத்துணையும் வீரியமான விவாதத்தைக் கோருபவை.

வெறுமனே வாசித்து விட்டு, நூல் மூடி, நகர்ந்து விட இயலாத விமர்சனங்கள் என்பது மிகையில்லாதது.

இதுகாறும் பெண்ணின் வலி நிறைந்த வாழ்வியல் பெரும்பாலும் ஆண்களாலேயே எழுதப்பட்டன. பெண்ணியம் எனும் பெருவெடிப்பு சிதை உடைத்தது; பல புதிய அனுபவங்கள் இலக்கியங்களாய் வெளி வந்தன.

**"பெண்கள் தங்கள் சுய அனுபவங்களை எழுதும்போது காதல், காமம், இயல்பாக வெளிப்படுகின்றது. எனினும் பெண்ணிய உளவியலோடு அவை வெளிப்படவில்லை" - எனக் குறிப்பிடும் முனைவர் அரங்க மல்லிகா,**

'பெண் கவிஞர்களின் கவிதையில் தன் அனுபவம்' என்கிற கட்டுரையில் மூன்று கேள்விகளை ஆய்வுக்காக வாசக, விமர்சக சமூகம் முன் வைக்கிறார்.

1. பெண்களின் பாலியல் அடையாளத்தை எவ்வாறு கவிதைகளாகப் பதிவு செய்கின்றனர்.
2. பெண் கவிஞர்கள் (மரபுகளோடு வாழ்ந்து கொண்டே) மரபுகளைப் புதுப்பிக்கிறார்கள்.
3. அவர்கள் மரபுகளை மாற்றியுள்ளனரா? அல்லது மரபுகள் அப்படியே தொடர்கின்றனவா...?

இந்த வினாக்களின் நதிமூலத்தைத் தேடிச் செல்கையில் புதிய உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும்.

"சங்க இலக்கியம் திணை சார்ந்த பதிவைத் தருகிறது. அதில் ஐவகை ஒழுக்கங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. ஆண் தனது காதலை இயல்பாக வெளிப்படுத்துவது பெரும்பாலான பாடல்கள் வழிப் புலப்படுகிறது. பெண் அவ்வாறு வெளிப்படுத்துவதை அனுமதிக்காத

ஆண்வழிச் சமூகக் கட்டுப்பாடுகள் சங்க இலக்கியக் கோட்பாடாக உணரமுடிகின்றது. பெண் மீதான சமூகக் கட்டுப்பாடுகள் சங்க இலக்கியத்தில் ஔவையார், வெள்ளிவீதியார் போன்ற பெண்பாற் கவிஞர்களின் கவிதைகளில் கட்டவிழ்க்கப்பட்டு உள்ளன என்றாலும் கூட, சங்க இலக்கியம் ஆண்களின் மனம், சமூகப் பின்னணி ஆகியவற்றோடு தொடர்புடையதாகவும், பெண்ணின் மனம் தனிமைப்பட்டதாகவும் இருப்பதை அறியமுடிகின்றது. மேலும் அவர்கள் ஆண்களின் பரத்தையர் ஒழுக்கத்தை ஏற்றுக்கொள்பவர்களாகவும் இருப்பதைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. *(ப.38)*

என 'சங்க இலக்கியத்தில் பெண் கட்டமைப்பு' என்கிற கட்டுரையில் பதிவு செய்யும் அரங்க மல்லிகா "இலக்கியக் கொள்கைகள் யாவும் ஆண் பார்வையில் ஆண் அதிகார மையம் சார்ந்தவை என்பதைப் பின் நவீனத்துவம் உணர்த்துகிறது" என்கிற உண்மையையும் உரக்கச் சொல்கிறார்.

சங்காலப் பெண் கவிஞர்கள் அக்காலத்தில் சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பதிவு செய்துள்ளதை உணரமுடிகின்றது. ஆனாலும் பெண்கள் படைப்புக்களத்தில் தங்களது இயங்குவெளியை விசாலப் படுத்தவில்லை. எனினும் இவர்களினுடைய படைப்புகளை மீளாய்வுக்கு உட்படுத்தும் போது நவீனத்துவப் பின்நவீனத்துவக் கோட்பாடுகளின் நீட்சியாகப் பெண்ணியம் புரிந்து கொள்ளப்படுகிறது. பெண்ணியத்திற்குள் ஒரு கூறான பெண்மொழி சமீபகால ஆய்வுக்களமாகி இருக்கிறது. இந்த அடிப்படையில் அணுகும்போது ஆண்வழிச் சமூகப் பண்பாடுகள், முறைமைகள், கருத்தாக்கங்கள், ஆண்களின் மனோநிலை சார்ந்த பொதுப்புத்தியில் இருந்து எழுதப்பட்டவை என உணர்ந்து கொள்ளலாம். சங்க இலக்கியப் பாடல்களின் கட்டமைப்பு ஆண் மொழிக் கட்டமைப்பு. எனவே, இந்தக் கட்டமைப்பு ஆணின் குரலையே பெண்ணின் குரலாக முன்னிலைப்படுத்துகின்றது. பெண் பதிவுகள் ஆணின் மனப் பதிவுகளாக ஒருபுறமும், பெண் நோக்கிலான மனப் பதிவுகள் மறுபுறமும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை சங்க இலக்கியம் நல்குகிறது. பெண்ணிய ஆய்வு ஆண்வழிச் சமூக அமைப்பை அரசியலாக்கக் கூடியது. பெண்மையை மையப்படுத்திய கவிதைகள் சங்க இலக்கியத்தின் மையச் சரடாகும். பெண் வெளியும் இயங்குதளமும் கொண்ட பாடல்கள் ஔவையார், வெள்ளிவீதியார் போன்ற ஒரு சிலரின் பாடல்களில் மட்டுமே பதிவாகி உள்ளன. *(ப.41)*

பெண்ணிய ஆய்வுகளைப் பெண் எழுதினாலும் ஆண் எழுதினாலும் பெண் நிலை நோக்கோடு அணுகவேண்டும். அவ்வாறு அணுகினால் சங்க இலக்கியப் பாடல்களில் பெண்களின் உணர்வு மீதான கட்டமைப்பு மறுவாசிப்புக்கு உட்படும். *(ப.43)*

## பெண் கவிதை அரசியல்

பெண் மொழியில் பெண்ணின் அனுபவங்கள் நேரிடையாக வெளிப்படுத்தப்படுகின்றன. பெண்ணின் உடல் அலாதியானது என உணர்ந்து எழுதுகின்றனர். பெண் உடலைப் பெண்ணிடம் இருந்து பிரிக்கும் சூழ்ச்சியை எதிர்த்துத் தன் உடலை மீட்பது பெண் மொழியில்தான் சாத்தியமாகிறது. குறிப்பாக ஆணாதிக்கத்தினை எதிர் அரசியலாக்கப் பெண்மொழி உதவுகிறது. *(ப.45)*

பொதுவாகப் பெண்ணின் எழுத்துக்களில் ஆண் கவர்ச்சிக்கு உரிய பெண் உறுப்புகள் அழகியல் சார்ந்ததாக, காமம் சார்ந்ததாகப் பார்க்க முடியவில்லை. அது அரசியலாகிறது.

சிறப்புப் பொருளாதார மண்டலம் பெண்ணின் வயல் சார்ந்த உழைப்பு வெளியை அடைத்துவிட்டது. சிறப்புப் பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் நிறுவனங்களில் பகல் x இரவு பணிகளில் பணி ஏற்கும் பெண்களை நுகர்வு கலாச்சாரத்திற்குப் பழக்கப்படுத்தி வருகிறது. பெண் உடல் பெண்ணின் கூடுதல் கவனத்தில் நுகர்வாவதைப் பெண் உணர்ந்து தனது வெளியைத் தானே தீர்மானிக்கும் சுதந்திரத்தைப் பதிவு செய்யும் கவிதைகளைப் பெண்கள் படைத்து வருகின்றனர்.

காலங்காலமாக கட்டமைக்கப்பட்டிருந்த புனிதங்களைச் சிறப்புப் பொருளாதார மண்டல நிறுவனங்கள் தகர்ந்திருக்கின்றன. *(ப.46)*

ஆணின் பார்வையில் முலை, யோனி பற்றிய கருத்தியல் பெண் பார்வையில் பெண் அடையாளத்தை, அந்தரங்க அரசியலைப் பிரதானப்படுத்துகின்றது. போர்க்களங்களில் சிக்குண்டு நசுங்குதல், வீரர்களிடம் சிக்கிக்கொள்ளுதல், உறவுகளை இழத்தல், வீடற்றவர்களாக வாழ்தல் எல்லாம் இலங்கைப் பெண் கவிஞர்களின் எழுத்துக்களில் வீரியம் பெறுகின்றன.

தொண்ணூறுகளில் குறிப்பாக அம்பேத்கர் நூற்றாண்டுக்குப் பிறகு எழுந்த எழுச்சியில் தலித் படைப்புகள் இந்துத்துவத்தை வேர் அறுப்பனவாய் வெளிவந்தன. ஆனால் சிறுகதை, நாவல், கவிதை வரிசையில் தலித் ஆண் படைப்பாளர்கள் சமூக அவலத்தைப் பதிவு செய்திருப்பதைப் போலத் தலித் பெண் படைப்பாளர்கள் செய்யவில்லை. தலித் பெண் கவிஞர்களாக சிவகாமி, பாமா? *(ப.47)*

தமிழ்ப் பெண் கவிஞர்களின் கவிதைக் கருவின் கனத்தைக் காட்டிலும் ஈழப் பெண் கவிதைகளில் இனப் பிரச்சனையும், ஆண் ஆதிக்கமும் குண்டுகளாய்ப் புறப்பட்டன. *(ப.48)*

பெண் மொழி, பெண்ணின் அந்தரங்கத்தை அரசியல் ஆக்குகிறது. பெண் தன் காம உணர்வை, பாலியல் வேட்கையைத் தானே வெளிப்படுத்தக்கூடாது என்ற ஆண் மைய மொழியை விவாதம் ஆக்குகின்றன. (ப.49)

கவிஞர்களின் பெண்-மைய-நவீன மொழி/ புதுமொழி/ பெண்ணிய அறிவார்ந்த / தத்துவார்த்த/ உணர்ச்சி சார்ந்த புரிதல்களின் அடிப்படை சார்ந்ததாகவும் இருக்கின்றன. இவை பெண்களிடையே ஒரு புதுமொழியை உருவாக்குகின்றன. ஒரு பெண்ணாக இருந்து பெண் கவிதையை உணரும்போது, அவர்களின் ஆளுமையை, பன்முகத் தன்மையை, சுயத் தணிக்கையற்ற தன்மையை மரபார்ந்த மதிப்பு அனுபவங்களை எண்ணிப்பார்க்க ஒரு புதுமொழியைப் பேசவேண்டி யிருக்கிறது. அது பெண்மொழி ஆண் சுயகற்றிய பெண் உணர்வுகளின் வெளிப்பாடு. ப.20

'மொழியானது, ஓர் உற்பத்தி கருவி எனும் வகையில் அதிகாரப்பிரிவினர் பயன்படுத்துகின்றனர். மொழியின் அச் செயல்பாடுகளால் உடைமை வர்க்க மொழி/ உயர்சாதி மொழி/ ஆண் மொழி என்ற அடையாளச் சார்பை மொழி பெறுகின்றது. இது தன்னைப் புதுப்பித்துக் கொள்வது' என மகராசன் கூறுகிறார். காலந்தோறும் வளர்ந்து வரும் சமூக மாற்றம் மொழியின் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ப.22

**தலித் பெண்ணியம் விவாதமா! கலக அரசியலா ?**

இதன் தத்துவார்த்த உளவியல்தான் 'அந்தரங்கமே அரசியலாகும்' இதன் பரிணாமத்தில் பல வேறுபாடுகள் தோன்றுகின்றன. அதாவது பொருளாதார, கலாச்சார, மொழி, அரசியல், இனம், நிறம் ரீதியாக இந்தியச் சமுதாயத்திற்குரிய குறிப்பிடத்தக்க சமூகச் சூழலின் நிதர்சனமான சாதியை உள்ளடக்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால், இந்தியாவில் இந்தப் பன்முகப் பார்வை குறைவாக இருக்கிறது. (ப.54)

எல்லாச் சமூகக் கட்டமைப்பாலும் கலாச்சாரத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள் சுமைதாங்கிகள், சாதி ஆதிக்கம் என்பது பெண் மூலமாகத்தான் பாதுகாக்கப்படுகிறது. அகமணம் / கட்டமைப்பு இதை உறுதி செய்யும் அதனால்தான் இந்தக் கட்டமைப்பு சமூகத்தை வளர்க்காது என உணர்ந்து, ஜோதிராவ்புலே, அம்பேத்கர், தமிழகத்தில் பெரியார், கேரளாவில் நாராயணகுரு, ஆந்திராவில் வீரேசலிங்க பந்துலு ஆகியோர் சாதியற்ற சமூகத்தை விரும்பினர். கலப்பு மணத்தை ஆதரித்தனர். (ப.55)

தலித் பெண்ணிப் பார்வை திசைமாறி தலித் இலக்கிய விமர்சனமாக குறுகுகிறது. இஃதொரு தோல்வியடைந்த (அ) இன்னமும் விசாரணைகளை, விளக்கல்களைக் கோருகிற கட்டுரை எனலாம். இப்போது... குதிரை.. தலித் பெண்ணியம்.

"தற்காலத் தமிழ் இலக்கியத் திறனாய்வும் பெண்ணியப் போக்கும்' கட்டுரையில் "இரண்டாயிரத்துக்குப் பிறகு எழுதி வரும் பெண் கவிஞர்கள் உடலரசியல், பெண்மொழி தாண்டி கவிஞர்களின் தடத்தைப் புதுத்திரைக்கு மாற்றவில்லை. பெண் உடலை எழுதுதல் என்ற அளவில் பெண் கவிதை அரசியல் சுருங்கி இருக்கின்றது. நவீனப் பெண்மொழிக் கவிதைகள் தமிழ்ச் சமூக மரபுக்கு எதிராகத் தாய்மைச் சமூக விழுமியர்களைப் பாலின மொழியாக உருமாற்றுகின்றன" (ப.79).

மேற்கண்ட குற்றச்சாட்டுக்கு ஆய்வாளர்களின் விரிவான விளக்கம், சமகாலத்துக்கு இன்றியமையாததாகிறது. மேலும் முனைவர் அரங்க மல்லிகாவே, தக்க படைப்பாதாரங்களுடன் சமகாலம் பெண்மொழி படைப்புடன் குறித்து விரிவாக எழுதலாம்.

**தமிழின் நவீனக் கவிதைகள்– மொழியும் வாசிப்பும் :**

நவீனத்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மரபாக இருந்தவைகளை அடையாளப்படுத்தி அதிலிருந்து மாற்றுச் சிந்தனையை முன்மொழிவது. 99 இதன் அடிப்படையில் சமகால படைப்புகளான சுகிர்தராணி, முபீன் சாதிகா இருவரின் சில படைப்புகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதே போன்ற ஆய்வுகள் சமகாலப் பெண் படைப்பாளிகளின் கவிதை, கதை, புதினம் போன்ற புனைவுகளின் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இன்று இருப்பதை பிற ஆய்வாளர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

'பெண்மையை வாசிப்பும் அரசியலும்' - என்கிற இந்த ஆய்வு நூல், ஆய்வு மற்றும் விமர்சன தளத்தில், முக்கியமான ஒரு கல் எறிந்துள்ளதை மறுக்கவியலாது. பல நீரலைவைகளை எழுப்பி இருக்கும் இந்நூலின் கட்டுரைகள், கருத்துக்கள், விமர்சனங்கள் யாவும் காத்திரமான விவாதத்துக்கான களமாடக் காத்திருக்கின்றன.

●

**கட்டுரையாளர், எழுத்தாளர்.**

நேர்காணல்



# சோசியல் மீடியாக்கள், உணர்வுகளை மழுங்கடித்துவிட்டது.

**- எழுத்தாளர் ஆசு**

**நேர்காணல்: ஜி.சரவணன்**

**படைப்பின் நெடிய பயணம் குறித்து...**

என்னுடைய படைப்பு பயணம் என்பது வாழ்வோடு கலந்தது. வறுமையும் போதாமையும் தான் என் வாழ்க்கை. இது என்னுடைய வாழ்வின் பிரச்னை மட்டுமல்ல. பொதுவாக மானுடப் பிரச்னையாக தான் நான் பார்ப்பது. அதை எப்படி படைப்புக்குள் கொண்டு வந்து எழுதுவது முதன்மையான வேலை. நாற்பது ஆண்டு காலமாக தனிமனித இயக்கமாக இதைச் செய்து வருகிறேன். சிறு வயதில், நான் பார்த்த கூத்துக் கலை, அறிஞர்களின் சொற்பொழிவுகள் எழுத்தாளர்கள், கவிஞர்களின் படைப்புகளை நிறைய வாசித்திருக்கிறேன். வாழ்வனுபவம், படைப்புகள் வாசிப்பனுபவம் இரண்டும் சேர்ந்து, படைப்புகள் எழுத தூண்டியது. இந்தப் படைப்புகள் கலை அம்சத்திற்கு மட்டுமே, என் இயக்கம் இல்லை. அதை போர்க்குணமாக தான் படைப்பை ஒரு கருவியாக பயன்படுத்தியிருக்கிறேன். சின்ன வயதில் கிராமத்தில் ஆடு மாடு மேய்ப்பது, களை எடுப்பது, நெல் அறுப்பது, நெற்கட்டு சுமப்பது, சித்தாள், என்று பல வேலைகள் செய்திருக்கிறேன் ஒரு தொழிலாளியாக வாழ்க்கை முழுவதும் உழைத்துக் கொண்டிக்கிறேன். உழைப்பு மட்டுமே போதுமானதாக இல்லை, படைப்புகள் எழுதுவதின் வழியே இந்த சமூகத்திற்கு என்னுடைய பங்களிப்பை செய்கிறேன். மானுடர்களின் வலியும் காயமும், படைப்புகளின் வலியாக பதிவுச் செய்கிறேன்.

மண்ணின் மாந்தர்களை கவிதைகள் கதைகள் வழியே சொல்லும்போது, அவர்களின் புதைந்து கிடக்கும் வாழ்க்கையை மீள் உருவாக்கம் செய்கிறேன். மீள் உருவாக்கம் செய்வதின் மூலம், காலத்தோடு கைக்கோர்க்கும் நம்பிக்கை. இவ்வாறாக நம்பிக்கையை எம்மக்களுக்கு ஏற்படுத்துவது – மானுடர்க்கெல்லாம் ஓர்



“ஒரு தொழிலாளியாக நான் தொழிலாளர்கள் வாழ்வை முழுமையாக எழுத வேண்டும். ஏமாற்றம், துரோகம், சின்னத் தனங்கள், போலிகள் பற்றி எழுத வேண்டும். தொழிலாளியின் உழைப்புச் சுரண்டலை எழுத வேண்டும்.”

**திண்டிவனம் பக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஆ.சுப்பிரமணியன் என்ற ஆசு தற்போது அம்பத்தூரில் லேத் பட்டறைத் தொழிலாளியாக பணிபுரிந்து வருகிறார். நாற்பது ஆண்டுகளாக தமிழ் இலக்கியச் சூழலில் கவிதை, சிறுகதை, நாவல் எனத் தொடர்ந்து பயணிப்பவர். நாவலுக்காக சமீபத்தில் 'சௌந்திரா கைலாசம்' விருது பெற்ற அப்படைப்பாளியோடு நிகழ்ந்தது இந்நேர்காணல்**

அன்பை நிறைத்துச் செல்லும் விழிப்பு. விழிப்பு வெளிச்சமாகுகையில் அந்த வெளிச்சம் என் படைப்புகளில் ஒளிர்வதை காண்கிறேன்.

இவ்வாறான உந்துதலில், இதுவரை எட்டு கவிதைத் தொகுப்புகள், நான்கு சிறுகதை தொகுப்புகள், 209 – கவிஞர்களின் கவிதைகள் குறித்து இரண்டு கவிச்சித்திர நூல்கள் ஒரு உரைச்சித்திர நூல்கள், ஒரு குறுங்கதை நூல், இரண்டு நாவல்கள் – இருபது படைப்புகள் எழுதியிருக்கிறேன். தொடர்ந்து எழுதுகிறேன்.

**பொதுவாக இலக்கியப் படைப்பின் இலக்காக எதை முன் வைப்பீர்கள் ?**

வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று சொல்லும்போது, இன்னமும் அடித்தட்டு மக்களின் வாழ்வும் பாடும் அப்படியே தான் இருக்கிறது. உலக மயமாக்கலில், உழைக்கும் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அடக்குமுறைகள் நவீன வடிவத்தில் புகுந்துவிட்டன. தெருவுக்கு வந்து அவர்களின் பிரச்னைகளை முன் வைத்துப் போராடிய மக்கள் இன்று தன்னுடைய கருத்துகளையோ பிரச்னைகளையோ முன் வைத்துப் போராட முடியாமல், இன்றைய நவீன வாழ்வு கட்டுப்படுத்திவிட்டது. மதம் சாதி எல்லா நிலைகளிலும் தலைவிரித்தாடுகிறது. சோசியல் மீடியாக்கள், உணர்வுகளை மழுங்கடித்துவிட்டது. உணர்வுகளில் குரல் எழுப்பிய மனிதன் இறுகிவிட்டான். அவனுக்கு மனம் ஒன்று இருப்பதையே அறிய முடியாமல் இருக்கிறான். சித்தாந்தங்களும் இலக்கும் வாழ்விலிருந்து அந்நியமாகிவிட்டன. இவ்வாறான இழப்புகளையே மீண்டும் மீண்டும் படைப்புகளில் பதிவுச் செய்கிறேன்.

இவையே என் படைப்பின் இலக்கு நோக்கம்

**இன்றைய படைப்பிலக்கிய சூழலை எப்படி உணர்கிறீர்கள் ?**

இன்றைய படைப்பிலக்கிய சூழல், சமூக வலைதளங்களில் சிக்கிக்கொண்டு தவிக்கிறது. படைப்பின் தன்மானம் சுயம் இழந்து நிற்பதையும் சொல்ல வேண்டும். கனவுகள் நோக்கங்கள் கொண்டிருப்பதற்கு பதில், ஏதோ பேன்சியாக இருப்பதை பார்க்க முடிகிறது. தீவிரமான







அது காட்டுகிறது. இதிலிருந்து மீண்டு, மனிதர் நிலையை எழுத வேண்டும் அதுவே இன்றைய தேவை.

**நவீன இலக்கியப் போக்குகள் குறித்து சொல்லுங்கள்?**

அறுபது எழுபது எண்பதுகளில், எழுத்து, கசடதபற, வானம்பாடி, முற்போக்கு இயக்கங்கள், மீட்சி என்று நவீன இதழ்கள், அமைப்புகள் படைப்புகளை புதிய உச்சத்திற்கு கொண்டு சென்றன. இப்போது இவற்றின் தாக்கம் இருந்தாலும், புதிய நவீன எழுச்சியுள்ள படைப்புகள் குறைந்து வருவதை காணமுடிகிறது. இன்றைய படைப்பாளர்களுக்கு, கடந்து வந்த வரலாறு தெரியவில்லை. இந்த வரலாறு அறிந்து, நவீனத்தை கைக்கொண்டு படைக்க வேண்டும் என்பதே என்னுடைய எண்ணம்.

**நீங்கள் இதுவரை பெற்ற பரிசு விருதுகள் பற்றி சொல்லுங்கள்?**

கவிஞர் தமிழன்பன் அகவை விருது, இலக்கிய வீதி இனியவன் ஐயாவின் அன்னம் விருது, எழுத்தாளர் செஞ்சி தமிழினியன் அவர்களின் விதைநெல் விருது, கொளத்தூர் கலை இலக்கிய மன்றத்தின் இலக்கிய ஆளுமை விருது.

'ஒரு வாளித் தண்ணீர்' சிறுகதைக்கு இனியவன் ஐயாவின் நினைவுப் பரிசு. 'செல்வி மற்றும் பிறகதைகள்' சிறுகதை நூலுக்கு, மலேசியா. கோலாலாம்பூரில் 2023-ஆண்டு நடைபெற்ற 11-வது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் சிறந்த நூலுக்காக ஒரு லட்சம் ரூபாய் பரிசு. திருமதி சௌந்திரா கைலாசம், எழுத்து இலக்கிய அமைப்பு நடத்திய நாவல் போட்டியில், பஞ்சவர்ணம் நாவலுக்காக இரண்டு லட்சம் ரூபாய் பரிசு.

பொதுவாக எனக்குக் கிடைத்த பரிசும் விருதும், இந்த மண்ணின் மக்களின் துயரம் வலிகளை எழுதியதற்காகதான் என்று நம்புகிறேன். அவர்களுக்கே பரிசையும் விருதையும் அர்ப்பணிக்கிறேன்.

●

காத்திரமான நம்பிக்கையான படைப்புகள் நான்காம் பேருக்குத் தெரியாமல் எழுதப்படுகின்றன. அதை இனம் கண்டு வாசகர்கள் தேடிப் போய் படிக்கும் நிலை வரவேண்டும். மேன்மையான படைப்புகள் வருகின்றன. அதை உணரும் நிலை இல்லை என்பதுதான் இன்றைய சூழல்

**ஒரு படைப்பிலக்கியவாதியாக நிறைவாக உணர்கிறீர்களா?**

நான் இதுவரை எழுதியது எனக்கு நிறைவு எனினும் இன்னும் நிறைவாக எழுத வேண்டும். சத்தான சாரம் மிக்க வாழ்பவனுபவங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை எழுதுவதே நிறைவாக எண்ண முடியும். ஒரு தொழிலாளியாக நான் தொழிலாளர்கள் வாழ்வை முழுமையாக எழுத வேண்டும். ஏமாற்றம், துரோகம், சின்னத் தனங்கள், போலிகள், பற்றி எழுத வேண்டும். தொழிலாளியின் உழைப்புச் சுரண்டலை எழுத வேண்டும். காலத்தின் முன் கைதியாக ஆன மானுடர் வாழ்வை முழுமைப் படுத்துவதின் மூலம், என்னுடைய படைப்புகள் நிறைவான இடத்திற்கு செல்லும் என்பது என் நம்பிக்கை.

**நம்பிக்கையளிக்கும் இளம் படைப்பாளிகள் பற்றி சொல்லுங்கள்?**

இன்றையச் சூழலில் இளம் படைப்பாளிகள் நிறையப்பேர் எழுதுகின்றனர். குறிப்பாக பெண் படைப்பாளிகள் எழுதுகின்றனர். சின்னச் சின்ன அனுபவங்களை நுட்பமாக எழுதுகின்றனர். அனுபவம் தரும் ஆனந்தமாகவே அவை இருக்கின்றன. நுட்பங்கள் கைவர அளவுக்கு, மானுடர் துயர் அறிந்து எழுதவில்லை என்பது வருத்தமான செய்தி. கண்ணீரும் வலியும் கார்ப்பரேட்டுகள் விழுங்கிவிட்டது என்பதைத்தான்



# சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி (1812-1854) தென்னக அறிவுப் புலத்தின் தோற்றுவாய்!

**இர.குமரன்**

பத்தொன்பதாம் நூற்றாண்டு உலக அளவில் சமூக, அரசியல், பொருளியல் அரங்கில் பல புதுமையும் மறுமலர்ச்சியும் ஏற்பட்ட காலம். இந்த மறுமலர்ச்சியின் தாக்கம் இந்தியத் துணைக்கண்டத்தையும் பாதித்தது. குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்தை தனது ஆட்சிப் பரப்புக்குள் முழுமையாகக் கொண்டு வந்த ஆங்கிலேயர்கள் தங்களது ஆட்சிக்கான கால்தடத்தை கிழக்கிந்திய கம்பெனி அதிகாரத்தின் வழி பதித்துக் கொண்டிருந்த நேரம்.

இந்தியத் துணைக்கண்டத்து மக்களை ஆள்வதற்கும் அவர்களைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களின் வெவ்வேறு மொழி, பண்பாடு, வாழ்க்கை முறை, சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கற்றுக்கொண்டு தங்களது அதிகாரத்தை நிலைநிறுத்தத் தொடங்குவதற்கான பணியைச் செய்தனர். இந்தச் செயல்பாட்டின் ஊடாக இந்திய நிலப்பரப்பின் இருவேறு சிந்தனைப் பள்ளிகளையும், வடக்கு × தெற்கு என்ற இருவேறுபட்ட நிலப்பகுதிகளையும் அதன் மொழி, பண்பாட்டு வாழ்க்கை முறையையும் இனங்காணத் தொடங்கினர். அதற்கான முறையான கல்விப்புல ஆய்வு நிறுவனங்களை அமைத்தனர்.

வடக்கில் கொல்கத்தாவை குவியப்படுத்திய வில்லியம் கோட்டைக் கல்லூரியும் தெற்கே சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியும் தோற்றம் பெற்றன. இவற்றில் சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி ஏற்படுத்திய சமூக, அரசியல் தாக்கத்தை மதிப்பிடுவதும் புரிந்துகொள்வதுமே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

## ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி (1812 –1854)

நான்காம் மைசூர் போருக்குப் (1798-1799) பிறகு கர்நாடகம் உள்ளிட்ட தென்னகப் பகுதியில் ஆங்கிலேயரின் குடியேற்றக் கொள்கைக்கு மிகப்பெரிய இடையூறாக இருந்த திப்பு சுல்தான் வீழ்த்தப்படுகிறார். ஏற்கெனவே இதற்கு முந்தைய மைசூர்ப் போர்களில் தென்னகத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றிய கிழக்கிந்திய கம்பெனி தென்னகம் பற்றி புரிந்துகொள்வதற்கான அறிதல் முறையைத் தொடங்கியது. தென்னகத்தைப் பற்றி ஆங்கில அரசு அறிந்துகொள்வதற்கான கருதுகோள்களை உருவாக்கிய காலின் மெக்கன்சியும், எல்லீசும் ஆசியவியல் கழகத்தில் கீழ்த்திசைக் கருத்தியலுக்கு முன்னோடித் திட்டம் வகுக்கும் பொறுப்பில் இருந்தனர். குறிப்பாக ஆங்கிலேய அரசின் முதல் தலைமை நில அளவையராக இருந்த காலின் மெக்கன்சி (1754-1821) தென்னகத்தைப் பற்றித் திரட்டிய கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், மக்கள் வழக்காறுகள், தென்னக நிலம் பற்றிய வரைபடங்கள், சமயப் பனுவல்கள், காசுகள், நில உறவு தொடர்பான ஆவணங்கள் போன்றவை குடியேற்ற அரசுக்குத் தென்னக சமூகம் குறித்தப் புரிதலை உருவாக்கியது. இதனால் வில்லியம் கோட்டைக் கல்லூரியின் சமஸ்கிருதத்தை மையமாகக் கொண்ட மொழி அறிதல் முறையானது தென்னகத்தை நிர்வகிக்கப் பயனற்றது என்ற முடிவை வந்தடைவதற்குக் காரணங்களாக அமைந்தன.

1806இல் மெக்கன்சிக்கு எல்லீசு எழுதிய கடிதத்தில் சுவடிகள் மற்றும் கல்வெட்டுகளை மொழிபெயர்ப்பதில் இந்தியாவிலுள்ளவர்களை பயன்படுத்துவது குறித்தும் ஆங்கிலேய, இந்திய அறிஞர்களை ஒருங்கிணைப்பது பற்றியும் தனது கருத்தை முன்வைக்கிறார். அவ்வாறு செய்வதன் மூலம் சமஸ்கிருதம், தமிழில் உள்ள இலக்கியங்களை மொழிபெயர்த்து ஆவணங்களாகச் சேகரிக்கலாம். மேலும் அதற்கான கல்லூரி ஒன்றை நிறுவிச் செயல்படுத்துவதற்குத் திரட்டப்பட வேண்டிய நிதி வளங்கள், அதற்கான ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவது, மொழிபெயர்ப்பை மேற்பார்வையிடுவது உள்ளிட்ட விரிவான திட்டங்களுடன் அக்கடிதம் எழுதப்பட்டிருந்தது.

மேலும் 1807இல் மெக்கன்சி தனக்குக் கீழ் உள்ள பணியாளர்களுக்கு எழுதிய சுற்றறிக்கைக் கடிதம், 'தென்னக மொழிகள் சமஸ்கிருத மூலத்திலிருந்து கிளைத்தவை அல்ல என்றும் பிராமணர்களின் தென்னக வருகையோடுதான் சமஸ்கிருத மொழித் தாக்கம் தென்னகத்தில் ஏற்பட்டது' என்றும் அக்கடிதம் கூறியதோடு, 'பழங்கன்னடம் தென்னகத்தின் மூல மொழியாக இருக்குமோ?' என்ற கருத்தும் தென்னக மொழிகளின் கட்டமைப்புக் குறித்த தொடக்க கால எல்லீசின் கருத்துகளுக்கு வழி வகுத்தன. இங்கிலாந்தில் இருந்த ஹெய்லிபரி கல்லூரியில் இருந்து சென்னை வந்த இளநிலை அதிகாரிகளுக்கு ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி தொடங்கப்படுவதற்கு முன்பே உரிய மொழி கற்பித்தல் முறை சென்னையை மையப்படுத்தி இயங்கியது. இந்துஸ்தானி, பாரசீகம் ஆகிய மொழிகளோடு தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளுக்கான தேர்வையும் சென்னை அரசு நடத்தியது. இவ்வாறான மொழி கற்பித்தலுக்கான முயற்சிகள் வங்காளத்தின் வில்லியம் கோட்டைக் கல்லூரி வழிகாட்டுதலின் படி இயங்கியதால் இந்துஸ்தானி, பாரசீக மொழிகளில் தேர்ச்சிப் பெறுவதையே மாணவர்கள் விரும்பினர். இதனை உணர்ந்த எல்லீசு, கிழக்கிந்திய இயக்குநர் வாரியத்துக்கு வழங்கிய அறிக்கையில் தென்னகத்தில் பெரு வழக்காக உள்ள தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளின் கற்பித்தலுக்கான கல்லூரியை சென்னையில் நிறுவ வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். இதன் விளைவாக 1812இல் தொடங்கப்பட்ட ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி நிறுவனர் எனும் பெருமையைப் பெற்றார். இக்கல்லூரியில் பணியாற்றிய ஆசிரியர்களான மாமடி வெங்கையா, சங்கரையா, பட்டாபிராம சாஸ்திரி, சிற்றம்பல தேசிகர், முத்துச்சாமி பிள்ளை, தாண்டவராய முதலியார் ஆகியோர் இணைந்த கூட்டு, தென்னகச் சிந்தனையையும் திராவிடச் சான்றுக்கான கருதுகோள்களையும் உருவாக்குவதில் முன்னணியாக செயல்பட்டது. மேலும் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய பன்மொழிகள் அறிந்த இப்புலமை கூட்டம் ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியின் செயல்பாட்டினைத் தீர்மானிப்பவையாக அமைந்தன.

## வட மரபு, தென் மரபு என்ற இருவேறு சிந்தனைப் பள்ளிகளின் தோற்றம்:

வங்காளத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு அதன் நிர்வாகத் தேவைகளுக்காக அங்கே வழக்கிலிருந்த

சட்டங்களையும் வரலாறுகளையும் தொகுக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. அவை அனைத்தும் பெர்சிய மொழியில் அமைந்திருந்தன. எனவே, ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் ஆட்சியாளர்களாக இருந்த முகலாயர்களின் அரச மொழியான பெர்சிய மொழியில் இருந்த நூல்களில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் எழுதவும் தொடங்கினர். வில்லியம் ஜோன்ஸ் 1771 ஆண்டிலேயே பெர்சிய மொழிக்கு இலக்கணம் எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேய அதிகாரிகள் பெர்சிய மொழியின் வழியாகவே சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்த்தனர்.

ஹால்வெல்லின் நூலான இந்துஸ்தான் பேரரசும், வங்காளத்தின் சுவை மிகுந்த வரலாற்று நிகழ்வுகளும்(1765-71), பெர்சிய வரலாற்று அறிஞரான பிரிஸ்டாவின் நூலான இந்துஸ்தானத்தின் வரலாறு(1768) அலெக்ஸாண்டர் டவ் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இவர் பிராமணர்கள், பெர்சிய உயர்குடிகள் ஆகியோர் மட்டுமே இந்துஸ்தானத்தின் வரலாற்றை சொல்வதற்கு தகுதியானவர்கள் எனக் கருதியவர். இதே காலத்தில் ஹால்ஹெட்டின் இந்துச் சட்டத்தொகுப்பு(1776) மற்றும் வங்க மொழிக்கான இலக்கண நூல்(1778) ஆங்கிலத்தில் வெளிவந்தன. இந்த நூல்கள் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் அன்றைய அரசியல் எதிரிகளான முகலாயர்களுக்கு முந்தைய இந்துஸ்தானத்தின் பொற்காலம் பற்றிய கனவுலகக் கருத்துகளை விதைத்தன.

### பிரான்சிஸ் ஒயிட் எல்லீசும்(1777–1819) தென்புல மரபும்:

திப்புவின் வீழ்ச்சிக்குப் பிறகு தென்புலத்தை விரைவாக ஆய்வதற்கு முதல் நில அளவையாளரான காலின் மெக்கன்சி(1754–1821) நியமிக்கப்பட்டார். அவரோடு பல வகையில் கருத்துகளை பரிமாறுகிறவராக களத் தொடர்பையும் கடிதத் தொடர்பையும் எல்லீசு வைத்திருந்தார். கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பில் மாவட்ட நீதிபதி, வருவாய் வாரியப் பணி, கடைசியாக சென்னை ஆட்சியர் பணி, ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி நிறுவனர் எனப் பல நிர்வாகப் பொறுப்புகளை எல்லீசு வகித்து வந்தார்.

1806 ஆம் ஆண்டிலேயே மெக்கன்சி மேற்கொண்ட நிலப்பரப்பு மேலாய்வுகள் தென்னகம் பற்றிய புதிய கருதுகோள்கள் உருவாவதற்கு அடிக்கோலிட்டன. மெக்கன்சி வில்கின்சிற்கு 1808இல் எழுதிய கடிதம் சில முதன்மை வாய்ந்த செய்திகளைத் தருகிறது. தென்னகம் வைதீக சமயத்திற்கு ஆளாகாத சமண சமய மரபைத் தொடக்கத்தில் கொண்டிருந்தது என்றும், பிராமணர்களின் வருகைக்குப் பிறகுதான் வைதீக சமயக் கருத்துகள் தென்னகத்தில் பரவத் தொடங்கின, குறிப்பாக சங்கராச்சாரியாரும், ஹொய்சாள ஆட்சிப் பகுதியில் இராமானுஜரும் தென்னகத்தில் சமண சமய வீழ்ச்சிக்கும் வைதீக எழுச்சிக்கும் வித்திட்டனர் என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஏறக்குறைய இதே காலத்தில் தனது உற்ற நண்பரான லெய்டனுக்கு கடிதம் எழுதிய எல்லீசு வேதாந்தத்திற்கு முந்தைய சமண சமய கருத்துத் தாக்கத்தைத் தென்னகம் கொண்டிருந்தது எனவும், சங்கரர், இராமானுஜர் காலத்திலேயே சமணம் வீழ்ச்சியடையத் தொடங்கியது எனவும் தமிழின் முதன்மையான இலக்கியங்களை எழுதியவர்கள் சமணர்களே எனவும் எல்லீசு குறிப்பிட்டிருந்தார்.

வில்லியம் கோட்டைக் கல்லூரியும் ஜோன்சு உள்ளிட்ட ஆசியவியல் கழகத்தினரும் மனு உள்ளிட்ட வைதீகக் கருத்துகளைப் பரப்பும் நூல்களை அச்சிட்டுப் பரப்பிய காலத்தில் எல்லீசு திருக்குறளைத் தமிழின் முதன்மை அறநூலாக அடையாளம் கண்டார். திருவள்ளுவருக்குத் தங்க நாணயம் ஒன்றை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியின் சார்பாக வெளியிட்டார். திருக்குறளின் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சமஸ்கிருதத்தில் ஊறித் திளைத்திருந்த ஜோன்சுக்கு மாறாக தனித்தமிழில் எழுதவும் தமிழில் பாக்களைப் படைக்கும் ஆற்றலையும் எல்லீசு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியத்தை எல்லீசு கற்றுணர்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அதன் காரணமாகத்தான் கல்லூரியின் தலைமைப் புலவரான சிற்றம்பல தேசிகரை வைத்து இலக்கணச் சுருக்கம் எனும் தமிழ் நூலை வெளியிட்டு இருக்கலாம். எல்லீசு, சமணத் தீர்த்தங்கரரான பார்சுவநாதர் பற்றி வெளியிடப்படாத தனிக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார். சமணம் பிராமணர்களால் அழித்தொழிக்கப்பட்டது எனவும் சமணத்தை அழித்த பிறகே தென்னகத்தில் பிராமணச் சட்டங்கள் நிலைநிறுத்தப்பட்டன எனவும் இக்கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### திராவிட மொழிக் குடும்பம் பற்றிய சிந்தனை:

வில்லியம் கோட்டைக் கல்லூரி சமஸ்கிருத அடிப்படையிலான இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் பற்றிய கருதுகோள்களை நிறுவியதில் முதன்மைப் பங்காற்றியது எனில் சமஸ்கிருத

வேரில் இருந்து முற்றிலும் துண்டித்துக்கொண்ட தென்னக மொழிக்குடும்ப மரபை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியும் அதன் நிறுவனரான எல்லீசும் அடையாளம் கண்டனர். மெக்கன்சியின் தென்னகம் தொடர்பான ஆவணத் திரட்டல்கள் தென்னகத்தின் மொழிகள் தொடர்பான தொடக்கநிலை கருதுகோள்களை உருவாக்கின. சமஸ்கிருத மரபில் இருந்து விடுபட்ட தனித்தன்மை கொண்ட மொழிகள் தென்னகத்தில் வழங்கி வருகின்றன. தமிழ்மொழி தென்னக மொழிகளின் தாய் மொழியாக இருக்கிறது என்ற ஆழமான கருத்துகளை எல்லீசு கொண்டிருந்தார். அதன் அடிப்படையிலேயே சமஸ்கிருதம் தென்னகத்தில் புழக்கத்தில் உள்ள மொழிகளைக் கற்றறிய உதவாது எனவும் வில்லியம் கோட்டைக் கல்லூரியின் கருத்தாளரான வில்லியம் காரேயின் சமஸ்கிருத மொழிதான் தென்னக மொழிகளின் உருவாக்கத்திற்கு அடிப்படை என்ற கருத்தினை எல்லீசு தனது நண்பர் லெய்டன் துணையுடன் வலுவாக மறுத்துரைத்தார். சமஸ்கிருத சட்ட நூல் வல்லுநரான கோல்புரூக்கின் கருத்தையும் இதே போன்றே எல்லீசு எதிர்கொண்டார்.

சமஸ்கிருதத்தில் இருந்து விடுவித்துக் கொண்ட தென்னக மொழிகளின் தனி மரபை அடையாளம் காணுவதற்காகவே ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி பற்றிய சிந்தனை எல்லீசுக்கு உருவெடுத்ததாக ஆய்வாளர் தாமஸ் டிரவுட்மேன் சான்றுகளுடன் மெய்ப்பித்துள்ளார். ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி வெளியிட்ட ஏ.ஜி.கேம்பல் எழுதிய தெலுங்கு மொழி இலக்கணம்(1816) நூலுக்கு முன்னுரை எழுதிய எல்லீசு தெலுங்கு, தமிழ், கன்னடம் ஆகிய மொழிகள் சமஸ்கிருத மரபில் இருந்து விடுபட்டு தனித்த மொழிக் குடும்பத்திலிருந்து கிளைத்தவை; தென்னிந்திய மொழிகள் தனித்துவம் வாய்ந்தவை என்பதை ஆணித்தரமாக ஒப்பிட்டு மொழிப் புலமையுடன் அதில் வெளியிட்டார். அந்த முன்னுரைக்கு மாமடி வெங்கையா தொகுத்த தெலுங்கு வேர்ச்சொல் அகராதி அடிப்படையாக அமைந்தது. எல்லீசு தெலுங்கு மொழியை நன்கு கற்றுணர்ந்தவர் என்பது கவனிக்கப்பட வேண்டியது. மாமடி வெங்கையாவின் தெலுங்கு வேர்ச்சொல் அகராதி, 'சமஸ்கிருதத்தில் இருந்து தூய தெலுங்கு விலகி இருக்கிறது' என்பதை மெய்ப்பித்தது. மாமடி வெங்கையாவின் தெலுங்குப் புலமை காரணமாக பலமுறை பிராமணர்களால் தாக்குதலுக்கு ஆளானார். இந்த நூலை எல்லீசு பயன்படுத்திக் கொண்டார். எல்லீசின் தென்னக மொழி குறித்த சட்டகத்திற்கு இந்நூல் உதவியது. எனினும் திராவிட மொழிக் குடும்பம் என்ற கருத்துக்கு எல்லீசு, மொழி நூல் குறித்த ஆய்வுகளின் வழியாக வரவில்லை. இராபர்ட் கால்டுவெல்லுக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே தென்னக மொழிக் குடும்பம் என்ற வரைவுக்கு வந்தவராக எல்லீசு இருந்த போதும் அவர் திராவிடம் மொழிக் குடும்பம் என்ற கருத்தாக்கத்திற்கு வரவில்லை. ஆனால், தென்னகத்தின் சட்ட நூல்கள் பற்றிய ஆய்வுகளில் திராவிடம் எனும் தனி மரபை அடையாளப்படுத்தியவராக எல்லீசு இருந்தார். தென்னகத்தில் நிலவிய சட்டங்கள் தொடர்பாக ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியில் ஆற்றிய உரையில் தான் திராவிடம் எனும் தனிச் சட்ட மரபுகள் தென்னகத்தில் வழக்கத்தில் இருந்ததைக் குறிப்பிட்டார்.

**எல்லீசும் புலமை மரபும்:**

வில்லியம் ஜோன்ஸ் பிராமணர்களைத் தனது புலமைக் கூட்டத்தின் முதன்மை பகுதியாகக் கொண்டிருந்தார். அவர் உருவாக்கிய சிந்தனைப் பள்ளி சமஸ்கிருத பிராமண மேலாதிக்கப் புலமை மரபுக்கு முதன்மை இடம் அளித்தது. அவதி மொழியில் எழுதிய துளசிதாசரின் இராமாயணத்தை ஜோன்சு எற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் எல்லீசினைச் சுற்றி உருவான ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியில் தமிழ்ப் புலமை மரபு, சைவ சித்தாந்த மடங்களில் செல்வாக்குச் செலுத்தி வந்த பிராமணரல்லாத வேளாள, முதலி, பண்டார சாதிகளின் தொகுப்பாக அமைந்தது. எல்லீசின் முதன்மை ஸ்ரேஸ்தாரராகப் பணியாற்றிய சங்கரையா, தெலுங்கு, ஆங்கில, சமஸ்கிருத மொழி வல்லுநரான' பட்டாபிராம சங்கர சாஸ்திரிகள் போன்றோர் பிராமணராக இருந்தனர் என்பதும் மறுக்க முடியாத உண்மை. சமஸ்கிருத மொழி கற்றலுக்கு ஜோன்சுக்கு அறிவுறுத்தப்பட்ட பிராமண பிறவித் தகுதியோ, புனிதத் தகுதியோ தமிழ் மொழிக் கற்றலுக்கு எல்லீசுக்கு தடையாக இல்லை. திருக்குறளின் மூலச் சுவடிகளை பண்டிதர் அயோத்திதாசரின் பாட்டனார் ஹாரிங்டன் என்ற அதிகாரிக்கு வழங்கினார் என்ற அயோத்திதாசரின் கருத்து ஆழமாக விவாதிக்கப்பட வேண்டும் என்பதோடு திருக்குறளுக்கு கவிராஜ பண்டிதர் போன்ற சமண உரையாசிரியர்களும் விரிவான உரை எழுதியிருந்தனர். அந்த உரை நூலையே எல்லீசுக்கு முன் சென்னையின் ஆட்சியராக இருந்த நதானியல் கிண்டர்ஸ்லி(1763-1831) பயன்படுத்தினார் என்பதும் மறுக்க முடியாத உண்மை. மேலும், சமண சமயத்தைப் பின்பற்றிய ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவைச் சார்ந்த கிராமங்கள் தொண்டை மண்டலத்தில் இருந்ததாக மெக்கன்சி ஆவணப்படுத்தியிருப்பதும் கவனத்திற்குரியது.

வேளாள, முதலி உள்ளிட்ட இதர மிராசு வகுப்புகளில் இருந்து உருவான புலமைக் கூட்டம் தவிர தமிழில் ஒரு வெகுமக்கள் மரபொன்று செயல்பட்டு வந்தது என்பதும் முதன்மையான செய்தி. நதானியல் கிண்டர்ஸ்லி, 'திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர் ஓர் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வந்தவர்' என்ற ஆசிரியர் குறிப்பையும் அன்றைக்குத் தொண்டை மண்டலத்தில் வழக்கில் இருந்த வரலாற்று மரபுகளில் இருந்து கூறுகிறார். சைவ மடங்களின் புறக்கணிப்புக்குப் பிறகும் அறநூலான திருக்குறள் பரவலாகத் தமிழ்ப் பரப்பில் அறியப்பட்டிருந்தது என்பதையும் கூற வேண்டியுள்ளது. எனவே தான் எல்லீசுக்கு திருக்குறள் முதன்மை இலக்கியமாகப் பட்டது எனலாம். ஆனாலும் எல்லீசு உருவாக்கிய ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி புலமைக் கூட்டம் ஏனைய ஒடுக்கப்பட்ட சமூகத்தினரை ஜார்ஜ் கோட்டைக்குள் அனுமதிக்கவில்லை என்பதும் வரலாற்று உண்மை. 1834ல் பறையர் சாதியைச் சார்ந்த ஒருவர் கல்லூரியில் சேர விண்ணப்பித்த போது கல்லூரியின் புலமைக் கூட்டம் அதனை ஏற்கவில்லை என்பதால் அந்த விண்ணப்பத்தை நிராகரித்தது. இந்நிகழ்வு அன்றைய காலத்தில் நிலவுடைமை உறவுகளில் ஆதிக்கம் செலுத்தி வந்த பிரிவினரின் குரல் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. எல்லீசு, தொண்டை மண்டலத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலவுடைமை சக்திகளின் மிராசு உரிமையை முற்றிலும் ஏற்றுக்கொண்டார் என்பதும், உழுகுடி சாதிகளின் நிலத்தின் மீதான பாரம்பரிய உரிமையை மறுக்கும் மிராசு உரிமை குறித்த நூலொன்றை அவர் எழுதி அது கம்பெனியின் மதிப்புமிகு நில உரிமை தொடர்பான ஆவணமாக வெளிவந்தது என்ற வரலாறும் சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரிக்கு உண்டு.

குடியேற்ற அரசின் நோக்கங்களுக்காக தொடங்கப்பட்ட சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி இந்தியத் துணைக்கண்டத்தில் நிலவி வந்த சமஸ்கிருத, பிராமண, புராண, இதிகாச மரபிற்கு எதிரான தென்னகச் சிந்தனை மரபை எதிரொலித்தது. எல்லீசின் தென்னிந்திய மொழிக் குடும்பம் பற்றிய கருதுகோள் மெல்ல வளர்ந்து இராபர்ட் கால்டுவெல்லின் திராவிட மொழிக் குடும்பம் பற்றிய சிந்தனைக்கு வழிகோலியது. 19ஆம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகத்தில் நிலவி வந்த ஆதிக்க மரபிற்கு எதிரான கருத்துகள், கருத்தாளர்கள் தோன்றுவதற்கு சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரி வலுவான அடித்தளத்தை உருவாக்கியது. ஒற்றை ஆதிக்க மரபிற்கு எதிரான இந்தியத் துணைக் கண்டத்தின் பன்மைத்துவத்தை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் சென்னை ஜார்ஜ் கல்லூரியும் அது உருவாக்கிய கீழைத்தேய சிந்தனைப் பள்ளியும் தமிழ்ச் சமூக வரலாற்றின் மறுமலர்ச்சியில் சிறப்பான பங்கை ஆற்றிது என்று துணிந்து உரைக்கலாம்.

**துணைநூற் பட்டியல்**


1. திராவிடச் சான்று எல்லீசும் திராவிட மொழிகளும்- தாமஸ் டிரவுட்மேன், தமிழில் இராமசுந்தரம்.
2. காலச்சுவடு பதிப்பகம் 2007 வெளியீடு.
3. மாற்றுவெளி ஆய்விதழ் -11, காலின் மெக்கன்சி சிறப்பிதழ், டிசம்பர் 2012
4. அத்திப்பாக்கம் அ.வெங்கடாசலனார் ஆக்கங்கள் திரட்டு
5. இந்துமதம் ஆதிக்கச் சாதிகள் ஒடுக்கப் பட்டவர்களுக்கு எதிராகத் தொழிற்பட்ட வரலாறு.
6. பதிப்பாசிரியர்: வீ.அரசு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2013
7. இந்திரர் தேசத்து சரித்திரம், அயோத்திதாசப் பண்டிதர் அயோத்திதாசர் சிந்தனைகள் தொகுதி - 4
8. தலித் சாகித்ய அகாடமி, 1997
9. அதிகாரமும் தமிழ்ப்புலமையும் தமிழிலிருந்து முதல் ஆங்கில மொழிபெயர்ப்புகள் ந.கோவிந்தராஜன், 2016 க்ரியா பதிப்பம்
10. மொழியாகிய தமிழ் காலனியம் நிகழ்த்திய உரையாடல்கள், ந.கோவிந்தராஜன், க்ரியா பதிப்பகம், 2021
11. காலனியத் தொடக்க காலம், (கி.பி 1500 - 1800) எஸ் ஜெயசீல ஸ்டீபன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ,2018
12. *Aryans and British India, Thomas R. Trautmann, University of California press, 1997*
13. *Madras school of Orientalism Producing knowledge in colonial south india, Thomas.R.Trautmann, Oxford university press, 2009*
14. *Dialogue and History Constructing south India, 1795 -1895, Eugene F. Irschick Oxford university press*
15. *The Nation and its Fragments Colonial and post colonial Histories, Partha chatterjee, Princeton University Press,1993*


●

**கட்டுரையாளர்: வரலாற்று ஆய்வாளர்**

## நூல் அறிமுகம்

**தமிழ் இனிது / நா.முத்துநிலவன் / தமிழ்திசை பதிப்பகம், சென்னை/ விலை: ரூ –160/–**




நாள்தோறும் தாய்மொழியாம் தமிழைப் புழங்குகையில் பிழையின்றி கையாள்கிறோமா? என்பது ஐயமே. நடப்புத் தமிழ் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகி உள்ளது. மின்பொறிப் பயன்பாடு, பிற மொழித்தாக்கம், விரைவு, சுருக்கம் ஆகியனவற்றால் மொழிச்சிதைப்பு அரங்கேறுகிறது. இலக்கண அடிப்படைப் பிறழாமல் தமிழைப் பேச, எழுத நல் வழிகாட்டியாக தமிழ இனிது' எனும் இந்நூல் அமைகிறது. நூலாசிரியர் நா.முத்துநிலவன் பாவலர்; பண்பாட்டுச் செயற்பாட்டாளர்; முறையான தமிழாசிரியர். இலக்கணத்தை இனிக்க இனிக்க வகுப்பெடுக்கிறார். தொடக்கம் துவக்கம், கட்டடம் கட்டிடம், ஊளமார உளமாற, சுவரில் சுவற்றில், சுளிப்பு சுழிப்பு, அடையார்- அடையாறு, கடைப்பிடி கடைபிடி... போன்று பல சான்றுகள். எச் சொல் எங்கு, ஏன், எப்படி வரும் என்பதைச் சுவையானச் சான்றுகள் தந்து விளக்குவது அருமை.வெகுமக்களிடம் நன்கு அறிமுகமான செய்திகள், கருத்துக்களைச் சுட்டி, விவாதித்து விளக்கி உணர்த்துவது ஆசிரியரின் தனித்தன்மை. தமிழ் இந்து திசை நாளிதழில் தொடராக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்று நூலாகி உள்ளது. அன்றாடப் பயன்பாட்டிற்கு அனைவருக்கும் உதவும் 'தமிழ் வழிகாட்டி இந்நூல்.

**–இரா.காமராசு**




**நீலகிரி பழங்குடி படகர் /கவிஞர் பாப்ரியா / மாஸ் பப்ளிகேஷன்ஸ்/**

இந்த தொகுதி படகர்களின் வரலாறு மற்றும் வாழ்க்கையைப் பற்றியது. படகர் வரலாற்றுக்கு முந்தைய வரலாறு, வரலாறு கலாச்சாரம், மதம், அரசியல், மொழி, இலக்கியம் மற்றும் நவீனமயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் அவர் உள்ளடக்கியுள்ளார். படகர்களின் ஏராளமான பொருட்களை சேகரித்து தொகுக்க அவர் நிறைய சிரத்தை எடுத்துள்ளார். அவர் அத்தியாயங்களை பொருத்தமான காப்பகம் மற்றும் அரிய புகைப்படங்களுடன் விளக்கியுள்ளார்.

**–தர்மலிங்கம் வேணுகோபால்**

கட்டுரை



# சங்கத்துச் சான்றோர்களின் சமூக உறவு

சங்கப் பனுவல்களில் இருநூற்றைம்பதிற்கும் மேலான மன்னர்கள், நானூற்று எழுபத்து மூன்று இருபாற் புலவர்கள் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. நடைமுறை வாழ்வில் நின்றுகொண்டு தான் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையும் சங்கப் பனுவல்களில் தேடி அவை இல்லை, இவை இல்லை, தற்காலமே பொற்காலம் என்போரும் உண்டு. நடைமுறை வாழ்வில் இருக்கும் குழறுபடிகளைக் கண்டு மனம் வெதும்பி சங்கப் புலவர்களின் கூற்றுக்களையோ அல்லது திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட அறநூல்களின் கருத்துக்களையோ எடுத்தியம்பி ஆறுதலடைவோர் நிறைய உண்டு. மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. தேவை கருதி மனித வாழ்வில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்கள் எண்ணிலடங்காதவை. உணவு, உடை, இருப்பிடம் ஆகிய அடிப்படை தேவைகளிலும் பழக்க வழக்கப் பண்பாட்டு நிலையிலும் நாம் பெரும் மாற்றங்களைக் கண்டுள்ளோம். இன்றைய வணிகமயமான வாழ்க்கையின் அவசர ஓட்டத்தில் அன்பு, நட்பு, கருணை இவைகளெல்லாம் நம் கண்களுக்குப் படுவதில்லை. இயந்திர பொறிகளோடு கொண்டிருக்கும் உறவைவிட மனித உறவு மேலானதில்லை என்கிற மனப்போக்கிற்கிடையில் சங்கப் புலவர்களின் சமூக உறவுநிலை எத்தகையது என்பதை இக்கட்டுரை முன்வைக்கிறது.



முனைவர் சு. சதாசிவம்

**நட்பின் இலக்கணம்**

நடைமுறை வாழ்வில் நாம் பலரோடு நட்பு கொண்டிருக்கிறோம். அதில் நலம்தரும் நட்பும் உண்டு. நலத்தைக் கெடுக்கும் தீயநட்பும் உண்டு. நட்பு எனும் சொல்லிற்கு நா.கதிரைவேற்பிள்ளை உறவு, சிநேகம், சுற்றம் ' என்று கூறுகின்றார். வடமலை நிகண்டு நட்பு என்பதற்கு,

> **"நயந்தோ னெனும்பெயர் நட்புடை யோனும்**
> **கணவனு மெனவே கருதப் பெறுமே[2]**

எனக் கூறுகின்றது.

நட்பின் இலக்கணம் குறித்து அறஇலக்கியங்கள் அதிகம் பேசுகின்றன. இதில் திருக்குறளும் நாலடியாரும் முன்னிலை வகிக்கின்றன. புணர்ச்சியோ, பழகுதலோ வேண்டாம். நட்பிற்கு மனமொத்த உணர்ச்சியே போதும் என்கிறார் வள்ளுவர். இதனை,

**"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**

**நட்பாங் கிழமை தரும்"** [3]

என்னும் குறட்பா வழி கூறுகின்றார்.

துன்பம் வரும் நேரத்தில் ஓடிவந்து உதவுவதே கொள்ளவேண்டிய சிறந்த நட்பு. புறத்தே எவ்வளவு பழகினும் பலனில்லை. உள்ளம் சார்ந்த நட்பே உதவக்கூடியது. பயன்தரக் கூடியது. துன்பமற்றதும் தொடரக்கூடியதுமாகும். வள்ளுவர்,

**'அகநக நட்பது நட்பு'**[3]

**'இடுக்கண் களைவதாம் நட்பு'**[4]

என்று உரைப்பதன் வழி அறியலாம்.

புறத்தில் நட்புடையவர்களாகத் தோன்றினும் அகத்தில் ஒத்த உணர்ச்சியில்லாதவர்களின் நட்பு பயனற்றது. இத்தகைய தெளிவற்ற நட்பைவிட பகை மேலானது. நாயின் கால் விரல்கள் போல் நெருங்கியவர்களாக இருந்தும், ஈயின் கால் அளவுகூட உதவி செய்யாதவர்களின் நட்பு பயனற்றது. பலநாள் பழகி பக்கத்திலிருப்பினும் சிலநாள் கூட மனம் ஒட்டாமல் இருப்போரின் நட்பும் அவசியமற்றது என்பன போன்ற கருத்துக்களை நாலடியார்,

**'தெளிவிலார் நட்பின் பகை நன்று'** 6

**"நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணியராயினும் ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்"**[7]

**"பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சில்**

**சிலநாளும் ஒட்டாரோ டொட்டார்"**[8]

என்று வரும் பாடலடிகளால் முன்வைக்கிறது. திருக்குறளும் நாலடியாரும் கூடா நட்பு, நட்பாராய்தல் போன்ற தலைப்புகளில் மேலும் நட்பு குறித்த செய்திகளை எடுத்துரைக்கின்றன. அறநூற்கருத்துக்களை அடியொன்றி நோக்குகையில் சங்கப் புலவர் மன்னரிடையே மலர்ந்த நட்பு உணர்ச்சி பூர்வமானது. உள்ளம் கடந்து உயிர் சார்ந்தது. தன்னலமற்ற தகைமையது. காலங்கடந்து நிற்கும் மேன்மையது.

## சங்கப் புலவர்கள்

சங்க காலம் மன்னர் ஆட்சிமுறை கொண்டதாக இருப்பினும் மக்களும் கற்றறிந்த சான்றோர்களும் தங்கள் கருத்தை எளிதில் வெளிப்படுத்தும் நிலை இருக்கப் பெற்றதை சங்கப் பனுவல்கள் வழி அறியமுடிகிறது. டாக்டர் மு.வ.,

**"எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலுமாகச் சங்க இலக்கியப் பாடல்கள் மொத்தம் இரண்டாயிரத்து முந்நூற்று எண்பத்தொன்றாகும். இவற்றுள் நூற்றிரண்டு பாடல்களில் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. எஞ்சிய 2279 பாடல்களைப் பாடியவர்கள் 473 புலவர்கள் ஆவர்"**

என்றும்,

**"பலர் தாம் பாடிய பாடல்களின் தொடர்களாலும் தாம் பாடிய பாடல்களின் பண்பாலும் பெயர் பெற்று விளங்குகின்றனர். ஏறத்தாழ நாற்பத்து மூன்று புலவர்கள் தாம் பாடிய பாடற்றொடராலும் திணை முதலியவற்றாலும் காலத்தை வென்று விளங்குகின்றனர்"** [10]

என்றும் சங்கச் சான்றோர்கள் குறித்துப் பேசுகின்றார்.

சங்கப் புலவர்கள் பலரும் அகம், புறம் என்னும் பாகுபாட்டின் அடிப்படையில் தங்கள் பாடல்களைப் புனைந்துள்ளனர். இயற்கையோடு இயைந்த மக்களின் வாழ்வியலையும், மன்னர்களின் ஆட்சி நெறிமுறைகளையும், சமூகத்தில் நடந்த பல்வேறு நிகழ்வுகளையும், தமது அனுபவத்தோடு கலந்து பாடியுள்ளனர். சங்கப் புலவர்களின் பாடற்பொருளைக் கொண்டே பழந்தமிழ்ச் சமூக மக்களின் வாழ்வியல் போக்குகளை ஒருவாறு உய்த்துணர முடிகிறது. சங்கப் புலவர்கள் மக்களாலும் மன்னர்களாலும் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப் பெற்றுள்ளனர். புலவர்கள் ‘‘சான்றோர்’ என அழைக்கப்பட்டனர். மா.ரா.போ. குருசாமி,

**"எட்டுத்தொகை, பத்துப்பாட்டுள் குறிப்பிடப்படும் புலவர்களைச் சான்றோர் எனவும் சங்கத்துச் சான்றோர் எனவும் உரையாசிரியர்கள் குறிப்பது நினைவுகூர்தற்குரியது"**[11]

என்று, சங்கப் புலவர்களுக்கு இருந்த நன்மதிப்பை விளக்குகிறார். கடைச்சங்க காலமே சங்க காலம் என்று வரையறை செய்யப்படுகிறது. இக்காலகட்டத்தில் வாழ்ந்த நல்லிசைப் புலவர்களே சங்கப் புலவர்கள் என்னும் சிறப்புக்குரியவர்கள் ஆவர்.

## சங்கப் புலவர்களின் நோக்கம்

சங்கப் புலவர்கள் வெவ்வேறு சூழலில் வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தவர்களாக இருந்தபோதும் தாம் பாடிய பாடற்பொருளில் ஒருமித்த போக்குடையவர்களாக இருந்தமை அறியமுடிகிறது. தமது நோக்கத்திலிருந்து விலகாத கொள்கையுடையவர்களாகவும், மனதில் பட்டதை எடுத்துரைக்கும் திறமுடையவர்களாகவும் இருக்கப்பெற்றனர். அறவழி நின்று உண்மையை உரைப்பதை அவர்கள் தங்களது கடமையாகக் கொண்டிருந்தனர். க.வெள்ளைவாரணர்,

**"பழந்தமிழ்ப் புலவர்கள் தாம் கற்ற பெருங்கல்வியை தமிழ் மக்களுக்குப் பயன்படுத்தினர். தம் அறிவுரைகளை மகிழ்ந்து கேட்போரை மதித்தனர். தாம் கூறும் அறிவுரைகளைக் கேட்டுணரும் அறிவைப் பெறாதார் மன்னராயினும் அவரை மதியாது இகழ்ந்தனர்"** [12]

என்று, சங்கப் புலவர்கள் குறித்த தமது கருத்தைப் பதிவு செய்கின்றார். சங்கப் புலவர்கள் குறித்து உ.வே.சா.

**"சங்க காலத்துப் புலவர்கள் ஒரு காலத்தினரல்லர்; ஒரு தேயத்தரல்லர்; ஒரு சாதியரல்லர்; ஒரு குலத்தினரல்லர்; ஒரு தொழிலினரல்லர்; ஒரு மதத்தினரல்லர்"** [13]

என்று கூறுகின்றார். இவ்வாறு இருந்தபோதும் சங்கத்துச் சான்றோர்கள் ஒருமித்த கருத்துடன் நாடும், மன்னரும், மக்களும் எந்நாளும் துன்பமின்றி இன்பமுற்று வாழ வேண்டுமென வாழ்த்திப் பாடினர். வறுமையில் இருந்தபோதும் பொருள்பெறும் நோக்கோடு இவர்கள் பாடல் புனையவில்லை என்பதை அறியமுடிகிறது. தாம் வாழ்ந்த காலகட்டத்தின் சமுதாயச் சூழலையும் மக்களின் பழக்க வழக்கப் பண்பாடுகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும், மன்னர்களின் போர், வீரம், கொடை, நாட்டுவளம், ஆட்சித்திறம் போன்றவற்றையும் நாளைய சமுதாயம் அறிந்து கொள்ளும் நோக்கில் தமது பாடல்களை இயற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வ.சுப. மாணிக்கனார்,

**"சங்கப் புலவர் எல்லார்தம் பாடல்களும் காலங்கடந்த ஞால மதிப்பைப் பெற்று வழிவழி வாழ்கின்றன"** [14]

என்றும், சி.இலக்குவனர்,

**"சங்ககாலப் புலவர்கள் இனிய இலக்கியங்களை இன்றும் போற்றிப் புகழும் வகையில் இயற்றித் தந்துள்ளனர். இவர்கள் இன்றைய உலகப் பெரும்புலவர்களோடு ஒப்பிடத்தக்க புலமையும் பெருமையும் உடையவர்கள். இவர்கள் அமைச்சர்களாகவும் தூதர்களாகவும், ஆளுநர்களாகவும், மெய்யுணர்வாளர்களாகவும், மக்கள் துயர் போக்கும் சான்றோர்களாகவும், பிறர்க்கென வாழும் பெரியோர்களாகவும் வாழ்ந்து, நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் மக்கள் தொண்டும் ஆற்றினர்"** [15]

என்றும் கூறுவதிலிருந்து பழந்தமிழ்ப் புலவர்களின் பெருமையை உணரமுடிகிறது.

சங்கச் சான்றோர்கள் மன்னர்களைப் பாடி மகிழ்வித்தலை நோக்கமாகக் கொண்டவரல்லர். மக்களின் நலன் கருதிப் பாடியவர்கள் என்பதை அவர்களின் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தியிரண்டு அகப்பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகைச் சமுதாய மக்களின் வாழ்வியல் கூறுகள் அனைத்தையும் அழகுற தமது பாடல்களில் காட்சிப்படுத்தினர். சங்கச் சான்றோர்களுக்கு நாடாளும் மன்னர்களிடம் மட்டுமல்ல நாட்டு மக்களிடமும் நன்மதிப்பு இருக்கப் பெற்றது என்பதை சி.இலக்குவனார்,

**"புலவர்களைக் கடவுளர் எனக் கருதிப் போற்றி வழிபட்டுள்ளனர். இறைவனை வணங்கும் திருக்கோயில்களில் புலவர்களின் வடிவங்களை வைத்து வழிபட்டனர். இன்னும் ஒண்தமிழ்க் கூடலாம் மதுரையில் அங்கயற்கண்ணியின் துங்கநாற்கோயிலில் நாற்பத்தொன்பது புலவர் படிவங்களும் இறைவன் படிவத்துடன் இணையாக வைக்கப்பட்டிருப்பதைக் காணலாமே. ஆங்காங்குச் சில ஊர்களில் நக்கீரர்க்கும் ஔவைக்கும் பிறருக்கும் எடுத்த கோயில்கள் கால வயப்பட்டுக் காணாமற் போகாமல் எஞ்சி நின்று ஏத்துமின் என்று அழைக்கின்றனவே. ஆகவே, மக்களும் புலவர்களைப் போற்றினர் என்பது வெற்றுரையன்று என்று தெளியலாம்"** [16]

என்று உரைப்பதின் வழி அறியலாகிறது.

## மன்னர் புலவர் நட்புறவு

சங்ககாலம் மன்னராட்சிக் காலமாதலால் சில சமயங்களில் போரும் பூசலும் நிலவின. இக்காலகட்டத்தில் மக்கள் அவதியுறும் நிலை ஏற்பட்டது. மன்னரது வெற்றிக்கு வீரர்கள் பலர் தம் இன்னுயிரை இழக்க வேண்டியிருந்தது. முறைதவறிச் செருக்குற்று பிறர் நாட்டை கைப்பற்றும் நோக்குடன் செயல்பட்ட மன்னர்களுக்குத் தமது கூர்ந்த மதிநுட்பத்தால் அறிவுரை செய்து போரைக் கைவிடச் செய்த பெரும் புகழ்ச் சங்கப் புலவர்களைச் சாரும். புலவர்கள் பலர் மன்னரது அவைக்களத்தில் இருக்கப் பெற்றனர். அக்கால மன்னர்களும் தாம் புலவர்களின் நாவால் பாடப்படுவதை பெருமையாகக் கருதினர். தாம் வாழும் காலத்தில் புலவர்களின் வாழ்த்துதலைப் பெற்றால் இறந்த பிறகு மறுமை உலகத்தில் நற்கதி பெறலாம் எனும் நம்பிக்கை அன்றைய மன்னர்களிடையே நிலவியது என்பதை,

**"புலவர் பாடும் புகழுடையோன் விசும்பின் வலவனேவா வான வூர்தி**

**எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தென"** [17]

என்று வரும் முதுகண்ணன் சாத்தனாரின் பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போருக்குச் செல்லும் முன்,

**"உலகமொடு நிலைஇய பார்புகழ் சிறப்பிற்**

**புலவர் பாடாது வரைகவென் நிலவரை"** [18]

எனக் கூறும் வஞ்சின உரையால் சங்கப் புலவர்களின் பெருமை வெளிப்படுகிறது. சங்கப் புலவர்களுக்கும் மன்னர்களுக்கும் இருந்த நட்புறவை அரங்க. இராமலிங்கம்,

> **"பழந்தமிழ் வேந்தரிடம் புலவர்கள் பெற்றிருந்த செல்வாக்கு புகழத்தக்கது. தம்மை நாடிவந்த புலவர் பெருமக்களை அன்புடன் வரவேற்று, வேண்டியன நல்கிப் போற்றினார் வேந்தர். தம்மை விட்டுப் பிரியும் பொழுது ஏழடி புலவரின் பின்சென்று வழியனுப்பும் பண்பாட்டையும் பெற்றிருந்தனர்"** [19]

என்று கூறுகின்றார்.

மன்னர்களது வெற்றியைப் பாடிப் பரிசில் பெறும் நிலையைக் கடந்து, அவர்களது வாழ்வில் ஏற்படும் துன்ப நிலை கண்டு இரங்குபவர்களாகவும் சங்கப் புலவர்கள் இருக்கப் பெற்றனர். மன்னன் வடக்கிலிருந்து உயிர் துறந்தபோது தாமும் உயிர்துறந்து அழியாப் புகழ் பெற்றனர். முரசுக் கட்டில் என அறியாது துயில்கொண்ட மோசிகீரனாருக்கு தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை கவரி வீசினான் என்பதிலிருந்து அக்கால மன்னர்கள் புலவர்கள் மீது கொண்டிருந்த நன்மதிப்பு விளங்கும். கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இருந்த நட்பு, பாரிக்கும் கபிலருக்கும் இருந்த நட்பு பொருள் பெறும் நோக்குடையது அல்ல. தன்னலமற்றது. தம் இன்னுயிரையே துறக்குமளவிற்கு ஆழமானது.

> **"பழந்தமிழ் வேந்தரிடம் புலவர்கள் கொண்டிருந்த தொடர்பு புரவலர் இரவலர் என்ற நிலையினைக் கடந்து உள்ளம் உணர்ந்த உயிர்நட்பாக விளங்கியது. வேந்தன் உயிர் துறக்கும்பொழுது தாமும் உயிர்துறக்கும் அளவிற்கு அன்பு பூண்டொழுகினர்"**[20]

எனக் கூறும் அரங்க. இராமலிங்கம் கூற்றும் சங்கப் புலவர்களின் பெருமையை உணர்த்துகிறது. சங்கப் புலவர்களுக்கும் மன்னர்களுக்கும் இருந்த நட்புறவை மா.இராசமாணிக்கனார்,

> **"கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்றபடி கல்வி நலம் வாய்க்கப்பெற்ற தமிழ் வேந்தர் முத்தமிழ்ப் புலவர்களை நன்கு போற்றினர். அவர்களைத் தம் உற்ற நண்பராகக் கொண்டனர். தம் இன்ப துன்பங்களில் பங்குகொள்ளச் செய்தனர்"** [21]

எனக் கூறுகின்றார்.

புலவர்கள் தம்மினும் சிறப்புடையோர் என மன்னர்கள் கருதினர். அதேபோல் புலவர்களும் வறுமைக்குத் தளராதவர்களாகவும், அநீதிக்கு அஞ்சாதவர்களாகவும் உண்மையை உரைக்கும் இயல்பினராகவும் இருக்கப் பெற்றனர். அதியமான், குமணன் போன்றோரும் பதிற்றுப்பத்தில் வரும் மன்னர்களும் புலவர்களுக்குச் செய்த சிறப்புகளால் அழியாப் புகழடைந்தனர்.

## நிறைவுரை

பழந்தமிழ்ப் புலவர்களின் நற்கருத்துக்கள் யாவும் காலங்கடந்து வாழும் பெருமதிப்புடையன. மனதில்பட்டதை மதிநுட்பத்தோடு உரைத்தனர். மன்னர்களிடம் மட்டுமல்ல, நாட்டு மக்களிடமும் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். அவர்களின் கூற்றுக்களை மன்னர்கள் கடைபிடித்தனர். மன்னன் தவறிழைத்த வழி இடித்துரைக்கவும் செய்தனர். மக்கள் நலனில் அக்கறை செலுத்திய மன்னர்களைத் தம் பாடல்கள் மூலம் அழியாப் புகழடையச் செய்தனர். பொருள் பெறும் நோக்கம் சங்கத்துச் சான்றோர் எவரிடமும் இருக்கப்பெறவில்லை. மாறாக அறஇலக்கியங்கள் கூறும் நட்பின் இலக்கணத்தை உணர்ச்சி கலந்த உள்ளத்துடன் மன்னர்கள் மீதும் மக்கள் மீதும் செலுத்திய செம்மாந்த புகழுக்குரியோர் சங்கத்துச் சான்றோர்கள் ஆவர்.

## குறிப்புகள்


1. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப.857.
2. வடமலை நிகண்டு, செய்யுள் 938.
3. குறள். 785.
4. குறள். 786
5. குறள். 788
6. நாலடியார், 29:11.
7. நாலடியார் 218:1-2
8. நாலடியார், 213:1-2
9. மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.235.
10. மே.கு.நூ. ப.236
11. மா.ரா.போ.குருசாமி, சங்க காலம், ப.16
12. கோ. தனபாலன் (தொ.ஆ), கட்டுரைச் செல்வம், பக். 22-23.
13. உ.வே.சாமிநாதையர், சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப.89.
14. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப.28
15. சி. இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல், பக். 157-158.
16. மே.கு,நூல். ப.147.
17. புறம். 27:7-9.
18. புறம். 72:15-16
19. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.58.
20. மே.கு.நூல், பக் 79-80
21. மா.இராசமாணிக்கனார், தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.120


●


**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி), தாம்பரம், சென்னை**

# தமிழ்நாட்டு ஓவியங்களின் ஆவணம்



"ஒரு கலை சிருஷ்டியை உணர வேண்டுமானால் அதற்கு முன்னர் பணிவுடன் அமர்ந்து மூச்சுக் காட்டாமல் அமைதியாய் அது கூறும் செய்திக்காகக் கிஞ்சித்தேனும் காத்திருக்க வேண்டும்"

- ஒக்ககூரா காக்குஜோ



முனைவர் இரா. வெங்கடேசன்

## ஓவியக் கலை மரபின் தொன்மை

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் அன்றாட வாழ்வில், தான் பயன்படுத்திய பொருட்களின் மீது மனிதனது தூரிகை பல்வேறு வடிவங்களை ஓய்வின்றித் தீட்டியது. மிகவும் தனித்தன்மைகள் கொண்ட அவற்றின் கூறுகள், மனிதக் குழுக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்ந்ததை அறிய உதவுகின்றன.

மனித நாகரிகத்தின் மிகத் தொடக்கக் காலத்திலேயே, தன்னைச் சூழ்ந்திருக்கும் பொருள்களின் மீது தனக்கு விருப்பமானவற்றை, இயற்கை வண்ணங்களைக் கொண்டு வரைந்து அவற்றை அழகியல் நிறைந்த கலைப்பொருட்களாக்கினான் மனிதன். வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே, தான் தங்கியிருந்த இயற்கைக் குகைத்தளங்களின் சுவர்களில், அன்றாடம் தான் இயற்கையின் மூலம் கண்டுணர்ந்தவற்றை, இயற்கை வண்ணங்களைக் கொண்டு வரைந்து வைத்திருந்தான்.

கட்டடச் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள் குறித்த சங்க இலக்கியப் பதிவுகள் நம் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கின்றன. கல்லில் சிலையாக வடித்து வழிபடுவதற்கு முன் தெய்வ உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டி வழிபடப்பட்டதைத் தொல்லியல் சான்றுகள் உணர்த்துகின்றன.

பல்லவர், பாண்டியர் காலத்தில் செழித்த சுவரோவிய மரபு, இராசராச சோழன் காலத்தில் புகழின் உச்சம் தொட்டதைத் தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் உள்ள உன்னதமான ஓவியங்கள் உணர்த்துகின்றன. பின்னர், ஓர் இடைவெளிக்குப் பிறகு, சுவரோவியக் கலை விஜயநகர – நாயக்கர் காலத்தில் தனித்தன்மைகள் கொண்ட புத்தம் புதிய பண்புக்கூறுகளுடன் எழுச்சி பெற்றது. தென்னிந்தியாவில், குறிப்பாக ஆந்திர மாநிலத்தில் இக்காலகட்ட ஓவியங்கள் ஏராளமாக உள்ளன.

தமிழகத்தின் வடபகுதியில், குறிப்பாகக் காஞ்சிபுரம், திருப்பருத்திக்குன்றம் போன்ற இடங்களில் உள்ள பல ஓவியங்கள் குறித்துத் தகவல்கள் வெளிவந்துள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலிருந்த இக்காலப் பகுதியைச் சேர்ந்த ஓவியங்கள் பெரும்பாலானவை இழக்கப்பட்டுவிட்டன. இழப்புகளின் பின்புலத்தில் நோக்கும்போது திருப்புடைமருதூர் ஓவியங்களும், சமண ஓவியங்களும் தனித்த கவனத்தைப் பெறுகின்றன.

### திருப்புடைமருதூர் ஓவியங்கள்

தமிழகத்தின் தென்மாவட்டங்களுள் ஒன்றான திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில், வீரவநல்லூருக்கு வடக்கே ஏழு கிலோ மீட்டர் தொலைவில், தாமிரபரணி ஆற்றுடன் கடனாநதி எனும் சிற்றாறு கலக்குமிடத்தில் திருப்புடைமருதூர் அமைந்துள்ளது. இவ்வூரின் தனிப்பெரும் சிறப்பாக அமைவது இங்குள்ள சிவன்கோவில் ஆகும். இலிங்க வடிவில் சிவன் உமையன்னையோடு எழுந்தருளியுள்ள இக்கோவில், அருள்மிகு கோமதியம்பாள் சமேதர் நாறும்பூநாத சுவாமி திருக்கோவில் என்று தற்காலத்தில் வழங்கப்படுகிறது.

இக்கோவிலில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இக் கோவில் ஓவியங்கள் எப்போது, யாரால் தீட்டுவிக்கப் பெற்றவை என்பதை அறிவதற்குத் தெளிவான சான்றாதாரங்கள் யாதும் இல்லை என்றாலும், அங்குள்ள சில சிற்பங்களைக் கொண்டு அவை தளவாய் அரியநாதரால் வரைவிக்கப் பெற்றிருக்கலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

கலை வரலாற்று அறிஞராகவும், சிறந்த சுவரோவிய ஆய்வு வல்லுநருமாக விளங்கும் முனைவர் சா. பாலுசாமி அவர்கள் திருப்புடைமருதூர் ஓவியங்களை அரிதின் முயன்று ஆவணப்படுத்தியுள்ளார். மிகுந்த ஈடுபாட்டுடனும் ஆவணப்படுத்தும் நெறிமுறையை முழுமையாகக் கையாண்டும் திருப்புடைமருதூர் கோவில் ஓவியங்கள் இந்நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள ஓவியங்களில் ஓர் அங்குலத்தைக்கூட விடாமல் இந்நூலில் விவரித்துள்ளார் நூலாசிரியர். ஓவியங்கள் குறித்த தன் கருத்து முடிவுகளை முன்வைக்க, போதுமான சான்றுகளையும் அவர் விளக்கியுரைக்கின்றார்.

நாயக்கர் கால ஓவியங்களைக் குறித்து எழுதப்பட்ட பல நூல்களிலும் திருப்புடை மருதூரிலுள்ள போர்க் காட்சிகள், குதிரை வணிகக் கப்பல் ஆகியன தவறாமல் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆயினும் ஐந்து நிலைகள் கொண்ட கோபுரத்தின் இரண்டாம் தளச் சுவர்கள் முழுமையும் தீட்டப்பட்டுள்ள காட்சிகள் எந்தப் போரைக் குறிக்கின்றன? அது, யார் யார் இடையே நடைபெற்றது? போரின் காரணமென்ன? கப்பல் காட்சி எதற்காக அங்குத் தீட்டப்பட்டுள்ளது? என்பன போன்ற பல வினாக்களுக்கு இந்நூல் விடையளிக்கிறது.

திருப்புடைமருதூர் ஓவியங்கள் மூலமாக, கி.பி. 1532ஆம் ஆண்டு விஜயநகர அரசிற்கும் திருவிதாங்கூர் அரசிற்கும் இடையே நடந்த வரலாற்று நிகழ்வான 'தாமிரபரணிப் போர்' பற்றி அடையாளம் கண்டு இந்நூலின் வழியாக வெளிப்படுத்தியிருப்பது பெரும் வரலாற்றுப் பங்களிப்பாகும்.

கதை தழுவிய ஓவியங்கள் பெரிதும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே தீட்டப்படுகின்றன. அவ்வகையில் இங்குத் தீட்டப்பட்டுள்ள திருவிளையாடற் புராண ஓவியங்கள், வேப்பத்தூரார், பரஞ்சோதி முனிவர் ஆகியோரால் இயற்றப்பட்ட திருவிளையாடற் புராணங்களை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்பதும், நாட்டுப்புற மரபிலான ஒரு திருவிளையாடற் புராணத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

திருப்புடைமருதூர் ஓவியங்களைக் 'கோட்டாற்றுச் சிற்பிகள்' என அழைக்கப்பெறும் குழுவினைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் என்ற கருத்தும், நாயக்கர் காலத்தில் தீட்டப்பட்டிருப்பினும் இவ்வோவியங்கள் தனித்துவமானதொரு பாணி, இதனை 'வேணாட்டு பாணி' என வழங்கலாம் என்ற கருத்தும் இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஓவியங்களின் உள்ளடக்க அடிப்படையில் பார்க்கும்போது ஐந்தாம் தளத்திலிருந்து கீழாகக் கண்டுவரும் வகையிலே ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவற்றை வாசகர்களின் புரிந்துசெல்லும் முறைகருதி கீழிருந்து மேலாகத் தளங்கள் வரிசைப்படுத்தப்பட்டு நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. ஒரு தளத்தின் உள்







நுழைந்து இடது புறத்திலிருந்து பார்த்துவரும் தன்மை கருதி, சுவர்களும் எண் இடப்பட்டு ஓவியங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

ஓவியங்களை விளக்கிக் கூறும்போது, முதலில் தளத்தின் வரைபடம் இடம்பெறுகிறது. அதனை அடுத்து முழுச்சுவரும் காட்சிப்படுத்தப்படுகிறது. பின்னர் சுவரில் கதை நிகழ்வுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள முறையில் வரிசை பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வரிசையும் தனித்தனியே இடம்பெறுகிறது. அதனை அடுத்து ஒரு வரிசையில் இடம்பெறும் காட்சிகள் தனித்தனியே பிரிக்கப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அந்நிகழ்ச்சியின் முக்கியமான ஓவியப் பகுதிகளை நுணுக்கமாக உணரும் வகையில் விவர ஓவியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புமுறை, ஓவியங்களின் முக்கியக்கூறுகள், ஓவிய வரைமுறை, வண்ணப் பயன்பாடு ஆகியவற்றை நுட்பமாக உணரப் பயன்படும்.

## தமிழ்நாட்டுச் சமண ஓவியங்கள்

இந்தியப் பெருஞ்சமயங்களுள் ஒன்றான சமணம் எப்போது தோன்றியது என்பதற்கு உறுதியான சான்றாதாரம் ஏதுமில்லை. என்றாலும், சிந்துவெளியிலேயே சமணம் இருந்தது என்ற கருத்தைச் சில அறிஞர்கள் முன்வைக்கின்றனர்.

'மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில்....... பல பிறந்தமேனி உருவங்களும் விலங்குகளின் உருவங்கள், எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட முத்திரைகளும் கிடைத்துள்ளன. இந்தியாவைப் பொருத்தமட்டில் உருவ வழிபாட்டினைத் துவங்கி வைத்தவர்கள் ஜைனர்களே என்பர்.

சிரவணபெலகுளக் குடியேற்றத்திற்குப் பின்னர் விசாகாச்சாரியார் என்னும் சமணத் துறவியின் தலைமையில் ஒரு குழுவினர் கொங்குநாடு வழியாகத் தமிழகத்தில் பல பகுதிகளுக்கும் வந்து தங்கினர். இவர்கள் தங்கிப் பணியாற்றுவதற்கும் மக்களிடமிருந்து ஒதுங்கி வாழ்வதற்கும் ஏற்ற மலைவாழிடங்கள் மிகுதியாக இருந்ததால், மதுரைப் பகுதியில் பல மலைகளில் அவர்கள் பள்ளி அமைத்துத் தங்கிச் சமயப் பணிகளைத் தொடங்கினர்.

பொ.ஆ.மு. 300 அளவில் இத்தகைய குடியேற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு மதுரைப் பகுதியிலுள்ள பல குகைகளும் தமிழ் - பிராமி கல்வெட்டுகளும் சான்றுகளாக நிற்கின்றன. ஆனால், பொ.ஆ.மு. 4ஆம் நூற்றாண்டளவிலேயே சமணம் தமிழகம் வழியாக இலங்கைக்குச் சென்றது என்ற கருத்தும் உண்டு.

சமணம் பல்வேறு கலைகளையும் தனித்தன்மைகளுடன் போற்றி வளர்த்துள்ளது. 'பள்ளி' என்னும் சொல்லே, தமிழிற்குச் சமணம் வழங்கிய கொடை என்பதில் ஐயமில்லை. அறவோர் துறவு பூண்டுத் தவமியற்றிய பள்ளிகள் மக்களுக்கு எழுத்தையும் இலக்கியத்தையும் அறநெறியையும் போதித்தன. துறவியரும் சமண சித்தாந்தத்தை ஏற்றிருந்த வாழ்வினரும் ஏராளமான, நூல்களை, மொழி, வளம் பெறவும் மக்கள், அறவாழ்வுறவும் வழங்கினர்.

'திரமிள சங்கம்' என்ற சங்கம் வைத்துத் தமிழின் வளத்தைப் பெருக்கினர். சமணத்தால் தமிழ்மொழி பெற்ற வளம் அளப்பரியது. இலக்கியம், இலக்கணம், புராணம், நிகண்டு,

சிற்றிலக்கியம், சோதிடம் முதலான பல்வேறு துறைகளிலும் நூல்களைச் சமணர் யாத்தனர்.

சமண பனுவல்கள் ஓவியக்கலையை உன்னதத்தொழில் என்று போற்றுகின்றன. ஓவியர்கள், சிற்பிகளுக்குள் வைத்தெண்ணப்பட்டனர். முதல் தீர்த்தங்கரரான ரிஷபதேவரால் இக்கலை கற்பிக்கப் பெற்றதாகச் சமண நூல்கள் கூறுகின்றன.

தமிழகத்திலும், எல்லோராவிலும் எஞ்சியுள்ள சமணச் சுவரோவியங்களை உலகக் கலையியல் வல்லுநர்கள் பலரும் ஆராய்ந்துள்ளனர். சமணம் சார்ந்த கட்டடக்கலை, சிற்பக்கலை குறித்துப் பல்வேறு நூல்களும் ஓவியக்கலை குறித்துக் கட்டுரைகளும் இருந்தபோதிலும் சமணம் வளர்த்த ஓவியக்கலை குறித்துத் தனிநூல் தமிழில் இல்லாதிருந்தது. இந்நிலையைத் "தமிழ்நாட்டுச் சமண ஓவியங்கள்" என்ற இந்நூல் மாற்றியுள்ளது. தமிழ்நாட்டுச் சமண ஓவியங்களை முழுமையாகப் பார்த்து உணர்ந்திடும் வாய்ப்பை இந்நூல் நமக்கு வழங்கியிருக்கிறது.

ஆனைமலை, சித்தன்னவாசல், ஆர்மாமலை, திருமலை, திருப்பருத்திக்குன்றம், கரந்தை, சித்தாமூர், வீடூர் ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்களை நெறிமுறைப்படி ஆவணப்படுத்தியும், ஆய்வு செய்தும், விவரித்தும் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

திருப்பருத்திக்குன்றம், கரந்தை ஆகிய இடங்களில் உள்ள ஓவியங்கள் புத்தாக்கம் செய்யப்பட்டுள்ளன. திருப்பருத்திக்குன்றம் பகவான் புஷ்பதந்தர் கருவறை ஓவியங்கள் மட்டும் பழமை மாறாமல் உள்ளன. அவைகள் இந்நூல் வாயிலாகக் காணக்கிடைக்கின்றன.

சித்தன்னவாசல், திருப்பருத்திக்குன்றம் ஆகிய பெயர்க் காரணங்கள் குறித்த சில புதிய கருதுகோள்களையும் ஓவியங்களில் இடம்பெறும் விலங்குகள், பறவைகள், தாவரங்கள் குறித்த சில புரிதல் முயற்சிகளும் மேலாய்வுக்கு உரிய வகையில் இந்நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை சிந்தனைக்குரிய பகுதிகளாகும். சில சுவடிக்கட்டை ஓவியங்களைப் பற்றிய படங்களும், விளக்கங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஒன்பதாம் நூற்றாண்டின் முன் தொடங்கி, கடந்த நூற்றாண்டு வரை சமணம் வளர்த்த ஓவியக் கலையின் பல்வேறு பண்புக் கூறுகளை ஆய்வுநோக்கில் அணுகுவது தமிழகத்தில் வளர்ச்சியுற்ற ஓவியக் கலையின் பல்வேறு பரிமாணங்களை அறியத் துணைபுரியும். அவற்றிற்கு இந்நூல் பெரும்பங்களிப்பாக அமையும் என்பது திண்ணமாகும்.

கலை வரலாற்று ஆய்வாளரான முனைவர் சா. பாலுசாமி அவர்கள் தமிழ்நாட்டுச் சமண ஓவியங்களை பெருமுயற்சி செய்து இந்நூலில் ஆவணப்படுத்தியுள்ளார். மிகுந்த ஈடுபாட்டுடனும் உரிய நெறிமுறையை முழுமையாகக் கையாண்டும் சமண ஓவியங்களை ஆவணப்படுத்தி அளித்துள்ள அவரது முயற்சியைத் தமிழுலகம் பெரிதும் போற்ற வேண்டும்.

காஞ்சி, பனைமலை ஆகிய இடங்களில் எஞ்சியுள்ள பல்லவ ஓவியங்களும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காணப்படும் சோழ ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ள அதே செவ்வியல் மரபையே ஆனைமலை, சித்தன்னவாசல், ஆர்மாமலை ஓவியங்கள் பிரதிபலிக்கின்றன என்ற ஆய்வு முடிவை பாலுசாமி அவர்கள் தெளிவாக முன்வைத்திருக்கிறார்.

அஜந்தா ஓவியங்களின் அமைப்பு, வடிவமைப்பு முறையினை மேற்கொண்டு சித்தன்னவாசல் ஓவியம், இராஷ்டிரகூட - கங்கர் கலை பாணியை உட்கொண்ட செவ்வியல் மரபிலான ஆர்மாமலை ஓவியம் மெல்லிய அழுத்தமான கோடுகள், செவ்வியல் கால வண்ணங்கள் ஆகியனவற்றைக் கொண்டுள்ளன என்று ஒப்பிட்டு ஆராய்ந்தும் வெளிப்படுத்தியிருப்பது சிறப்புக்குரியதாகும்.

தமிழ்நாட்டு ஓவிய மரபிற்கும், கலை வரலாற்று ஆய்விற்கும் பெருந்துணையாக விளங்கும் 'திருப்புடைமருதூர் ஓவியங்கள்', 'தமிழ்நாட்டுச் சமண ஓவியங்கள்' என்ற இந்த இரண்டு நூல்களையும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மிகச் சிறப்பான முறையில் வடிவமைத்து, தரமான தாளில் வெளியிட்டிருக்கிறது. தமிழில் இத்தகு சிறப்பு வாய்ந்த ஓவியநூல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை என்பதை ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். அரசு சார்ந்த ஒரு நிறுவனம் தரமான வெளியீடுகளை அளித்திருப்பது பாராட்டுதலுக்கும்; போற்றுதலுக்கும் உரிய செயலாகும். ஆளுமைப் பண்புகள் நிறைந்த தலைமையின் கீழ் செயல்படும் ஓர் அரசு நிறுவனத்தால்தான் இப்படியான செயல்களைச் செய்யமுடியும்.

மிக உயர்தரமான இப்படைப்புகள் 50% கழிவு விலையில் விற்பனை செய்யப்படுவது இன்னுமோர் கூடுதல் சிறப்பாகும்; வாசகர்களுக்குப் பயனுள்ள செய்தியாகும்.

தமிழ்நாட்டு ஓவியக் கலைப் படைப்புகள் சார்ந்த ஆய்வுகளுக்கும், அறிதலுக்கும் முன்மாதிரியாகவும், கருவி நூலாகவும் இவ்விரண்டு படைப்புகள் அமைந்துள்ளன என்பதைத் தமிழ்ச் சமூகம் எண்ணிப்பார்க்க வேண்டும்; பாராட்ட வேண்டும்.

●

**இளநிலை ஆராய்ச்சி அலுவலர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை**




# நூறு பெண்கள் – நூறு சிறுகதைகள்
## ஓர் உரையாடல்

**முனைவர் ஏ. இராஜலட்சுமி**

தமிழிலக்கியப் பரப்பில் பெண் படைப்பாளிகளின் எழுத்துகள் குறித்த சிரத்தையான தொகுப்பு நூல்களோ, திறனாய்வு நூல்களோ எழுதப்படுவது மிகவும் அரிதாகவே நடந்தேறுகிறது. பெண் படைப்புலகத்தினை வளப்படுத்தவும், சமகால சமூகத்தின் உண்மையான முகத்தினை அறிந்துகொள்ளவும் பெண்களின் மன உணர்வினை நுட்பமாக உணரவும் பெண் படைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

அந்தவகையில் “நூறு பெண்கள்- நூறு சிறுகதைகள்” என்ற தலைப்பில் பெண் படைப்பாளிகள் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது. இந்நூலினை மிகக் கடினமான உழைப்பின் மூலம் சாத்தியப்படுத்தியுள்ளார் முனைவர் இரா. பிரேமா அவர்கள். இத்தொகுப்பாசிரியர் ஏற்கெனவே பெண்ணியக் கதைகள், பெண் மையக் கதைகள், உடைபடும் மௌனங்கள் என்று மூன்று சிறுகதைத் தொகுப்புகளைக் கொண்டு வந்துள்ளார். மேலும் “நூற்றாண்டு கண்ட பெண் இலக்கிய ஆளுமைகள்” என்று மூத்த பெண் படைப்பாளிகளின் படைப்புகளை அரிதின் முயன்று தொகுத்து வெளியிட்டுள்ளார். கல்விப்புலம் சார்ந்து பணியாற்றி மாணவிகளை உருவாக்கியதோடு பெண் படைப்புலகம் சார்ந்த இவரின் தொகுப்புப் பணிகள், பெண் படைப்புகள் மீது பெரும் வெளிச்சத்தினைப் பாய்ச்சியுள்ளது.இந்நூலினை ஹெர் ஸ்டோரிஸ் பதிப்பகம் நேர்த்தியாக வடிவமைத்து வெளியிட்டுள்ளது.

சமூகத்தில் சரிபாதியாக விளங்கும் பெண் இனம் இரண்டாம் பாலினமாகவே பார்க்கப்படுகிறது. பெண்களின் அலைவுறல்களையும், வலிகளையும், மன நெருக்கடிகளையும் பெண் படைப்பாளிகள் துல்லியமாக தங்கள் படைப்புகளில் பதிவு செய்துள்ளனர். ஆண் படைப்பாளிகள் அறியாத மனவலிகளையும், அவர்கள் எழுத முன்வராத பெண் உலகின் பல மூடிய பக்கங்களையும் துணிச்சலாக இவர்கள் படைப்பாக்கியுள்ளனர்.

இப்படைப்புகள் குறித்து இலக்கியத் தளத்தில் ஆரோக்கியமான உரையாடல்களோ, செறிவான திறனாய்வுகளோ நடைபெறவில்லை என்பதை இங்குப் பதிவு செய்ய வேண்டியுள்ளது. தமிழிலக்கிய வரலாற்று நூல்களும் பெண் படைப்பாளிகளின் படைப்புகள் குறித்த பதிவுகளை ஒன்றிரண்டினைச் சுட்டிக்காட்டிவிட்டு கடந்து செல்கின்றன.

ஆண்களின் படைப்புகளுக்கும், ஆண் படைப்பாளிகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் பெண் படைப்பாளிகள் ஓரிருவருக்குக் கிடைப்பதும் அரிதாகவே உள்ளது. தமிழில் 200க்கும் மேற்பட்ட இலக்கிய வரலாற்று நூல்கள் எழுதப்பட்டிருப்பினும் பெண் படைப்புகள் குறித்த பாராமுகத்தினையே இவற்றினுள் காணமுடிகிறது.

அங்கீகாரம் மறுக்கப்படும் எழுத்துகளாகவே பெண்களின் எழுத்தினை இன்றும் கடந்து போவது சமூக முன்னெடுப்பிற்கு எந்த வகையிலும் பயன்தராது என்பதை நினைவில் கொள்ள இப்படைப்புகள் சான்றாக உள்ளன.

நூற்றுபத்து பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர் சாவித்திரி அம்மாளின் ‘மறுமணம்’ என்ற சிறுகதையில் தொடங்கி எழுத்தாளர் சரசா சூரியின் ‘தேய்பிறை உறவுகள்’ என்ற சிறுகதையுடன் இத்தொகுப்பு நிறைவடைகிறது.

படைப்பாளிகளின் பெயர் மற்றும் அவர்கள் எழுதிய சிறுகதைகள் மட்டுமல்லாமல் அப்படைப்பாளிகளின் தன் விவரங்களும் இடம்பெற்றிருப்பது இப்படைப்பாளிகளின் ஆளுமையை புலப்படுத்துவதோடு இத்தொகுப்பாளரின் பேருழைப்பையும் பறைசாற்றுகிறது.

குடும்பம் சார்ந்த கண்ணீர் இழுப்புக் கதைகளையும், காதல் கதைகளையும் மட்டுமே பெண் எழுத்தாளர்கள் எழுதுவார்கள் என்ற பொதுப்புத்தியை உடைத்து நொறுக்கியுள்ளது இச்சிறுகதைத் தொகுப்பு.

தமிழ்ப் பெண் நவீன எழுத்திற்கு ஒரு நூற்றாண்டு கால வரலாறு உண்டு என்பதை இத்தொகுப்பு தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள எழுத்தாளர் வை.மு.கோதைநாயகியின் ‘ஆயிரம் ரூபாயும், மூக்குக் கண்ணாடியும்’ சிறுகதை காலம் கடந்தும் பேசப்படக்கூடிய அரிதான கதை. 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் படைப்புலகம், இதழுலகம் என்று பல தளங்களில் முத்திரைப் பதித்தவர் இப்படைப்பாளி.

இவர் இச்சிறுகதையை இப்படித் தொடங்குகிறார், “என்ன மீனாக்ஷி? இந்த ஆபரணம் எப்போது பூட்டிக் கொண்டாய்? ஷோக்குக் கண்ணாடியா? சீக்குக் கண்ணாடியா? என்று காமு புன்னகையுடன் கேட்டாள்.” இரு பெண்களுக்கிடையிலான கிண்டலையும், கேலியையும் மையமிட்ட இவ்வுரையாடல் தமிழ்த் திரைப்படங்களின் அவல நிலை குறித்த அழுத்தமான உரையாடலை நோக்கி நகர்வதை மிக நுட்பமாகக் காட்சிப்படுத்தியுள்ளார் இப்படைப்பாளி. சிரத்தையான உரையாடல்களை பெண்கள் மேற்கொள்வார்கள் என்பதை அடுத்தடுத்த உரையாடல்களில் நேர்த்தியாகப் படைத்துள்ளார். இவர் 50 ஆண்டுகளுக்கு முன்பான இவ்வுரையாடலை எளிதில் கடந்து விட முடியாது.

இங்கிலீஷ் படங்களும் சில ஹிந்திப் படங்களும் பார்க்கும் போது ஐயோ? இந்த மாதிரி எல்லா விதத்திலும் முதல்தரமாய் நம்படங்கள் என்று வெளிவரும்? தமிழ்ப்படம் விமோசனம் அடையும் காலமே வரவில்லையே? நாளுக்கு நாள் ஈனதசையை அல்லவா காட்டுகிறது, என்ற வருத்தம் உண்டாகிறது. சில பட முதலாளிகள் ஒரு படத்தைப் பற்றி வருடக்கணக்கில் செலவு செய்து விளம்பரம் செய்யும் பகட்டைப் பார்த்து இப்படமாவது நன்றாயிருக்குமா பார்க்கலாம் என்று ஆவலுடன் போனால் மனம் வெறுத்துத்தான் திரும்ப நேரிடுகிறது.’ என்று உள்ளீடற்ற தமிழ்த்திரைப் படங்களின் நிலையையும் விரிவாக உரையாடலிற்கு உட்படுத்தியுள்ளனர். இத்தகைய படங்களைப் பார்க்க வேண்டிய தங்களின் அவல நிலையைக் கூறுவதோடு, பிற மொழித் திரைப்படங்களோடு ஒப்பிட்டு பேசக்கூடிய அவர்களின் முதிர்ச்சியான உரையாடலும் இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளதை மறுக்க முடியாது.

பொதுவாக பெண் எழுத்துகள் அழுகையை மையமாகக் கொண்டியங்கும் என்பதைக் கடந்த பெண், ஆண் என்று இருபாலினரின் உளவியல் சிக்கல்களை போகிற போக்கில் இயல்பாக

வெளிப்படுத்தும் பாங்கினை இச்சிறுகதைத் தொகுப்பெங்கும் காண முடிகிறது.

1930களில் எழுதத் தொடங்கிய எழுத்தாளர் கமலா பத்மநாபனின் 'சியாமளா' என்ற சிறுகதை முற்போக்குச் சிந்தனை கொண்ட படைப்பு.

பனிரெண்டு வயதில் பால்ய திருமணம் செய்யப்பட்ட சிறும் சியாமளா, அவளின் கணவன் விபத்தில் மரணமடைய அதற்குப் பின் அவள் வாழ்க்கை என்னவாயிற்று என்பதை நேர்த்தியாகத் தீட்டிச் சென்றுள்ளார் இவ்வெழுத்தாளர். இந்தச் சிந்தனை என்பது அன்றைய காலச் சூழலோடு ஒப்பிடுகையில் மிகப்பெரிய புரட்சிச் சிந்தனையாக பார்க்க வேண்டியுள்ளது.

கணவன் இறந்துவிட்டான் என்பதை புரிந்துகொண்ட அச்சிறுமி தன் பெரியப்பாவிடம் நான் விடோவாப்பா? இனி நான் பொட்டிட்டுக் கொள்ளக் கூடாதா? என்று கேட்பது அன்றைய சமூகக் கட்டுப்பாடுகளை எவ்வளவு வலியுடன் இப்பெண்கள் கடந்தார்கள் என்பதை செறிவாக வாசகர்களுக்குக் கடத்துகிறது.

பெண் குறித்த சமூகப் பார்வையினை காலந்தோறும் இக்கதைகள் நுட்பமாகச் சித்தரிக்கின்றன. அதே நேரத்தில் இக்கதைகளில் காணும் பெண்கள் வெவ்வேறு சூழல்களில் தங்களின் தனித்தன்மைகளைப் புலப்படுத்தப் போராடும் வாழ்வியலைக் கொண்டிருந்தனர் என்பதை உணர்வுப் பூர்வமாக இக்கதைகள் புலப்படுத்துகின்றன.

மேலும், பெண்களின் உணர்வினை மதிக்கும் ஆண்களையும் இவ்வெழுத்தாளர்கள் படைப்பாக்கத் தவறவில்லை. கணவனை இழந்த மகளுக்குப் பிற்போக்குத்தனமான சடங்குகள் கூடாது என்று மறுத்து தொடர்ந்து அப்பெண்ணைக் கற்க அனுமதிக்கும் பெரியப்பாவை இக்கதைகளில் காணமுடிகிறது. தான் துன்பப்பட்டாலும் தன் வறுமையை மீறி தன் மகளை ஆசிரியராக ஆக்கவேண்டும் என்று துடிக்கும் தந்தைகளும் இந்தக் கதைகளில் உலவுகின்றனர். இருப்பினும் இந்த ஆண்களின் எண்ணிக்கை மிகக்குறைவு என்பதையும் இப்படைப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

இந்தியா முழுமையும் இருந்து தமிழில் எழுதும் பெண் படைப்பாளிகள் மட்டுமல்லாமல் உலகம் எங்கும் வாழும் தமிழ்ப் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருப்பது இந்நூலின் ஆகச் சிறந்த தனித்தன்மை.

உலகம் எங்கும் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களை, நடைமுறை முரண்களை, விதம்விதமான கண்ணோட்டத்தில் இப்படைப்பாளிகள் எழுதிச் சென்றுள்ளனர்.

ஆரம்பகால பெண் படைப்பாளிகள் குடும்பம் சார்ந்த கதைகளோடு, பெண்களுக்கிடையிலான நுண் அரசியலையும், ஆணாதிக்கச் சமூக அடக்கு முறைகளின் அளவுகோல்களையும் சமூகக் கருத்தாக்கங்களின் மீதான தங்களின் உரையாடலையும், மேலோங்கிய தங்கள் அறிவுத் தளத்தினையும் அதன்வழி சமூக அவலங்களையும் படைப்பாக்கியுள்ளனர்.

1970-80களில் வாசகர்களிடம் பெருமளவு சென்று சேர்ந்த பெண் படைப்பாளர்களின் சிறுகதைகளின் கதைக்கரு குடும்ப அமைப்பின் இறுக்கத்தினையும், அடையாளமற்ற பெண்ணின் வாழ்வியலையும், பாசாங்கு மிகுந்த உறவுகளின் உண்மை முகங்களையும், அலுவலகம், குடும்பம் இரண்டிற்குள்ளும் பெண்படும் பாடுகளையும், பணித்தளத்தில் நேரும் பாலியல் சீண்டல்களையும் தம் படைப்பாக்கியுள்ளனர்.

நவீன படைப்புகள் சமனற்ற சமூக அவலங்களையும், தனித்து வாழும் பெண்ணின் சவாலான வாழ்வியலையும், உறவுகளுக்கிடையிலான மன விகாரங்களையும், பெண், ஆண் நட்பினையும், வயது வேறுபாடின்றி பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமைகளையும் அழுத்தமாக மட்டுமன்றி மிக வெளிப்படையாக பொட்டில் அறைந்தாற்போல் பேசுகின்றன.

உலகம் முழுவதிலும் இருந்து எழுதும் பெண்கள் போர் பற்றியும், போரின் மூலம் ஏற்பட்ட இழப்புகள் பற்றியும் பிழைப்பிற்காகவும், அன்பிற்காகவும் அலைந்து திரியும் ஆணின் வலி பற்றியும், புரிதலோடு கூடிய குடும்ப உறவுகள் பற்றியும் பேசும் அதேநேரத்தில் உலகெங்கிலும் பெண்ணிற்கு இழைக்கப்படும் அநீதிகளையும் இக்கதைகள் பதிவு செய்துள்ளன.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு படைப்பும் தனித்துவமானதாக அமைந்துள்ளது. பெண்களின் உலகை மட்டுமல்ல, இச்சமூகத்தின் – இவ்வுலகின் உண்மை முகத்தினை எவ்வித பாசாங்குமின்றி ரத்தமும் சதையுமாக அறிந்து கொள்ள "நூறு பெண்கள் – நூறு சிறுகதைகள்" என்ற இப்பெருந்தொகுப்பு பேருதவி புரிகிறது என்றால் அது மிகையில்லை.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர்,**
**பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுச்சேரி.**



# இருத்தலிய வாசிப்பில் தாயைத்தின்னி நாவல்



சுப்பிரமணி இரமேஷ்

படைப்பிலிருந்து அந்தப் படைப்பின் ஆசிரியரை வெளியேற்றியதில் நவீனக் கோட்பாடுகளுக்கு முக்கியப் பங்குண்டு. ஒரு படைப்பின்மீது வெவ்வேறு வாசிப்புகள் நிகழ இக்கோட்பாடுகளே துணை நிற்கின்றன. நவீன இலக்கியங்களைப் பொறுத்தவரை வாசகரும் படைப்பும் தனித்து விடப்படுகின்றனர். வாசகர் தன் வாசிப்புப் பின்புலத்திலிருந்து அந்தப் பிரதிக்கு ஓர் அர்த்தத்தை உருவாக்கிக் கொள்கிறார். வாசகர் உருவாக்கிக்கொள்ளும் அர்த்தத்தைப் படைப்பாளர் விமர்சனம் செய்ய முடியாது. ஏனெனில், நவீன இலக்கியப் பிரதிகளில் அர்த்தம் என்பது ஒன்றாக இருப்பதில்லை. அர்த்தம் தள்ளிப்போடப்பட்டுக்கொண்டே இருக்கிறது. படைப்பாளர் கருதிய அர்த்தமும் வாசகர்கள் உருவாக்கிக்கொள்ளும் சுயாதீன அர்த்தமும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஏனெனில், படைப்பின் மீதான அர்த்தத்தை உருவாக்குவதில் காலமும் வாசகரின் அரசியலும் பின்னணியாகச் செயல்படுகின்றன. மேலும், கோட்பாடுகள் மையமான வாசிப்பை நிராகரிக்கின்றன; தட்டையான வாசிப்பிலிருந்து படைப்பை விடுவித்திருக்கின்றன. ‘ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறிப்பிட்ட சமூகம் நம்புவதற்கேற்ப விநியோகிக்கப்படும் உண்மைகள்தான் கோட்பாடுகள்’ (அனைத்துக் கோட்பாடுகளும் அனுமானங்களே) என்கிறார் எம்.ஜி.சுரேஷ். கோட்பாடுகள் நிறுவப்பட்ட உண்மைகளின் தொகுப்பாக உள்ளது. இக்கோட்பாடுகளில் இருத்தலியமும் ஒன்று.

மனிதத் தோற்றத்தின்மீதான இருப்பை இருத்தலியம் விசாரணை செய்கிறது. மனித சமூகம் இரு உலகப்போர்களின் ஊடாகப் பெரும் அழிவைச் சந்தித்தது. இந்தச் சூழலில்தான் மனிதன் படைக்கப்பட்டதன் சாரம் என்னவாக இருக்கும் என்ற சந்தேகத்தை எழுப்பினர். தொழில் வளர்ச்சி மனித இருப்பின்மீது பெரும் இடையீட்டை நிகழ்த்தியது. இயந்திர வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்த சமூகம், அந்த வளர்ச்சியை மனித

அழிவுக்கே பயன்படுத்தியது. இயந்திரங்கள் வானத்தில் வட்டமிட்டுக்கொண்டு இருக்கின்றன; மனிதன் புழுதியில் புரண்டு கிடக்கிறான். பெரும் ஆயுதங்களைக் கொண்டு எவ்விதக் குற்றவுணர்ச்சியும் இல்லாமல் மனிதர்களே சக மனிதர்களை அழிக்கும் நிலையை இருத்தலியவாதிகள் கண்டனர். இந்தச் சூழலில்தான் மனிதன் யார்? அவன் எந்த நோக்கத்திற்காக இந்தப் பூமிக்கு வந்தான்? என்பது போன்ற மனித இருப்பு சார்ந்த அடிப்படையான கேள்விகளை இருத்தலியவாதிகள் கேட்டனர்.

இருத்தலியம் என்ற கோட்பாட்டை உருவாக்கியவர்களுள் ஒருவரான சார்த்தர், 'அர்த்தமற்ற உலகில் ஓர் அந்நியனாக வந்து சேர்ந்தவன் மனிதன். தன்னை அந்நியனாக உணரும் மனிதனுக்கு இந்த உலகம் மனக்கசப்பு, சலிப்பு, ஓங்கரிப்பு, அபத்தத் தன்மைகளையே வழங்குகிறது' (இஸங்கள் ஆயிரம்) என்கிறார். வாழ்க்கையின்மீது பெரும் கசப்புடன் இருந்தவர்களுக்கு இருத்தலியம் பெரும் ஆறுதல் அளித்தது. மனிதப் பிறப்பில் உன்னத நோக்கங்கள் ஏதுமில்லை என்று இவர்கள் கூறினர். மனிதர்கள் கடவுளால் கைவிடப்பட்டவர்கள் என்ற கருத்தை பிரெட்ரிக் நீட்சேவிடம் இருந்து இருத்தலியம் கடன் வாங்கிக்கொண்டது. 'கடவுள் இறந்து விட்டார்' என்று அறிவித்த நீட்சேவை சார்த்தரின் ஆசிரியராகக் கருதுகின்றனர். ஜெர்மன் தத்துவஞானி மார்ட்டின் ஹைடெக்கர், சோரன் கீர்க்கேகார்ட் ஆகியோர் இருத்தலியவாதத்தின் முன்னோடிகளாவர். மனிதன் எவ்வித சாராம்சமும் இன்றிதான் பிறந்திருக்கிறான்; அவனுக்கான இருப்பை அவன்தான் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படை தத்துவத்தை இருத்தலியம் முன்வைத்தது. மனித இருப்பின்மீது நம்பிக்கையற்று இருந்தவர்களுக்கு இந்தக் கோட்பாட்டு நம்பிக்கையை அளித்தது. நவீனத்துவத்தின் கடைசி கோட்பாடாகக் கருதப்பட்ட இருத்தலியம், கைவிடப்பட்டவர்களின் இருப்பிடமாக இருந்தது. இருத்தலியம் நவீன இலக்கியங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. டி.எஸ். எலியட், ஏர்னெஸ்ட் ஹெமிங்வே, ஃபிரான்ஸ் காஃப்கா, ஆல்பெர் காம்யு உள்ளிட்ட படைப்பாளர்கள் இருத்தலியம் சார்ந்து எழுதினர். தமிழில் சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், ஜி.நாகராஜன், நாஞ்சில் நாடன் போன்றோரின் படைப்புகளிலும் இருத்தலியக் கோட்பாடு பின்னணியாகச் செயல்படுகிறது.

ஈழத்தைச் சார்ந்த எழுத்தாளர் தில்லை எழுதிய 'தாயைத்தின்னி' நாவலை இருத்தலியம் கோட்பாடு சார்ந்து வாசிக்கலாம். எண்பதுகளுக்குப் பிறகு ஈழத்தை நிலமாகக்கொண்டு எழுதப்படும் நாவல்களில், ஏதோவொரு வகையில் அந்நிலத்தில் நிகழ்ந்த உள்நாட்டுப்போர் ஊடாடிக்கொண்டே இருந்தது. 'போர் தின்ற நிலம்' என்ற படிமம் படைப்பின் எல்லா வகைமைகளிலும் வெளிப்பட்டது. ஈழத்தின் இத்தகைய படிமம் அந்நிலத்தின் ஒட்டுமொத்தப் படைப்பின் தன்மையையும் மாற்றியமைத்து விட்டன. ஆனால், 'தாயைத்தின்னி' நாவல் அனாதையாக்கப்பட்ட ஒரு பெண்ணின் வாழ்தலுக்கான போராட்டத்தை மையமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. 'விடுதலைக்காக ஏங்கும் ஒரு சமூகமும் தனக்குள்ளே இத்தனை அடக்குமுறைகளைக் கொண்டிருக்கிறது. என்னைப் போன்று எத்தனையோ சிறுமிகள், பெண்கள், எந்த ஆதரவுமற்ற மனிதர்கள் இந்தச் சமூகத்தோடு போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்' என்று தில்லை முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இன்னோர் இனத்துக்கு எதிராகப் போராடும் ஒரு சமூகத்திற்குள்ளேயே எவ்வளவு ஒடுக்குமுறைகள் உள்ளன என்ற கேள்வியைப் புனைவு வலிமையாக எழுப்பியிருக்கிறது. இந்தக் கேள்வி ஈழப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கத்தை நோக்கி எழுப்பப்பட்ட கேள்வியாகவே கருத வாய்ப்பிருக்கிறது.

'தாயைத்தின்னி' ஒரு தன்வரலாற்றுத் தன்மையில் எழுதப்பட்ட நாவல். அனாதையாக்கப்பட்ட தாயைத்தின்னி என்ற பெண்ணின் வலிதான் நாவல் முழுக்கச் சொல்லப்பட்டுள்ளது. 'தாயைத்தின்னி' ஒரு காரணப்பெயர். இவள் குழந்தையாக இருக்கும்போது அவள் அம்மா ஒரு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாள். அதனால் அவ்வூரார் அளித்த பெயர், 'தாயைத்தின்னி.' இந்தச் சிறுமியின் கதையாடலில் இருந்து, 'வாழ்க்கை ஏன் இவ்வளவு துயரம் நிரம்பியதாக இருக்கிறது?' என்ற இருத்தலியம் சார்ந்த கேள்வியைப் பிரதி கட்டமைக்கிறது. அல்லது பிரதியை வாசிக்கும் வாசகர் இக்கேள்வியை எழுப்பிக்கொள்கிறார். 'இந்த உலக இயக்கமே மனிதர்களுக்கு எதிராக உள்ளது' என்ற சிந்தனையை இருத்தலியவாதிகள் முன்வைத்தனர். வாழ்க்கை பொருளற்றது; அபத்தமானது; ஒவ்வொரு மனிதரும் அவர் உருவாக்கத்திற்கான காரணத்தை அவர்தான் கண்டடைய வேண்டும் என்பது போன்ற தத்துவச் சரடுகளை இருத்தலியம் முன்வைத்தது. 'தேர்வு செய்தல் என்பதே சுதந்திரம், பொருள்கள் பொருள்களாகவும் மனிதர்கள் மனிதர்களாகவும் உருவாகி எழுவதே சுதந்திரம்' (இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம்) என்றார் சார்த்தர். தாயைத்தின்னி தன் வாழ்க்கையில் சார்த்தரின்

சுதந்திரம் குறித்த இந்தக் கருத்தைத்தான் கண்டடைய முயல்கிறாள்.

தாயைத்தின்னி தன் பிறப்பையே கேள்விக்கு உட்படுத்துகிறாள். இந்தப் பிறப்பே அர்த்தமற்றது. இவ்வளவு துயரங்களுடன் இப்படியொரு பிறப்பு ஏன் அமைய வேண்டும்? இதற்கான காரணங்கள் என்ன? என்பது போன்ற தத்துவார்த்த கேள்விகள் அவளுக்குள் எழுகின்றன. இருத்தலியம், 'நம்மீது விதிக்கப்பட்டுள்ள வாழ்க்கையை நாம் வாழ்ந்தாக வேண்டும்' என்கிறது. தாயைத்தின்னியின் அம்மா தற்கொலை செய்துகொள்வதற்கும் இந்தச் மூகம் காரணமாக இருந்திருக்கிறது. தன் வாழ்க்கையைத் தானே தேர்ந்துகொண்டவளைச் சூழ்ச்சிசெய்து சாகடிக்கின்றனர். வாழ்தலுக்கான போராட்டத்தில் தாயைத்தின்னியின் அம்மா தோற்றுப்போகிறாள். ஆனால், தாயைத்தின்னி போராடிக்கொண்டே இருக்கிறாள். தன் வாழ்க்கைக்கான அர்த்தத்தை உருவாக்க நினைக்கிறாள். தன் சித்திக் கொடுமையைவிட வதை முகாம்கள் மேலானதாக இருக்கும் என்பது அவள் கருத்து. அம்மாவின் சொந்தத் தங்கையான பாதகத்தி (சித்தியின் காரணப்பெயர்) தாயைத்தின்னியின்மீது ஏன் இவ்வளவு வன்மத்துடன் நடந்துகொள்கிறாள் என்ற கேள்வி பிரதியை வாசிப்பவர்களுக்கு எழும். இக்கேள்வி முட்டாள்தனமானது. மனிதர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சிறிய அதிகாரத்தையும் எளிமையானவர்கள்மீது செலுத்தத் தவற மாட்டார்கள் என்பதுதான் பிரதி உருவாக்கும் பதில். பிறகு இவர்கள் எப்படி இன்னோர் இனத்தின் அதிகாரத்திற்கு எதிராகப் போராடத் தகுதியுடையவர்களாகத் தங்களை நியாயப்படுத்திக்கொள்கிறார்கள். இந்த முரணையும் நாவல் விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறது.

தாயைத்தின்னி தன்னுடைய கதையை எழுதி, ஒரு டிரங்குப் பெட்டியில் வைத்திருக்கிறாள். இதனை தில்லை படித்துப் பார்க்கிறார். இந்தப் பிரதியைத்தான் வாசகர்கள் வாசிக்கிறார்கள். ஒரு பெண்ணின் உண்மைக்கதை என்ற பாணியில் இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. 'இருத்தலியம் என்பது மானிடப் பிரச்சினை பற்றிய தத்துவம்' (எக்சிஸ்டென்ஷியலிசம்) என்கிறார் எஸ்.வி.ராஜதுரை. மானிடர் என்ற பொதுத்தன்மையிலிருந்து இந்தப் பிரதி தன்னை விலக்கிக்கொள்கிறது. பெண் என்ற சிறப்புத்தன்மையிலிருந்து மானிடப் பிரச்சினையை அணுகக் கோருகிறது. ஏனெனில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இங்கு ஒரேமாதிரியான வாழ்க்கைச் சூழல் இல்லை. தன் உடலே அவளுக்குப் பலவீனமானதாக இருக்கிறது. பெண் என்றவுடன் அவளது முலைகளும் யோனியும்தான் ஆண்களின் நினைவுக்கு வருகின்றன. அதனைக் கைப்பற்றித் தம் அதிகாரத்தை நிறுவிக்கொள்வதற்கான சடங்குகளாகக் காதலும் திருமணமும் அவர்களுக்குப் பயன்படுகின்றன. எனவே, இருத்தலியம் பொதுவான மானிடப் பிரச்சினைகளைப் பற்றித்தான் பேசுகிறது. பெண்களின் இருப்பு என்பது ஆண்களின் இருப்பிலிருந்து இன்னும் மோசமானதாக இருக்கிறது. தன் இருப்புக்கான அர்த்தத்தை உருவாக்கிக்கொள்ள சக மனிதர்களிடமே கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. இதனையும் நாவல் கவனப்படுத்துகிறது.

ஓர் இனம் மற்றோர் இனத்தின் மீதான பகையைத் தீர்த்துக்கொள்ள அந்த இனத்தின் பெண்களையே தேர்ந்தெடுக்கிறது. அதுதான் அவர்களுக்கு எளிமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. பகை நாட்டின்மீது போர் தொடுத்த மன்னர்கள், முதலில் பசுக்களைக் கவர்ந்து வந்தனர்; வெற்றியின் முடிவில் அந்நாட்டிலுள்ள பெண்களைக் கவர்ந்துவந்து தம் அந்தப்புரங்களில் அடைத்தனர். பகை அரசனின் மீதான வன்மத்தைத் தீர்த்துக்கொள்ள பெண்களைக் கவர்ந்து வருதல் போரின் தன்மைகளுள் ஒன்றாகவே மாறிப்போனது. பகை அரசிடமிருந்து கவர்ந்துவரப்பட்ட பெண்களை கொண்டிமகளிர் என்று அழைத்தனர். 'கொண்டி மகளி ருண்டுறை மூழ்கி' (பட்டினப்பாலை) என்ற அடிக்கு, 'தோற்றார்பால் பிடித்துவந்த மகளிர்' என்று உரையாசிரியர்கள் விளக்கம் கூறுகின்றனர். இப்பெண்களுள் அழகானவர்கள் அந்தப்புரத்தை அலங்கரித்தனர். பிறர் உதிரிகளாக்கப்பட்டு, பரத்தையராகவும் தேவதாசியராகவும் மாறினர். அரசனின் புகழ்பாடும் மெய்கீர்த்திகளிலும் இவர்களைப் பற்றிய பதிவுகள் உள்ளன. அண்மைக் காலம்வரை ஈழத்தில் இந்தப் பிரச்சினை தொடர்வதை இந்நாவல் கவனப்படுத்துகிறது.

தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே ஒருவகை வெறுப்பும் நம்பிக்கையின்மையும் வெளிப்பட்டதைத் தாயைத்தின்னி ஒரு கள ஆய்வில் அறிகிறாள். இரு மதத்தினரும் பேசக்கூடிய தமிழ்மொழி அவர்களை ஒன்றிணைக்கவில்லை. மதம் மொழியைக் கடந்து வினையாற்றுவதைக் கேத்தி என்ற பெண்ணின் வாக்குமூலத்தின் அடிப்படையில் தெரிந்து கொள்கிறாள். கேத்தியைக் காதலித்து ஏமாற்றிய முஸ்லீம் இளைஞன் ஒருவன், 'நீங்கள் ஆயுதங்களை வைத்துக்கொண்டு எங்களைத் தாக்குகிறீர்கள். நாங்கள் இப்படித்தான் பதிலுக்குத் தாக்க வேண்டும். எங்களிடம் வேறு வழிமுறைகளில்லை' என்கிறான். தாயைத்தின்னியும் இரண்டு ஆண்களால்

பாலியல் மீறல்களை எதிர்கொள்கிறாள். ஒருவர் தந்தையைப் போன்று பழகிய ஆதம் காக்கா; இன்னொருவர் கவிஞர் திண்டான் பாஞ்சான். அனாதையான தாயைத்தின்னிக்கு அன்பு காட்டி தன் பாலியல் வேட்கையைத் தீர்த்துக்கொள்ள நினைத்த ஆதம் காக்காவும், திரைப்பட வாய்ப்பை வழங்கி வன்புணர்ந்த திண்டான் பாஞ்சானும் வெவ்வேறானவர்கள் இல்லை என்பதைப் பிரதி நினைவூட்டுகிறது. 'அன்பும் இரக்கமும் மத நம்பிக்கைகளும் நிறைந்திருக்கும் மனமாக இருந்தபோதும் அதற்குள்ளும் ஒரு வக்கிரம் இருக்கத்தான் செய்கிறது' என்பதைத் தாயைத்தின்னி புரிந்துகொள்கிறாள்.

திண்டான் பாஞ்சான் தாயைத்தின்னிமீது நிகழ்த்திய பாலியல் மீறலுக்கு, அவள் பெண் என்பது மட்டுமே காரணம் இல்லை. அதாவது, 'திண்டான் பாஞ்சானின் ஊரில் விடுதலைப் புலிகளால் நிகழ்ந்தேறிய கொலைகளுக்குப் பழிவாங்கும் ஒரு செயலாகவே அவன் என்னைப் பழிதீர்த்துக் கொண்டான்' என்று தாயைத்தின்னி எண்ணுகிறாள். கேத்திக்கு நடந்ததுதான் தனக்கும் நடந்திருக்கிறது என்பதை அவள் புரிந்து கொள்கிறாள். சிறியதொரு சிவன் பளிங்குசிலையைக் கொடுத்துத் தன் அம்மாவை ஏமாற்றிய ஆணின் முகமும் அவள் மனதில் வந்துபோகிறது. அன்பு என்பது வன்முறையை நிகழ்த்துவதற்குப் பாவிக்கப்படும் ஒரு கருவியாக இருக்கிறது என்பதைத் தனக்கு நடந்த கசப்பான நிகழ்வுகளினூடாக விளங்கிக் கொள்கிறாள். 'வாழ்க்கை என்பது பரவசங்களாலும் இன்பங்களாலும் ஆனதல்ல. அவை பிரச்சினைகளாலும் துயரங்களாலும் மட்டுமே உருவானது' என்ற இருத்தலியச் சிந்தனையைத் தாயைத்தின்னி வெளிப்படுத்துகிறாள். "வறுமையும் நெருக்கடியும் போர்களும் அழிவும் பெருநாசமும் ஒரு சமுதாயத்தில் ஊடுருவும்போது, மனிதன் இயற்கையிடமிருந்தும் தன் உழைப்பிலிருந்தும் தன்னிடமிருந்தும் தன் இனத்திடமிருந்தும் அயலானாகிவிட்டபோது, உலகம் முழுவதும் அவனுக்கு எதிரானதாக, வாழ்க்கை பொருளிழந்து போனதாகத் தோன்றுவதில் வியப்பில்லை. இந்தச் சமுதாயத்தில் அவன் எதிர்கொள்கிற ஒவ்வொரு சூழ்நிலையும் அபத்தம் நிறைந்ததாகவே இருக்கிறது. பொருளியல் காரணங்களால் வெறுக்கத்தக்கதாக மாறிவிட்ட சமுதாயச் சூழ்நிலையுடன் மரபுவழிப்பட்ட சமய நம்பிக்கைகளின் சீர்குலைவும் சேர்ந்துகொள்ளும்போது மனித வாழ்க்கையின் இலக்குக்கான விளக்கங்கள் திடீரென மறைந்துவிடுகின்றன. மரபு வழிப்பட்ட கடவுள் நம்பிக்கைக்கு மாற்றாக ஒரு புதிய நம்பிக்கை உருவாக்கப்படாமல் இருக்குமானால் ஆல்பெர்ட் காம்யு (Albert Camus) முடிவுக்கு வந்ததுபோல் தற்கொலைதான் ஒரே தீர்வாக இருக்க முடியும்" (எக்சிஸ்டென்ஷியலிசம், பக்.12) என்று எஸ்.வி.ராஜதுரை குறிப்பிட்டிருக்கிறார். தாயைத்தின்னி தற்கொலை முடிவையும் எடுக்கிறாள்.

இருத்தலியம் மனித வாழ்க்கையின் மோசமான நிலைமையை ஆராய்ந்தது; அதற்கான தீர்வுகளையும் தேட முயன்றது. மனிதனின் மோசமான செயல்பாடுகளுக்குப் பின்னால் அச்சம் ஒரு காரணமாக இருந்ததை இருத்தலியவாதிகள் கண்டனர். அச்சத்திலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கே அதிகாரத்தைக் கையில் எடுத்தனர். தாயைத்தின்னியின் சித்தி, பள்ளி ஆசிரியை, விடுதிக் காப்பாளர் என ஒவ்வொருவருமே தங்களது இருப்பை நிலைப்படுத்திக் கொள்வதிலுள்ள அச்சத்தின் காரணமாகவே தாயைத்தின்னியின்மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினர். 'தனி மனிதனின் சுதந்திரம் சமுதாய உறவுகளில் இருந்து துண்டித்துக் கொள்வது என்கிறார்' சார்த்தர். அதேநேரத்தில், ஒருவர் மற்றொருவரின் சுதந்திரத்தை மதிக்கும் உறவில்தான் விடுதலை இருக்கிறது என்பதையும் நினைவூட்டுகிறார். இந்தச் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்கான போராட்டத்தைத்தான் தாயைத்தின்னி தொடர்ச்சியாக எதிர்கொள்கிறாள். தாயைத்தின்னியின் டிரங்குப் பெட்டியில் நிறைய கதைகள் உள்ளன. அதில் ஒரு கதையைத்தான் தில்லை நமக்கு வாசிக்கக் கொடுத்தார். எதிர்காலத்தில் தன்னைப் பழிவாங்கிய இந்தச் சமூகத்தைப் பழிதீர்த்துக்கொள்ள தாயைத்தின்னி மீதிக் கதைகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது.

## பயன்பட்ட நூல்கள்


1) அனைத்துக் கோட்பாடுகளும் அனுமானங்களே, எம்.ஜி.சுரேஷ், அடையாளம், புத்தாநத்தம், முதல் பதிப்பு, 2022.
2) இலக்கியத் திறனாய்வுக் களஞ்சியம், எம்.வேதசகாயகுமார், அடையாளம், புத்தாநத்தம், முதல் பதிப்பு, 2021.
3) இஸங்கள் ஆயிரம், எம்.ஜி.சுரேஷ், மருதா, சென்னை, முதல் பதிப்பு, 2005.
4) எக்சிஸ்டென்ஷியலிசம், எஸ்.வி.ராஜதுரை, க்ரியா, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1983.
5) தாயைத்தின்னி, தில்லை, பாரதி புத்தகாலயம், சென்னை, முதல் பதிப்பு, 2024.



**கட்டுரையாளர்: தமிழ் உதவிப் பேராசிரியர், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி. சென்னை.**



முனைவர் சி. இளங்கோ

# மார்க்சிய ஆய்வுலகில் நா.வானமாமலை

முனைவர். கோ. ஜெயக்குமார் அவர்கள் களஆய்வின் வழி தகவல்களைத் திரட்டி எழுதும் ஆய்வாளர். எந்த தரவுகளையும் அப்படியே பதிவு செய்யாமல் அதனை பலரிடம் கேட்டறிந்து தெளிவுபெற்று, அதன் உட்பொருளை உறுதிப்படுத்தியப் பின்னரே ஆய்வுக் கட்டுரையாக பதிவு செய்யும் வழக்கத்தைக் கொண்டவர். அனைவருக்கும் புரியும்படி எளிமையாக எடுத்துரைக்கும் திறன் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் முனைவர்பட்டம் பெற்ற இவர் தமிழ் ஆய்வுப் புலத்தில் கவனம் பெற்ற ஆய்வாளராவார். அச்சு காட்சி ஊடகங்களில் பணியாற்றி அனுபவம் பெற்ற இவர், வெளியிடும் செய்திகளின் உண்மைத் தன்மையைக் கண்டறிவதுபோல்; எடுத்துக் கொண்ட ஆய்விலும் உண்மையைத் தேடித் தேடி பயணிப்பவர். இதுவே இவரது ஆய்வின் பலம். இவர், நா. வா.வின் கதைப்பாடல்களைத் தொகுத்து முழுமையான பதிப்பாக வெளிக்கொணர்ந்துள்ளார். கருத்தரங்கங்கள், ஆய்வரங்கங்கள் முதலான இடங்களில் சமூகவில் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். பேராசிரியர் நா. வானமாமலையின் வழியில் ஆய்வுக் களங்களைத் தேர்வு செய்து மார்க்சிய அணுகு முறையில் தனது கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகிறார்.

நா. வானமாமலையின் ஆராய்ச்சிப் பணிகள் என்ற தலைப்பில் முனைவர் கோ. ஜெயக்குமார் உருவாக்கிய இந்நூலை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தினர் சிறப்பாக வெளியிட்டுள்ளனர். இந்நூலுக்கு மறைந்த தோழர். தா. பாண்டியன் வாழ்த்துரை வழங்கியுள்ளார் என்பதன் மூலம் இந்நூலின் தேவையை அறியலாம்.

-----




நா.வானமாமலையின் ஆராய்ச்சிப் பணிகள் | கோ.ஜெயக்குமார்
வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ.400/-

தமிழ் ஆய்வு வரலாற்றில் மரபுவழிப்பட்ட ஆய்வு முறையும் இயக்கவியல் பார்வையிலான ஆய்வு முறையும் தொடரவே செய்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக நாடுகளிடையே விவாதிக்கப்பட்ட பொருள் முதல்வாத அடிப்படையிலான கருத்தாடல்கள் தமிழ் ஆய்வுலகிற்கு மெதுவாகவே அறிமுகமாயின.

காலனி ஆட்சிக்கு எதிராக தமிழக மக்கள் பெற்ற அரசியல் புரிதல் உணர்வும் காலனிய கல்வியின் வழி உருவான அறிவுப் பண்பும் தமிழ் மொழி குறித்தும் தமிழ்க் கல்வி குறித்தும் சிந்திக்கின்ற ஆய்வாளர்களை உருவாக்கியது. பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் வெடித்த ரஷ்யப் புரட்சியானது உலக நாடுகளிடையே பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. சுரண்டலுக்கு எதிரான மாற்று சமூக அமைப்பு குறித்தும் அதனை கட்டமைக்க உதவும் மார்க்சியத்தின் தேவை குறித்தும் சிந்திக்க வைத்தது. அதன் தொடர்ச்சியாக உருவான இயக்கங்கள் மற்றும் அதன் கலை வடிவங்களும் அவற்றையே பேசு பொருளாகக் கொண்டிருந்தன.

தமிழகத்தில் 1920 களுக்குப் பின் உருவான சீர்திருத்த அரசியல் பண்பாட்டுச் சிந்தனைகள் மற்றும் சுரண்டலுக்கு எதிரான கருத்தியல்கள் மார்க்சியத்தின் தேவையை உணர வைத்தது. தமிழகத் தோழர்களான சிங்காரவேலர், ஜீவானந்தம், பாலதண்டாயுதம், பி. ராமமூர்த்தி, சிந்தன் முதலான பொதுவுடைமை இயக்கத் தலைவர்களின் செயல்பாடுகள் தமிழக அரசியலின் கருத்தியல் களத்தில் மாற்றத்தை ஏற்படுத்தின. இதன் தொடர்ச்சியாக தமிழில் வர்க்கப் போராட்ட இலக்கியங்களைப் படைப்பது மாற்று அரசியல் பேசும் பிரதிகளையும் ஆய்வுகளையும் உருவாக்குவது எனப் புதிய அறிவுப் புலச் செயல்பாட்டாளர்கள் தோற்றம் பெற்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திராவிட இயக்கம் மற்றும் பொதுவுடைமை இயக்கத்தினரின் கருத்தியல் களங்கள் ஓர் இழையாகவே ஒரு வழிப் பயணத்தைத் தொடங்கினாலும் பின்னாட்களில் பொதுவுடைமை இயக்கத் தோழர்கள் தங்களுக்கான புதிய ஆய்வு உலகத்தினைக் கட்டமைத்தனர். பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் ஒவ்வொன்றையும் கேள்விக்கு உட்படுத்துவது, ஒரு பிரதி பேசும் வர்க்க அரசியலைக் கண்டறிவது எனப் புதிய ஆய்வு அணுகுமுறைகள் வளர்ந்தன. இத்தன்மைகளின் வழி உருவான ஆய்வாளர் தான் பேராசிரியர். நா. வானமாமலை. தொடர்ச்சியாக அவரின் ஆய்வுச் செயல்பாடானது மார்க்சிய ஆய்வு உலகிற்கு அளவிட முடியாத பங்களிப்பினைச் செய்தது.

பேரா. நா. வானமாமலை பயணப்பட்ட ஆய்வுக் களங்களை அறிவதும் அவரின் செயல்பாடுகளைத் தொகுப்பாகப் புரிந்து கொள்வதும் இன்றைய ஆய்வுலகத் தேவையாகும். இதனை நிறைவேற்றும் விதமாகமே இந்நூலை முனைவர் கோ. ஜெயக்குமார் உருவாக்கியுள்ளார். எடுத்துக் கொண்ட தலைப்பிற்கு ஏற்ப அவரின் பரந்துப்பட்டத் தேடலும், அதனைப் பதிவு செய்த முறைமையும் பாராட்டத் தக்கதாகும். நா. வா. எவ்வாறு இடதுசாரி அரசியலுக்குள் பயணப்பட்டார் என்பதையும், தொடர்ச்சியாக அவரது ஆய்வுப் பொருண்மைகள் குறித்தும் நூலாசிரியர் விளக்குகின்றார்.

**இடதுசாரி அரசியல் பாதை**

1917 ஆம் ஆண்டு பிறந்த நா. வானமாமலை வைதிக மையப்பட்ட குடும்பச் சூழலை மீறி வளர்ந்த ஒரு தோழராவார். திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியினை வாழிடமாகக் கொண்டு வளர்ந்த அவர் கல்லூரிக் காலத்தில் டால்ஸ்டாய், வால்ட்விட்மன், கீட்ஸ், பாரதி முதலானோர் பிரதிகளை வாசிக்கத் தொடங்கினார். இதன் தொடர்ச்சியாக 1935 இல் இடதுசாரி இயக்கத் தலைவர்களான ப. ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, பி. சீனிவாசராவ் ஆகியோரின் உரைகளைக் கேட்டு அதன் வழி பெற்ற புரிதல் அவரை மார்ச்சிய இயக்கத்தின்பால் நகர்த்தியது.

1937 ஆம் ஆண்டு நெல்லையில் தொடங்கப்பட்ட சோஷலிஸ்ட் இளைஞர் சங்கத்தின் செயல்பாட்டால் ஈர்க்கப்பட்டார் நா. வா. தொழிலாளி வர்க்கம் சந்திக்கும் நெருக்கடிகளையும், சாதி மற்றும் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பதையும் மார்க்சியத்தின்வழி புரிந்து கொண்டார். இதன் தொடர்ச்சியாக தோழர் டி. இராமன் கொடுத்த இடதுசாரி அரசியல் நூல்கள் நா. வானமாமலையை தீவிர இடதுசாரி தோழராக்கியது. மார்க்சியத்தின்வழி வர்க்க அரசியலை ஆழமாகப் புரிந்து கொண்ட அவர் தமிழ்ச் சமூகத்தின் வர்க்கக் கட்டமைப்பினை ஆராயத் தொடங்கினார். அவரது எழுத்துகளும் அதனையே பேசின. பல ஊர்களில் மார்க்சிய வகுப்புகளில் கலந்து கொண்ட நா. வா. மார்க்சிய தத்துவத்துடன் தமிழ் இலக்கியப் பரப்பினையும் ஆய்வுப் பொருளாக்கினார். நெல்லை சிந்துப்பூந்துறை அண்ணாச்சி சண்முகம் பிள்ளையின் தொடர்பு நா. வானமாமலையினை அரசியல், பொருளாதாரம், சமூகவியல் முதலானத் தளங்களை மார்ச்சிய அடிப்படையில் ஆழமாகப் புரிந்து கொள்ள உதவியது.

### மார்க்சிய ஆய்வுகள்

நா. வானமாமலை மார்க்சிய வழிப்பட்ட ஆய்வாளராக எவ்வாறு உருப்பெற்றார் என்பதை இந்நூலின் ஆரம்பப்பகுதி பதிவு செய்கிறது. மேலும் அவரது எழுத்துகளை அதன் தன்மைகளுக்கு ஏற்ப மூன்று வகைமைகளில் பிரிக்கின்றது. முறையே அவை,

1. மார்க்சியக் கொள்கையும் பண்பாட்டாய்வும்
2. செவ்விலக்கிய ஆய்வுகள்
3. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்

மார்க்சிய நோக்கிலான ஆய்வு முறையில் நா. வானமாமலையின் எழுத்துகள் நூலாகவும் தனிக் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ள நிலையில், கிடைக்காத பல கட்டுரைகளைத் தேடிப் பிடித்து தொகுத்து அதனையும் ஆய்வுக்குட்படுத்துகிறது இந்நூல்.

மார்க்சியக் கொள்கைகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் முறையில் நா. வா. எழுதிய பின்வரும் நூல்கள் இன்றுவரை மார்க்சிய வகுப்புகள் எடுப்பவர்களுக்கு உதவியாக உள்ளன.

- o மார்க்சிய சமூகவியல் கொள்கை
- o மார்க்சிய அழகியல்
- o மார்க்சிய அறிவுத் தோற்றவியல்
- o இந்திய நாத்திகமும் மார்க்சியத் தத்துவமும்
- o இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டக் கட்சியின் வரலாறு

நா.வா.வின் மார்க்சிய உரைகள் பற்றி அறிய முடியாத நிலையில் அவை குறித்தான எதிர்காலத் தேடல் மேலும் அவரது செயல்பாட்டினை அறிய உதவும்.

### சாதி, சமய ஆய்வுகள்

இந்தியத் தத்துவ மரபு குறித்து தேவிபிரசாத் சட்டோபாத்தியாய ஆய்வுகள் அறிவுலகில் தாக்கத்தினை ஏற்படுத்திய நிலையில், நா. வா. முன்னெடுத்த இந்திய தத்துவங்கள் குறித்த ஆய்வுகளும் அதனை மேலும் விளக்கப்படுத்துவதாக இருந்தது. வேதத் தத்துவங்களையும் அதற்கு எதிரான வேத மறுப்பு பௌத்த மரபுகளைப் பற்றி நா. வா. எழுதிய நூலும் இன்றுவரை விவாதிக்கும் ஆய்வுப் பொருளாகவே உள்ளது.

- மணிமேகலையில் பௌத்தம்
- பழந்தமிழ் இலக்கியத்தில் பொருள்முதல்வாதக் கருத்துகள்
- பரபக்க லோகாயதம்

முதலான அவர் எழுதியக் கட்டுரைகள் தமிழரின் சமயக் கோட்பாடுகளை விளக்குவதாகும். சாதியம் மற்றும் தமிழக வர்க்கப் போக்குகளின் வரலாற்றை தத்துவ மரபுகளில் இருந்தும் பண்பாட்டு நடைமுறைகளில் இருந்து சுட்டிக் காட்டி நூல்களையும் கட்டுரைகளையும் நா. வா. தொடர்ச்சியாக எழுதியுள்ளார். தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டக் கருத்துக்கள், தமிழ் மன்னரும் சாதிப் பிரிவினைகளும், சோழர் ஆட்சியில் நிலவுடைமை வளர்ச்சியும் உழவர் போராட்டங்களும், கோயில் நிலவுடைமை முதலான கட்டுரைகளை அதற்கான சான்றுகளாகப் பார்க்கலாம்.

வலங்கை, இடங்கைப் பிரிவுகளில் உள்ள தொழிலாளர்களை வேறுபடுத்திக் காட்டி அவர்கள் எவ்வாறு சாதிகளாகவும் வர்க்கங்களாகவும் பிரிந்துள்ளனர் என்பதையும், ஒவ்வொரு தொழில் பிரிவினரை அழைக்கும் பெயர்கள் பின்நாட்களில் சாதிப் பெயர்களாக மாற்றம் பெறுவதையும் ஆய்வு ரீதியாக நா. வா. விளக்கிச் சொல்வதை இந்த நூல் பதிவு செய்கின்றது.

தமிழர் பண்பாடும் தத்துவமும் என்ற நூல் முருக வணக்கத்தின் வரலாற்றை விரிவாகப் பதிவு செய்கின்றது. இந்நூல் குறித்து ஆய்வாளர் மயிலை சீனி. வேங்கடசாமி மதிப்பிடுகையில் 'ஆராய்ச்சி உலகில் இந்நூல் மிகப்பெரிய வரவேற்பையும் பயன்பாட்டையும் தரும்' என்கிறார்.

படைப்புக் கதைகள், தாய்த்தெய்வ வணக்கம் மற்றும் நடுகல் வழிபாட்டு மரபு குறித்து விரிவான கட்டுரைகளை எழுதிய நா.வா. அவை கால வளர்ச்சியில் எவ்வாறு மாற்றம் பெற்று வந்துள்ளன என்பதை இயக்கவியல் பார்வையில் விளக்கிச் செல்கிறார்.

ஆராய்ச்சி இதழ் மற்றும் பிற இதழ்களில் நா. வா. எழுதிய பல கட்டுரைகளையும் இந்நூல் ஆசிரியர் தேடி எடுத்து ஆய்வுக்கு உட்படுத்தியிருப்பது இந்நூலின் பலமாகும்.

தமிழர் பண்பாட்டு வரலாற்று எழுதும் ஆய்வாளர்களுக்கு நா. வா.வின் படைப்புகள் விரிவான தரவுகளை அளிக்கின்றன.

### இலக்கிய ஆய்வுகள்

தமிழ் இலக்கியங்களை நா.வா. எவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார் என்பதனை பின்வருமாறு புரிந்து கொள்ளலாம்:

- புதுக்கவிதையில் உள்ள முற்போக்கு கருத்துகளையும் பிற்போக்கு கருத்துகளையும் கவிதையியல் ஆய்வில் விவரிக்கின்றார்.
- இலக்கியம் என்றால் என்ன? இலக்கிய ஆராய்ச்சி என்றால் என்ன? என்பது குறித்து பதிவு செய்கின்றார்.

- தமிழ் உரைநடையின் வரலாற்றை கால முறைப்படி விவரித்து அதன் வளர்ச்சிப் போக்கினை எடுத்துரைக்கின்றார்.
- இலக்கியத்தின் உள்ளடக்கம் குறித்தும் அதன் உருவம் குறித்தும் தமிழில் முதன்மையான ஆய்வை இவர் மேற்கொண்டார்.

தமிழ் இலக்கியங்களைக் கோட்பாட்டு ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்தி அதன் உட்பொருளை நா. வா. திறம்பட விளக்குகிறார்.

வள்ளலார், பாரதி, பாரதிதாசன் முதலானோர் படைப்புகளை ஆய்வுக்கு உட்படுத்தி விவாதிக்கும் நா. வா. பிற ஆய்வாளர்களின் நூல்களுக்கு முன்னுரைகளையும் எழுதியுள்ளார். அதனையும் மார்க்சிய அணுகுமுறையிலேயே விவாதிக்கின்றார்.

## அறிவியல் தமிழ்

நா. வா. மாணவர்களுக்கு அறிவியல் கருத்துகளை எளிய மொழிநடையில் கதை சொல்வது போன்று சில நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இதில் எளிதாகப் புரிவதற்காகப் படங்களையும் சேர்த்துள்ளார். நா. வா. எழுதிய அறிவியல் நூல்களாவன,

1. இரும்பின் கதை. 2. விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சி, 3. ரப்பரின் கதை, 4. காகிதத்தின் கதை முதலானவைகளும். 1. நிலக்கரி, 2. பெட்ரோலியம், 3. காலமும் தூரமும், 4. சூரியன் பேசுகிறது, 5. தமிழும் விஞ்ஞானமும் முதலானக் கட்டுரைகள் குறிப்பிடத் தக்கவையாகும். இவையெல்லாம் அறிவியல் தமிழுக்கு நா. வா.வின் பங்களிப்பாகும். மார்க்சிய ஆசான் மா. சிங்காரவேலரின் அறிவியல் நூல்களை அடியொற்றி நா. வா.வும் அறிவியல் தமிழ் நூல்களைப் படைத்துள்ளார் என ஒப்புமைப்படுத்தலாம்.

## நாட்டார் இலக்கியப் பதிப்புகள்

நா. வா. நாட்டார் இலக்கியத்திற்கு ஆற்றியப் பங்களிப்பு பன்முகத் தன்மையுடையது. அவரின் செயல்பாட்டினை பின்வரும்படி புரிந்து கொள்ளலாம்:

- வாய்மொழி மரபில் உள்ள நாட்டார் பாடல்களை களஆய்வின் வழி திரட்டித் தொகுத்து பதிப்பித்தல்
- கதைப்பாடல்களைத் திரட்டி அதற்கு ஓர் ஆய்வுரை எழுதி தொகுப்புகளாக வெளியிடுதல்.
- நாட்டார் இலக்கியங்கள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதி அவற்றை அறிமுகப்படுத்துதல்.
- நாட்டார் கதைகளைப் பிற கதைகளுடன் ஒப்பிட்டு ஆராய்தல்.

இன்று நாட்டார் இலக்கியம் என்பது ஒரு தனித்துறையாக வளர்ந்துள்ள நிலையில் அதற்கான கருவி நூல்களாக நா. வாவின் தொகுப்புகளே முதன்மையாக உள்ளன.

பள்ளுப் பாட்டு, சின்னத்தம்பி வில்லுப்பாட்டு, சமூகக் கதைப்பாடல்கள், நாட்டுக் கதைகள், அம்மானைப் பாத்திரங்களின் சமூகத் தன்மை, இராமாயணத்தோடு தொடர்புடைய இடங்கள் பற்றிய புனை கதைகள், வில்லுப்பாட்டுக் கதையும் கதை மாந்தரும் முதலான கட்டுரைகள் ஆய்வுலகில் குறிப்பிடத்தக்கவை. நா. வா.வின் நூல்களைப் போலவே அவரது சில பக்க கட்டுரைகள் மிக ஆழமானவையாகும்.

## நா.வா.வின் இன்றையத் தேவை

ஆராய்ச்சி என்ற ஆய்விதழை நடத்தி வந்த நா. வா. அதன்வழி பல ஆய்வாளர்களை உருவாக்கியுள்ள வரலாற்றை ஒரு தனி ஆய்வாகவே நிகழ்த்தலாம். இதுபோன்றே அவரது அரசியல் இயக்கச் செயல்பாடுகளையும் அவரின் இதழியல் துறைச் செயல்பாட்டினையும் ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

நா. வா. வின் படைப்புகள் மார்க்சிய அடிப்படையில் அமைந்திருந்தாலும் அவரது எழுத்துகள் ஆய்வு நூல்களாக, இதழ்களில் எழுதியக் கட்டுரைகளாக, பதிப்பித்த நூல்களாக, ஆய்வு நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளாகக் கிடைக்கின்றன.

நா. வா. வின் எழுத்துகள் அனைத்தையும் தொகுப்பாக அறிமுகம் செய்யும் விதமாக இவ்வாய்வு நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நூலின் இறுதிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ள நா. வா. மறைவுக்குப்பின் அவர் குறித்த மதிப்பீடுகளைப் படிக்கும் பொழுது அவரின் வாழ்க்கை வரலாற்றினையும் இந்நூல் ஒரு புள்ளியில் பேசுவது போல் உள்ளது. இந்நூலினை உருவாக்க ஆய்வாளர் திரட்டிய தகவல்கள், புகைப்படங்கள் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

மயிலை சீனி. வேங்கடசாமி, இராசமாணிக்கனார், வையாபுரிப்பிள்ளை, நீலகண்ட சாஸ்திரி, கல்கி முதலானோர் தமிழக வரலாற்றையும் பண்பாட்டையும் பார்த்த பார்வைகளில் இருந்து நா. வா. எவ்வாறு வேறுபட்டுள்ளார் என்பதை இந்நூல் மூலம் அறியலாம்.

இந்த நூலை ஏன் வாசிக்க வேண்டும்? என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. இந்நூலை ஆய்வாளர் ஏன் உருவாக்கினார்? என்பதில் இருந்தே அதற்கான விடையும் கிடைக்கின்றது.

தமிழ் ஆய்வுலகில் பல ஆய்வாளர்கள் தோன்றினாலும் சமூகத்திற்குப் பயன்படும் ஆய்வுகளே காலம் கடந்தும் ஆய்வாளர்களை

வாழவைக்கின்றன. அதுபோன்ற ஆய்வாளர்தான் நா. வா. இவர் எதனையும் மார்க்சிய கண்கொண்டு ஆய்ந்து, காரணகாரிய அடிப்படையில் விளக்கிக் கூறுபவர். அவரது எழுத்துகள் சமூக வரலாற்றுப் போக்கின் உண்மையைப் பேசுவதாகும்.

நா. வானமாமலையின் நூல்கள் மற்றும் கட்டுரைகளைத் தேடிப் பிடித்து வாசிப்பது சற்று கடினமானப் பணிதான். இந்நூல் அதனை நிவர்த்தி செய்கிறது. நா. வா. எழுதிய நூல்கள் மற்றும் கட்டுரைகளைப் பற்றி சிறிய அறிமுகத்தினை இந்நூல் அளிக்கின்றது. மேலும், எந்தெந்தத் தலைப்புகளில் நா. வா நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார் என்பதை ஆண்டு வாரியாக வரிசைப்படுத்தி பதிவு செய்கின்றது. இதற்கு நூலாசிரியர் மேற்கொண்ட உழைப்பு கடுமையானதாகும். அவர் இதனைத் திரட்ட பயன்படுத்திய நூலகங்கள் இன்று புழக்கத்தில் இல்லை. பாரிமுனையில் இருந்த பழைய மறைமலையடிகள் நூலகம், தி.நகரில் இருந்த காரல்மார்க்ஸ் கண்ணன் நடத்தி வந்த மார்க்ஸ் நூலகம் ஆகியவற்றிலிருந்தே நூலாசிரியர் பல தரவுகளைத் திரட்டி இந்நூலில் ஆவணப்படுத்தியுள்ளார்.

இந்நூலினை உருவாக்க நா.வா. வுடன் தொடர்புடைய பல தோழர்களையும் ஆய்வாளர் களையும் அணுகி தகவல்களைச் சேகரித்து எழுதியுள்ளார். குறிப்பாக மார்க்சிய இயக்கத்தின் தலைமைத் தோழர்களாக விளங்கிய ஆர். நல்லகண்ணு, தா. பாண்டியன், முத்தரசன், சி.மகேந்திரன், ஆகியோரிடம் நூலாசிரியர் விரிவான நேர்காணலை நிகழ்த்தியுள்ளார். அது மட்டுமல்லாமல் காரல் மார்க்ஸ் கண்ணன் தோழர், ஆய்வாளர்கள் எஸ். தோத்தாத்திரி, ஆ.சிவசுப்பிரமணியன், மே.து. ராசுக்குமார். ந. முத்துமோகன், தி.சு. நடராசன், நா. இராமச்சந்திரன் ஆகியோரின் வழிகாட்டுதலைப் பெற்றது மட்டுமல்லாமல் அவர்களிடம் நிகழ்த்திய உரையாடல் வழி அறிந்த தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டே இந்நூலை எழுதியுள்ளார்.

ஆய்வர்கள் முதல் இயக்கத் தோழர்கள் வரை நா.வா. தமிழ் ஆய்வுலகிற்கு ஆற்றியப் பங்களிப்பினை இந்நூலை முழுமையாக வாசிக்கும் பொழுது அறிந்து கொள்ளலாம்.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி. சென்னை.**


## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!





**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**மார்ச் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6805 | 1721 | 361 | 7922 | 1915 | 5519 | 2719 |
| 6806 | 1722 | 359 | 7799 | 1916 | 3664 | 3760 |
| 6807 | 1725 | 364 | 7800 | 8815 | 8816 | 3659 |
| 3657 | 1726 | 362 | 7923 | 5751 | 2678 | 3666 |
| 6882 | 5528 | 363 | 3660 | 1917 | 2720 | 3656 |
| 5374 | 5529 | 2717 | 6885 | 1918 | 2721 | 1723 |
| 1724 | 360 | 2718 | 3658 | 5518 | 1920 | |

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00. / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

கட்டுரை



சே. கலைவாணி

# அய்யா வைகுண்டரின் சிந்தனையும் வழிபாடும் பற்றி பேராசிரியர் ந.முத்துமோகனின் பார்வை



பேராசிரியர் ந.முத்துமோகன் அவர்கள் மார்க்சியர்; இந்திய – தமிழ் மெய்யியல் அறிஞர். பேராசிரியர் நா.வானமாமலையின் ஆய்வு வட்டத்தைச் சேர்ந்தவர். முதுகலையில் வேதியியல் பயின்று, சோவியத் ருஷ்யாவில் மாஸ்கோ லுமும்பா பல்கலைக்கழகத்தில் தத்துவத்தில் ஆய்வு செய்து, முனைவர் பட்டம் பெற்றார். ஐரோப்பியத் தத்துவங்கள், இந்தியத் தத்துவங்கள், தமிழகத் தத்துவங்கள் குறித்து எழுதிய 120 கட்டுரைகள் 'மார்க்சியக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் 2007ஆம் ஆண்டு பெருந்தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. வேதாந்தத்தின் கலாச்சார அரசியல், மார்க்ஸ் – அம்பேத்கர்: புதிய பரப்புகளுக்கான தேடுகை, மார்க்சியம் பயில்வோம், தொடரும் மார்க்சிய விவாதங்கள், வர்க்க அரசியலும் அடையாள அரசியலும், இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும் முதலான மேலும் பல நூல்களையும் எழுதியுள்ளார்.

**அய்யா வைகுண்டர் பற்றிய ந.முத்துமோகன் அவர்களின் முன்னுரை:**

பேராசிரியர் ந. முத்துமோகன் அவர்களின் நெறியாள்கையில் ஆய்வுசெய்த த. கிருஷ்ணநாதன் என்பவர் 'அய்யா வைகுண்டரின் வாழ்வும் சிந்தனையும்' என்கிற நூலை வெளியிட்டுள்ளார் (2000). இந்த நூலுக்கு பேராசிரியர் ந. முத்துமோகன் ஒரு முன்னுரை எழுதியுள்ளார். இம்முன்னுரை "அய்யா வைகுண்டரின் சிந்தனை" என்கிற தலைப்பிலான கட்டுரையாக 'மார்க்சியக் கட்டுரைகள்' தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் மெய்யியல் சிந்தனைகள், மதச் சிந்தனைகள் ஆகியவற்றின் தத்துவ வலுவையும் அவற்றுக்கிடையே உள்ள



முரண்பாடுகளையும் பற்றி ஆராய்ந்து ந. முத்துமோகன் தொடர்ந்து எழுதிவருகின்றார். நவீன காலத்தில் தமிழ்நாட்டின் மதச் சிந்தனையாளர்களில் முக்கியமானவர் அய்யா வைகுண்டர். அவர் பிறந்து வளர்ந்த நிலப்பகுதியைச் சேர்ந்தவர் பேராசிரியர் ந.முத்துமோகன். அதனால் அவருடைய சிறுவயது முதல் அய்யாவழி பற்றிய அறிமுகம் உள்ளவர். சிறுவயதில் அய்யா வழி பனையேறும் நாடார்களின் வழிபாட்டுநெறி என்று உணர்ந்துகொண்டவர், அதன் பிறகு நா.வா. ஆய்வு வட்டத்தின் மூலம் அய்யா வழி, 'சீர்திருத்த இயக்கம்' என்று அறிந்துகொண்டார். மேற்கூறிய 'அய்யா வைகுண்டரின் வாழ்வும் சிந்தனையும்' என்கிற ஆராய்ச்சியை நெறிப்படுத்தும் போது அய்யா வழி குருமரபு சமயம், சாதி எதிர்ப்பு சிந்தனை, மாற்று சமய மரபு, அறிவொளி மரபு ஆகிய அம்சங்களை உள்ளடக்கி இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், அய்யா வழியின் சமகாலத் தன்மையையும் எதிர்காலத்தில் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதையும் கூறியுள்ளார்.

## இந்தியச் சமயங்களின் பண்புகள்

இந்தியச் சமயங்கள் இருவகையானவை. சங்கரர், ராமானுஜர், மாதவர் போன்ற ஆச்சாரியர்களைத் தலைமையாகக் கொண்டு உருவாக்கிய சம்பிரதாயங்கள் ஒருவகையானவை. புத்தர், மகாவீரர், கபீர், குருநானக், வள்ளலார் முதலான குருக்கள் உருவாக்கிய நெறிகள் மற்றொரு வகையானவை.

ஆச்சாரிய மரபு வைதீகம்; ஆதிக்கச் சமயங்கள். குரு மரபு அவைதீகம். மாற்று மரபு சமயங்கள். அதாவது ஆதிக்க எதிர்ப்பு சமயங்கள். இந்திய சமயங்களின் இத்தகைய பண்பு வேறுபாட்டை மார்க்ஸ் வெப்பர் என்னும் சமூகவியல் அறிஞர் பிரித்து நோக்கியுள்ளதை பேராசிரியர் ந. முத்துமோகன் எடுத்துக்காட்டுகின்றார். இத்துடன் நிற்காமல், ''குரு என்ற சொல்லையே வைதீகம் தனது எல்லைகளுக்கு வெளியிலுள்ள ஒன்றாகத்தான் கொண்டிருந்தது. ஆச்சாரியார் என்ற சொல் வைதீகத்தின் சொல். 'தெய்வத்தின் குரல்' நூலில் காஞ்சி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆச்சாரியாரையும் குருவையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்'' என்று கூறி, அவருடைய பின்வரும் கூற்றையும் எடுத்துக்காட்டுகின்றார்: ''பொதுவாக 'குரு' என்கிற பதம் ஸம்ப்ரதாயக் கட்டில் அதிகம் வராமல் அருளினால் எவருக்கும் எதையும் சொல்லிக் கொடுப்பவரைக் குறிப்பதாகவும், 'ஆச்சார்ய' மதம் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் கட்டுத் திட்டமுள்ளதாக போதனையை வித்வத்தினால் கொடுப்பவரைக் குறிப்பதாகவும் நினைக்கும் வழக்கமிருக்கிறது'' *(ப.எண்: 495, 496)*.

ஆச்சார்ய மரபு சாஸ்திரங்களின் அறிவை முறையாகப் பெறுவதன் வழி செயல்படுகின்றது. ஆனால், குரு மரபு அருள்நிலை நின்ற தன் அனுபவங்களை முதன்மையாகக் கொண்டு உருப்பெறுகின்றது. இவ்வாறு, குரு மரபு சம்பிரதாயக் கட்டுக்குள் வராது; அருள் நெறியில் நிற்பது. அதாவது, வைதீகத்தில் சம்பிரதாயக் கட்டு என்கிற சாதிக் கட்டுக்குள் நிற்காது, சாதிக் கட்டை அவிழ்க்க முனையும் அருள் நெறியே குரு மரபு.

இவ்வாறு இந்தியச் சமயங்களின் மற்றொரு பண்பு வெளிப்படுகின்றது. அதாவது, ஆச்சார்ய மரபு சமயங்கள் சாதிக் கட்டைப் போற்றிப் பேணுகின்றவையாகவும், குரு மரபைச் சேர்ந்த சமயங்கள் சாதிக் கட்டை எதிர்ப்பவையாகவும் உள்ளது.

குருமார்கள் என்பவர்கள் வைதீக சமயம் கட்டிவைத்துள்ள சாதியத்திற்கு எதிரானவர்கள். வைதீக சடங்குமுறைக்கு எதிரானவர்கள். இவர்கள் வேதம் பயிலாதவர்கள். எளிய மக்களிடம் பணிசெய்பவர்கள். ந.முத்துமோகன் அவர்கள் மாக்ஸ்வேபர் என்ற சமூகவியலாளர் குரு மரபுகளைப் பற்றி கூறியதை நினைவு கூருகிறார். ''உறைந்து, மாற்றங்களுக்கு இடம் தராமல் தேங்கிக் கிடக்கும் சமூகங்களில் சீர்திருத்தம் செய்ய விழையும் சில மனிதர்கள் குருமார்களாக உருவாக்கம் பெறுவார்கள். இவர்கள் ஊர்ஊராக அலைந்து திரிந்து வாழ்க்கையைத் தெரிந்து கொள்வார்கள். இவர்களுக்கு அமோகமான வெகுசன செல்வாக்கு இருக்கும். இறை உத்தரவின்பேரில் இவர்கள் சீர்திருத்தங்களை முன்மொழிவார்கள். மக்களைத் திரட்டிப் போராடுவார்கள். சமய மற்றும் சமூக வரலாற்றில் இவர்கள் தனித்துச் சொல்லத்தக்க தகுதி பெற்றவர்கள். சனாதன மதங்களின் பழமையை எதிர்ப்பதற்காக இவர்கள் இறை அனுபவமும், இறை அனுமதியும் பெற்று வருவார்கள். உண்மையில் இவர்கள் எதிர்ப்பாளர்கள், சீர்திருத்தவாதிகள். மாற்று மரபுகளை உருவாக்குபவர்கள்''.*(ப.238)* இவ்வாறாக மாக்ஸ்வேபர் சொன்ன கருத்துகளை ந.முத்துமோகன் அவர்கள் பதிவு செய்கிறார். இதனால் குரு மரபில்

தோன்றுகிறவர்கள் மக்களிடையே புதிய அறிவு ஒளியைப் பரப்புகின்றவர்களாகவும் உள்ளார்கள்.

ஆதிக்க எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, அறிவு ஒளி முதலான பண்புகளைக் கொண்ட குரு மரபினைச் சேர்ந்தவராக அய்யா வைகுண்டரும், அவருடைய சிந்தனையும் வெளிப்படுவதை பேராசிரியர் ந. முத்துமோகன் விளக்கியுள்ளார்.

### வைகுண்டரின் வாழ்க்கைச் சூழல்

தமிழகத்தில் தோன்றிய ஒரு மாபெரும் சீர்திருத்தவாதி முத்துக்குட்டி என்ற அய்யா வைகுண்ட சுவாமிகள். இவர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலகட்டத்தில் சாதி தலைவிரித்தாடியது. திருவிதாங்கூரில் சாதி வேறுபாடுகள் மனு தர்மத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தங்களுக்கான பெயர் வைக்கக் கூட உரிமை மறுக்கப்பட்ட நிலையில் அக்கால மக்கள் வாழ்ந்தனர். வைகுண்டருக்கு அவர்கள் வீட்டார் முடிசூடும் பெருமாள் என்று பெயர் வைத்தனர். ஆனால் பெருமாள் என்ற பெயர் உயர் வகுப்பாருக்கு உரியது என்றும் பெயரை மாற்றும்படியும் அரசாங்க உத்தரவு வந்ததன் பேரில் முத்துக்குட்டி என்று பெயர் மாற்றம் பெற்றது. அக்காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் பெயர்கள் குட்டி, குட்டன், மூக்கன் என்பதாகத் தான் இருக்கும். இப்போதும் ஆங்காங்கே இத்தகைய பெயர் விடும் மரபு தொடர்வதைக் காணமுடியும். மேலும் அக்கால ஒடுக்கப்பட்ட மக்களின் மீது சுமத்தப்பட்ட வரிக்கொடுமைகளும் ஏராளம். தலைவரி, முலைவரி போன்ற எண்ணற்ற வரிகள் விதிக்கப்பட்டுள்ளது. வரி சுமத்த இயலாதவர்களுக்கு கடுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்டது. இத்தகைய சூழலில் வைகுண்டர் வாழ்ந்த காரணத்தினால் இளமையிலேயே வைகுண்டர் முற்போக்கு எண்ணம் கொண்டவராக வாழ்ந்திருக்கிறார்.

### எளிய மனிதன் என்பதிலிருந்து குருவாக பரிணாமம் பெறுதல்

வைகுண்டர் தனது 17 ஆவது வயதில் திருமாலம்மை என்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்ணை மணந்து கொண்டார். சமூகத்தில் நடக்கும் கொடுமைகளைக் கண்டு மனமுடைந்து இருந்த முத்துக்குட்டிக்கு தீராத நோய் ஏற்பட்டது. அதனால் முத்துக்குட்டி தாயும் அவரது சொந்தங்கள் அனைவரும் அவரை திருச்செந்தூர் அழைத்துச் சென்றால் நோய் குணமடையும் என்று நம்பிக்கை கொண்டு அவரை தொட்டில் கட்டி திருச்செந்தூருக்கு நடைபயணம் மேற்கொண்டனர். அந்த நேரத்தில் முத்துக்குட்டி பலவாறாக சிந்தித்திருக்கக் கூடும். ஒடுக்கப்பட்டு பல்வேறு கொடுமைகளுக்கு உட்பட்டு கொண்டிருக்கும் தன் மக்களின் நிலையை எப்படியேனும் மாற்ற வேண்டும் என்று நினைத்திருக்கக்கூடும். இவ்விடத்தில் ந.முத்துமோகன் அவர்கள் குறிப்பிட்டது போல 'உறைந்து மாற்றத்திற்கு இடம் தராமல் தேங்கிக் கிடக்கும் சமூகங்களில் சீர்த்திருத்தம் செய்ய' முத்துக்குட்டி வைகுண்டராகப் பரிணமித்து இருக்கக்கூடும். ஒடுக்கப்பட்ட சமூகங்களில் சாதாரண ஒடுக்கப்பட்ட மனிதன் சென்று சீர்திருத்தம் செய்ய முயலும் போது அவன் பலவாறாக விமர்சிக்கக்கூடும். அதனால் முத்துக்குட்டி தன்னை திருமாலின் அவதாரமாக மக்கள் முன் நிலைநிறுத்தியிருக்க வேண்டும். முத்துக்குட்டி திருச்செந்தூர் கடலுக்குள் சென்று மூன்று நாட்கள் கடலுக்குள் இருந்து திருமாலிடம் இறை உபதேசம் பெற்று திரும்ப வைகுண்டராக வெளி வந்ததாக மக்கள் அனைவராலும் நம்பப்படுகிறது. இத்தகைய நிலையை ந.முத்துமோகன் அவர்கள் கூறும்போது ''இவர்கள் எடுத்து வைக்கும் முதல் அடிகளுக்குப் பழமை ஆதரவு தராதபோது இப்படி நேரடியாக இறை ஆதரவை அவர்கள் திரட்டிக் கொள்வார்கள். பண்பாட்டை ஜனநாயகப்படுத்த இறையனுபவங்களை இவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள்'' (ப. 237) என்று கூறியுள்ளார். இந்த வகையில் வைகுண்டரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகச் சீர்திருத்தம் செய்ய தன்னை இறை ஆசி உள்ள ஒருவனாக நிலைநிறுத்தியிருக்க வேண்டும்.

### வைகுண்டர் அன்பு வழி இயக்கம்

அய்யா வைகுண்டர் இயக்கம் எந்த மதத்தையும், எந்த சாதியையும் சாராத இயக்கம். இதனை ந.முத்துமோகன் அவர்கள் குறிப்பிடும் போது "இந்த நாட்டில் ஜாதி அமைப்பிற்கு எதிரான இயக்கங்கள் எல்லாமே வைதீக மதத்தை விமர்சிப்பதை முதல் பிரச்சினையாகக் கையாண்டு உள்ளன" (ப.237) என்று கூறுகிறார். வைகுண்டர் இயக்கமும் வைதீக சடங்கு ஆச்சாரங்களை எதிர்த்த இயக்கம். சாதிய வேற்றுமையை எதிர்த்த இயக்கம். வைகுண்டர் கடவுள் என்று ஓர் உருவத்தை வைத்து வழிபட விரும்பவில்லை. மாறாக ஒரு கண்ணாடியை வைத்து அதில் தெரியும் உருவம் 'நீயே கடவுள்' உன்னைத் தாண்டி ஒரு சக்தியும் இல்லை என்று மக்களுக்கு விளக்கினார். ஒடுக்கப்பட்ட மக்கள், ஒடுக்கப்படாத மக்கள், சமுதாயத்தில் பின்தங்கிய மக்கள் என்று அனைத்து மக்களையும் ஒன்று திரட்டினார். அவர்களுக்கு

பல்வேறு வகையான உபதேசங்கள் செய்தார். அவர் மக்களுக்கு செய்த உபதேசங்களில் சில.

**"தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே தர்மம்"**
**"தன்மானத்தைத் தாங்கியிரு என் மகனே"**
**"காணிக்கையிடாதீங்கோ காவடி தூக்காதீங்கோ**
**வீணுக்கு தேடுமுதல் விறுதாவில் போடாதீங்கோ"**
**"கோவில்கள் வைத்து குருபூசை செய்யார்கள்**
**பூவதுகள் போட்டு போற்றியே நில்லார்கள்**
**ஆடு கிடாய் கோழி அறுத்துப் பலியிடார்கள்**
**மாடு மண்ணுருவை வணங்கித் திரியார்கள்"**
**(அகிலத்திரட்டு)**

சாதிய வேற்றுமையை கலைய மக்கள் அனைவரும் ஒன்றாக அன்னம், தண்ணீர் புழங்க வேண்டும் என்று முத்திரி கிணறு, ஆங்காங்கே நிழல்தாங்கல் அமைத்தல், அனைவரும் ஒன்றாக ஒரே மாதிரியான உணவை சமைத்து ஒரே இடத்தில் அமர்ந்து சமமாக உண்ணுதல் போன்ற பல்வேறு செயல்களை நிறுவினார். தொட்டால் தீட்டு பார்த்தால் தீட்டு என்று சாதிய வேற்றுமை உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் தன்னிடம் வரும் அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் நெற்றியை தொட்டு திருநாமம் இட்டார். அக்காலத்தில் சாதிய வேற்றுமையை காட்டுவதற்காக மேல்சாதிக்காரர்கள் வரும் போது ஒடுக்கப்பட்ட சாதி ஆண்கள் தனது துண்டை இடுப்பிலோ, அல்லது கை இடுக்கிலோ வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலை இப்போது வரை ஆங்காங்கே ஒருசில இடங்களில் தொடர்வதைக் காணலாம். அதே போல் அக்காலத்தில் பெண்களும் தோள்சீலை அணிவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போதும் ஆண்கள் வைதீக கோயிலுக்குள் செல்லும் போது தனது துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொள்ளும் வழக்கம்தான் நிலவி வருகிறது. ஆனால் வைகுண்டர் தன்முன் வரும் ஆண்கள் அனைவரும் துண்டை தலையில் கட்டிக்கொள்ள வேண்டும் என்றும், தன்முன் வரும் பெண்கள் அனைவரும் கட்டாயமாகத் தோள்சீலை போட்டுத் தான் வர வேண்டும் என்றும் கூறினார்.

ந.முத்துமோகன் அவர்கள் சிறு வயதில் இருக்கும் போது வைகுண்டரைப் பற்றி குறிப்பிடும் போது அவர்கள் ஊர் அய்யா வைகுண்டர்ப் தேர் திருவிழாவைப் பற்றியும், அனைத்து மக்களுக்கும் சமமாக வழங்கும் உம்பாஞ்சோறு பற்றியும் நினைவு கூர்கிறார். பிறகு பேராசிரியர் நா.வானமாமலையின் மாணவனான பிறகு வைகுண்டர் மரபு சீர்திருத்த மரபு என்று நா.வானமாமலை கூறக் கேட்டும், வைகுண்டர் பற்றி பல கதைகளை கேள்வியுற்றும் அதனை சீர்திருத்த மரபாகப் பார்க்க முயல்கிறார்.

ந.முத்துமோகன் அவர்கள் வைகுண்டர் இயக்கம் பற்றிக் கூறும்போது ''அய்யா வைகுண்டர் இயக்கம் நேற்றைய தலித் மக்களின் இயக்கம், நேற்றைய ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கம்'' (ப.எண்.240) என்று கூறுகிறார். அக்காலத்தில் நாடார் சாதி உட்பட கிட்டத்தட்ட 18 சாதிகள் ஒடுக்கப்பட்ட சாதிகளின் வரிசையில் இருந்தது. வைகுண்டர் அனைத்து சாதி மக்களையும் ஒன்றுதிரட்டி மாபெரும் புரட்சி செய்தார். அந்த மக்களுக்கு அறிவு உணர்ச்சியூட்டி மக்கள் சுதந்திரமாக இருக்கவும் அவர்களின் சமூக மாற்றத்திற்கும் வித்திட்டார். மேலும் வைகுண்டர் இயக்கம் பற்றி கூறும்போது "இந்த இயக்கம் ஒரு நிறுவனமாக இறுகிவிடாமல் தொடர்ந்து அது ஓர் இயக்கமாக வளரவேண்டும். இன்றையச் சூழல்களில் இன்னும் ஒடுக்கப்பட்டோராக உள்ள மக்கள் பகுதியினரின் போராட்டங்களுக்கு அய்யா வைகுண்டரின் இயக்கத்தார் பகிரங்கமாக தமது ஆதரவைத் தெரிவிக்கவேண்டும். தொடர்ந்து நடைபெற்றுவரும் அடித்தள மக்கள் எழுச்சிகளுக்கு இவர்கள் ஆதரவு தெரிவிக்க வேண்டும். அவர்களுக்கு உம்பாஞ்சோறு வழங்கி அவர்களோடு ஒன்றுபட வேண்டும். தாழக்கிடப்பாரை தற்காப்பதே தர்மம்'' (ப.எண் 240) என்று முத்துமோகன் அவர்கள் விளக்கிக் கூறுகிறார்.

### முடிவுரை

மேலே எடுத்துக்காட்டியவற்றின் வழியாகப் பேராசிரியர் ந. முத்துமோகன், வைகுண்டர் இயக்கம் என்பது அனைத்து மக்களுக்கான அன்புவழி இயக்கம்; ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய சாதாரண மனிதன் குருவாகப் பரிணமித்து அனைத்து மக்களையும் ஒன்றுதிரட்டிய அன்புவழி இயக்கம் என்று தெளிவாக விளக்கியுள்ளார். ஆனால், இப்போது அய்யா வைகுண்டரையும் அவரது வழியையும் சனாதன வைதீக மரபைச் சேர்ந்தது என்று கட்டமைத்து மக்கள் மத்தியில் தவறான செய்திகளை இந்துத்துவ இயக்கங்கள் பரப்பி வருகின்றன. இதனை களைந்து பேராசிரியர் ந.முத்துமோகன் அவர்கள் குறிப்பிட்டது போல, ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்கான இயக்கமாக அய்யா வைகுண்டர் சிந்தனையும் வழியும் புத்துணர்ச்சி பெறவேண்டும்.

### பார்வை நூல்கள்:

1. அய்யா வைகுண்டரின் வாழ்வும் சிந்தனையும்; தா.கிருஷ்ணநாதன்
2. மார்க்சியக் கட்டுரைகள்; ந.முத்துமோகன்

●

**முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,**
**மாநிலக் கல்லூரி, சென்னை**

Article

# THE IMPACT OF COLONIALISM AND RESISTANT IN AMITAV GHOSH'S SEA OF POPPIES, RIVER OF SMOKE, AND FLOOD OF FIRE





**W. M. Seenivas Leandar Bias**
**&**
**Dr. V. Rajendran**



**Abstract**

Amitav Ghosh skillfully portrays the devastation caused by British policies, highlighting the coercion of Indian farmers into growing opium instead of essential crops, leading to widespread poverty and dependence. Amitav Ghosh gives voice to the various forms of resistance that emerged in response to colonial domination. The stories of Indian peasants who resisted British demands and the larger geopolitical tensions in China reflect the complexities of living under colonial rule. The trilogy illustrates the destructive nature of colonialism but also through historical events, Amitav Ghosh captures both the exploitation and the colonial period. Postcolonialism is a political movement aimed at eliminating inequalities between wealthy and poorer nations, within social structures like class and ethnicity, and across gendered hierarchies. In India, the caste system, which relegates the "oppressed" to the lowest rungs of society, is a stark example of inequality. Untouchable individuals, comprising around a quarter of the population, face menial jobs, segregation, and severe social discrimination, including denied access to education, healthcare, and public resources. They are also subject to economic, material, and sexual exploitation, often ignored by authorities. The caste system, deeply rooted in Hinduism, makes untouchable marginalization an intrinsic aspect of traditional social structures. Postcolonial politics stands against discrimination based on caste or race and seeks to transform historical differences into opportunities for positive intercultural exchange and social diversity.

Frantz Fanon, a key postcolonial thinker, often calls for resistance and resistance to colonial oppression, emphasizing violence as a necessary tool for decolonization.

**Keywords:** Amitav Ghosh, Colonialism, Imperialism, Hybridity, Resistance, Identity and Subaltern

**Introduction**

Amitav Ghosh Trilogy is about Opium farming, trade, and indentureship are areas of history that have not been extensively researched Opium initially came to India through Arab merchants and later spread to China and Southeast Asia. By the time Albuquerque arrived in India in 1509, opium use was already widespread. However, the Europeans, particularly the British, brought significant changes in the way opium was used. Before their arrival, opium was primarily used for medicinal purposes. the introduction of drug abuse increased the demand for opium, leading to its widespread non-medical use. Although opium abuse became associated with the East, it was the Western powers, . The British turned opium into a lucrative commodity, exporting vast quantities to China, where it led to addiction and the eventual outbreak of the Opium Wars. This marked a dark chapter in history, with the British leveraging opium as an economic and political tool to dominate trade in the region.

The British East India Company would provide farmers with advance payments for opium cultivation under the condition that they sell the entire harvest to the Company at prices set by them. Once the harvest was completed, the absence of food crops would push them further into debt, as they had to borrow money just to feed their families. This system trapped farmers in a vicious cycle of debt and dependency, highlighting the exploitative nature of the British-controlled opium trade. Farmers were forced to cultivate opium, "the English sahibs would allow little else to be planted; their agents would go from home to home, forcing cash advances on the farmers, making them sign /asámi/ contracts. It was impossible to say no to them" (SOP 30). China has shown little interest in European goods, as they view their own products, traditions, and food as superior. This trade imbalance caused a substantial outflow of silver from Britain. In response, the British started exporting Indian opium to China as a way to balance the trade deficit.

**Colonialism and Voices of Resistance**

Colonialism disrupts traditional feudal systems, limiting opportunities for merit and advancement for marginalized groups. However, it also opens new avenues for individuals to pursue their aspirations. The characters in the story recognize the influence of colonialism on their lives and offer a transnational identity. However, British colonialism reinforces the oppressive Indian feudal system, resulting in an "internal colonialism" that exacerbates the difficulties faced by subaltern groups, suffocating their opportunities for social mobility and personal freedom.This is emphasized in a conversation involving Bhyro Singh, who notes that the British were more concerned with maintaining caste purity than even the local nawabs and rajas. He highlights how British military recruitment rigidly adhered to caste distinctions, contrasting it with older Indian armies, where people could obscure their origins after a few years of service. Similarly, Ram Singh, father of Kesri Singh, points out that the East India Company had started interfering in areas that previous rulers had left untouched, such as crops and harvests. The Company's agents would push loans on farmers to encourage them to grow opium, but these loans often led to financial ruin.

Postcolonialism advocates for equal rights for all people to achieve the same levels of material and cultural well-being. However, the world today is marked by deep inequalities, rooted in the divide between Western and non-Western worlds. This divide was solidified in the 19th century with European empires controlling nearly all of the world's land surface. European colonial rule was often justified by anthropological theories, portraying colonized populations as inferior or in need of Western guidance. During the colonial period, people resisted European rule, both passively and actively. Race played a fundamental role in these justifications, with the West considering itself culturally superior. Colonial nations eventually gained national sovereignty and transitioned from colonies to independent postcolonial states. However, independence was often just the beginning, as many former colonies found themselves heavily dependent on their former colonizers. The global balance of power remained largely unchanged throughout the 20th century, with imperial countries continuing to exert dominance over their former colonies. Postcolonial theory often addresses the struggles

of marginalized groups, known as "the subaltern," such as the economically and politically oppressed.

Amitav Ghosh's novel, Raja Neel Rattan, portrays the socio-political and economic transformations brought by capitalist forces, disrupting traditional structures and reshaping Indian society and governance. Local authority became increasingly subjugated to external economic and political interests, highlighting the impact of capitalist forces on Indian society. Colonialism challenged the idea of home within feudal states, offering opportunities for personal growth and realization of ambitions, as depicted through various characters' experiences. Throughout the trilogy, the story explores the opium trade, which was largely dominated by British and American merchants, though some Indian and European traders were also involved. Before the First Opium War, China exported large quantities of tea and porcelain to other parts of the world, while importing very little, leading to a significant trade imbalance.

The British East India Company addressed this deficit by selling vast amounts of opium in China. This exploitative system leveraged India's pre-capitalist economy, using cheap labor from Indian peasants to produce surplus value (in the form of opium), which was then sold in China, another pre-colonial, pre-capitalist society. The profits were entirely absorbed by the colonizers, with both India, as the producer, and China, as the consumer, suffering from this exploitation. Paulette eventually escapes the oppressive environment of the Burnham household, freeing herself from Mr. Burnham's manipulations and avoiding an unwanted marriage proposal from Judge Candle bush. In River of Smoke, Amitav Ghosh highlights the European merchants' hypocrisy, as they promote free trade and market freedom while disregarding Chinese laws. This double standard is evident in the actions of opium traders in Canton, who seek to profit despite the negative impact of their trade on Chinese society. Alongside these merchants, British scholars and painters also travel to China, some in search of botanical treasures like the golden camellia. Paulette works as an assistant to Fitcher, a botanist who, like others, is drawn to China's unique flora. Fitcher, inspired by earlier plant hunters like James Cunningham, collects and transports plants back to England, demonstrating the increasing Western fascination with Chinese botanical specimens.

In Flood of Fire, Amitav Ghosh Expressed his views during the British colonial period, the East India Company coerced farmers in the Gangetic plains to cultivate opium. India became the world's largest opium producer, and British control over Indian agricultural practices, especially the cultivation of poppies, was driven by a desire to dominate trade with China. Opium, once refined, was smuggled into China, where it caused widespread addiction, poisoning the local population. At the same time, Indian farmers faced immense hardship as they were forced to grow poppy instead of essential food crops like wheat and vegetables. This left them trapped in cycles of poverty and debt, often to moneylenders and landowners, who were themselves financially beholden to the British. Governor-General Qishan had surrendered to many of the invaders' demands. This included agreeing to pay six million silver dollars as compensation for confiscated opium and granting the British the island of Hong Kong.

He came back with momentous news: Governor-General Qishan had capitulated; he had consented to many of the invaders' demands, including the handing over of a sum of six million silver dollars, as compensation for confiscated opium. He had also agreed to give the British the base they had long been clamouring for: the island of Hong Kong known as 'Red Incense Burner Hill' in Chinese official documents. (FOF 479)

**Conclusion**

In Amitav Ghosh's narrative, the forced cultivation of opium not only devastated agricultural communities but also created new global networks of exploitation. He describes how indentured laborers, uprooted from their homes. The passengers of the Ibis women from North India, Bengali landowners, Chinese sailors, and rural laborers each represent lives entangled by the global opium trade, their fates intertwined with the symbolic and literal effects of the poppy flower. This colonial policy of forced opium cultivation deeply harmed Indian farmers, leading to economic devastation and contributing to broader social turmoil across both India and China. In the 1830s, the British began using ships like the Ibis to transport indentured laborers. The term "girmitiya" comes from the indenture agreements these laborers signed, which were written on paper

in exchange for money paid to their families. Once taken, these workers often disappeared from their communities, leaving behind families who never saw them again. This mass displacement was tied to the rise of British power in India and the exploitation of Indian peasants. Chinese were plagued by addiction, Indian peasants bore the brunt of the economic impact, forced to abandon vital food crops for the lucrative but destructive opium trade. The novelist Amitav Ghosh explores this dark chapter of colonial exploitation in Sea of Poppies, highlighting the plight of Indian peasants and laborers, who were stripped of their livelihoods to serve British economic interests.

Amitav Ghosh portrays the struggles of individuals like Bahram, who prospered financially but were entangled in the colonial political party. Amitav Ghosh's narrative also captures the multiculturalism of this period, particularly through the use of language. In Mauritius, a creole language emerged, blending the languages of the indentured laborers with the local population. In contrast, in Canton, the mix of Chinese and English created a form of pidgin, reflecting the multicultural interactions by colonialism and trade. The forced cultivation of opium, the migration of laborers, and the influence of British colonialism in the 19th century are central themes in Amitav Ghosh's work, demonstrating the devastating impact of these policies on both Indian and Chinese societies. While the British profited from the opium trade, the burden was borne by the poor farmers of the Ganges plains, whose lives were destroyed by British exploitation.

**Works Cited**


1. Agrawal, Shuchi. "New Historicism: Voicing the Subalterns in Amitav Ghosh's The Flood of Fire." History Research Journal 5.6 (2019): 317-328.
2. Arora, Anupama. "The sea is history": Opium, colonialism, and migration in Amitav Ghosh's Sea of Poppies." ariel: a review of international english literature 42.3-4 (2011).
3. Batra, Kanika. "City Botany: Reading Urban Ecologies in China through Amitav Ghosh's River of Smoke." Narrative 21.3 (2013): 322-332.
4. Chaudhuri, Sneha Kar. "Opium and the Tufaan of (Neo-) Victorian Imperialism:: Review of Amitav Ghosh, River of Smoke." Neo-Victorian Studies 4.1 (2011): 132-143.
5. Ghosh, Amitav. Flood of Fire. Penguin Books, 2012.
6. Ghosh, Amitav. River of Smoke . Penguin Books, 2011.
7. Ghosh, Amitav. Sea of Poppies, . Penguin Books, 2008.
8. Gupta, T., and R. Gupta. "Narratology and history in Amitav Ghosh's River of Smoke." International Journal of Interdisciplinary and Multidisciplinary Studies 1.9 (2014): 37-39.
9. Khanna, Sanjeev. "Amitav Ghosh's Ibis Trilogy: A Study of History and Culture." The Literary Herald Journal 6.1 (2020): 50-61.
10. Misra, Nivedita. "The (His) Story of IBIS: A Reading of Amitav Ghosh's Sea of Poppies, River of Smoke and Flood of Fire." (2022).
11. Nayana, K., and K. T. Manjula. "Colonialism and Cross-Cultural Ties in Sea of Poppies." International Journal of Management, Technology and Social Sciences (IJMTS) 8.3 (2023): 220-228.
12. Singh, Lalan Kishore. "Critical Theory, History and Fiction: A Reading of Amitav Ghosh's River of Smoke." Amitav Ghosh: Critical Essays (2016): 189-198.
13. Turri, Beatrice Ambra. "Kesri Singh: the fight for identity between divergent and hegemonic warrior masculinities in Amitav Ghosh's Flood of Fire." ACME 75.1 (2022): 191-219.
14. Young, Robert JC. Postcolonialism: A very short introduction. Oxford University Press, 2020.



**W. M. Seenivas Leandar Bias,**
Ph.D Research Scholar, Department of English,
Maruthupandiyar College,
(Affiliated to Bharathidasan University,
Tiruchirappalli), Thanjavur - 613403
Tamilnadu, India.

**Dr. V. Rajendran,**
Research Advisor & Assistant Professor,
Department of English, Maruthupandiyar College,
(Affiliated to Bharathidasan University,
Tiruchirappalli), Thanjavur - 613403
Tamilnadu, India.

17.02.2025 அன்று சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் தலைமை அலுவலகத்தில் உங்கள் நூலகம் ஆசிரியர் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் இதழாசிரியர் த.ஸ்டாலின் குணசேகரன் மற்றும் ஆசிரியர் குழு உறுப்பினர்கள் க.சந்தானம், முனைவர் நா.இராமச்சந்திரன், முனைவர் பா.ஆனந்தகுமார், ப.கு.ராஜன், முனைவர் இரா.அறவேந்தன், முனைவர் இரா.காமராசு, முனைவர் உ.அலிபாவா மற்றும் என்சிபிஎச் பொது மேலாளர் எஸ்.சண்முகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 140/-




₹ 35/-




₹ 320/-


Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.**, 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

NCBH

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

## முன் வெளியீட்டுத் திட்டம்

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்




**தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு**

| | |
|---|---|
| **2400** பக்கங்கள்<br>விலை ~~ரூ.3000/-~~<br>முன் வெளியீட்டுத் திட்டத்தில்<br>**ரூ.1500/-** மட்டுமே!<br>(தபால் செலவு உட்பட) | 1/8 டெம்மி அளவு தரமான தாள்<br>கெட்டி அட்டை வடிவமைப்புடன்<br><br>முன்வெளியீட்டுத் திட்டத்தில் பணம் செலுத்திப் பதிவு செய்துகொள்ளலாம் |

NCBH

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in